ஏப்ரல், 1957

ஹேவிளம்பி - சித்திரை

40 நயா பைசா

மஞ்சரி

வழிபாட்டின் அவசியம்

நெய் பசுவின் உடலில் இருக்கிறது; ஆயினும் அது அவ்வுடலை வளர்ப்பதில்லை. பாலைக் கறந்து நெய்யாக்கிய பின்பு, அது பசுவுக்கு மருந்தாகிறது. இது போலவே இறைவன் உயிர்களிடத்து உறைகிருனுயினும், மாந்தர் வழிபாடு செய்தாலன்றி அவர்களுக்கு அவன் நன்மை பயப்பதில்லை.

—யாஜ்ஞவல்கியர்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்:
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்:
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. **பிரதி** ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணு). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி

பொருளடக்கம்

ஹேவிளம்பி - சித்திரை **ஏப்ரல் 1957**

வோட்டர்களின் தீர்ப்பு	.. .. ..	2
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	5
உணவே மருந்து	.. கே. லட்சுமண சர்மா	8
பர்மியக் குழந்தைகள்	.. பேரெண்ட்ஸ் மகஸீன்	11
பூத நாட்டியம்	.. .. ஜனப்ரகதி	16
கல்யாணப் போட்டோக்கள்	.. .. ஆந்த்ர ப்ரபா	19
அணுக்கப்பலும் கடிகாரமும்	.. .. யூஸிஸ்	22
சம்பல் நதிக் கரையில்	.. .. யோஜனா	25
காராமணியின் கதை	.. .. மேழிச் செல்வம்	27
கர்ணனும் அர்ஜுனனும்	.. .. ..	32
தோட்டங்களின் சரிதம்	.. .. மாத்ருபூமி	37
குதிரை ராஜ்யம்	.. ..ரா. ஸ்ரீ. தேசிகன்	40
பைரி ..	.. அமிர்த பஜார் பத்திரிகா	44
வில்வமும் வில்லியும்	.. .. அமுதசுரபி	49
சாணக்கியன் தந்திரம்	.. கொடுமுடி ராஜகோபாலன்	53
சனிக்குத் தனிக் கோயில்	.. .. தி மெயில்	58
ராஜாளி (ருஷியக் கதை)	கார்க்கி - கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி	61
பெரியவரின் உண்ணாவிரதம் (கதை)	ப்ரேம்சந்த் - சௌரி	67
உங்கள் உடல் (புத்தகப் பகுதி)	மாயவரம் எஸ். மகாலிங்கம்	57

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஏப்ரல் 1957 [இதழ் 4

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

வோட்டர்களின் தீர்ப்பு

★

பிரம்மாண்டமான பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது. லோகசபையில் காங்கிரஸ் மெஜாரிட்டி பெற்றுவிட்டது. ராஜ்யங்களில் இரண்டே இரண்டைத் தவிர, மற்றவற்றிலெல்லாம் காங்கிரஸுக்குத்தான் அசைக்க முடியாத மெஜாரிட்டி ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் ஐந்து வருஷத்துக்குக் காங்கிரஸே மத்திய சர்க்காரையும் மாகாண சர்க்கார்களில் மிகப் பெரும்பாலானவற்றையும் ஏற்று ஆளப் போகிறது. நாட்டிலே நிலைத்த சர்க்கார் ஆண்டுவர, இதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவேதான் இப்படிக் காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்தது என்று நாம் மதிக்கிறோம். வோட்டர்களின் புத்திசாலித்தனமான தீர்ப்பு இது.

தேர்தல் எப்படி நடந்தது? வோட்டுக்கள் எப்படி விழுந்தன? - இந்த விஷயங்களைப்பற்றி இப்போது ஒரு கட்சியாரை மறு கட்சியார் குறை கூறத் தேவையில்லை. வகுப்பு உணர்ச்சி, பணப் பலம், பலவிதச் செல்வாக்கு, பொய்ப் பிரசாரம் இப்படிப் பல காரணங்களால் வோட்டுக்கள் விழுந்திருக்கலாம். அப்படிப்பட்ட வோட்டுக்கள் ஒரு கட்சிக்கு மட்டுமே விழுந்தன என்று சொல்ல முடியாது. எல்லாக் கட்சிக்குமே ஓரளவு அப்படிப்பட்ட வோட்டுக்கள் விழுந்திருக்கின்றன. பொதுவாகப் பார்த்தால், மக்களுக்கு இன்னும்

'மஞ்சரி' விலை மாறுதல்

ஏப்ரல் முதல் தேதி தொடங்கி நயா பைசா அமலுக்கு வருவதையும், காகித விலை ஏறியிருப்பதையும் உத்தேசித்து, 'மஞ்சரி' வருஷச் சந்தாவை ரூ. 4/75 ஆகவும், தனிப் பிரதியின் விலையை 40 நயா பைசாவாகவும் மாற்றியிருக்கிறோம். நயா பைசாவால் தனிப் பிரதியின் தபால் கட்டணத்தில் அரை நயா பைசா கூடிவிடுவதையும் நண்பர்கள் கவனிக்கவேண்டும். இந்த மாறுதலால் சந்தாதார்கள் இனி நாலணாவும், தனிப் பிரதி வாங்குவோர் சுமார் $2\frac{1}{2}$ நயா பைசா ($\frac{1}{2}$ அணா) வும் கூடுதலாகச் செலுத்த வேண்டியிருக்கும். 'மஞ்சரி'யின் வாழ்விலும் வளர்ச்சியிலும் சிரத்தை கொண்ட வாசகர்கள் இந்தச் சிறு சிரமத்தைப் பொருட்படுத்தாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

காங்கிரஸிடந்தான் பெரிய அளவில் நம்பிக்கை இருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் முடிவு காட்டி விட்டது.

கேரளத்தில் ஏற்கனவே கோளாமுன நிலைமை இருந்தது; ஜனுதிபதியின் ஆட்சி நடக்க வேண்டிய தாயிற்று. இப்போது அங்கே கம்யூனிஸ்டுகள் பலம் பெற்று விட்டார்கள். அவர்கள் சர்க்காரை அமைக்க முனைந்திருக்கிருர்கள். ஒரிஸ்ஸாவில் இதற்கு நேர்மாருன நிலை. அங்கே பிரபுக்களான கணதந்திர பரிஷத் கட்சியார் பலம் பெற்றிருக்கிருர்கள். பிறருடன் கூட்டுச் சேர்ந்து அவர்கள் அங்கே பதவி ஏற்க முயலலாம். மற்ற இடங்களிலெல்லாம் காங்கிரஸே ஓங்கி யிருக்கிறது.

பல ராஜ்யங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் காங்கிரஸ் ஆட்சி நடக்கும்போது, இரண்டே இரண்டு சிறு ராஜ்யங்களில் வேறு சர்க்கார்கள் ஏற்படுவது ஒரு புதிய அநுபவமாகும். அவை-முக்கியமாகக் கம்யூனிஸ்ட் சர்க்கார்-மத்திய சர்க்காருடன் முரண்படாமல், மத்திய சர்க்காரின் பொதுக் கொள்கைகளுக்கு ஊறு செய்யாமல் நிர்வாகம் புரியுமா என்பது ஒரு பிரச்னே. ஆனுல், இந்த மாதிரி ஒரு பரீட்சை நடப்பது-காங்கிரஸ் சர்க்காருக்கு மாற்றுச் சர்க்கார் ஏற்படுவது-ஒரு விதத்தில் நல்லது தான். இந்த மாதிரி ஓர் அரசியல் அநுபவம், நமக்குச் சில விஷயங்களில் புதிய கண் திறப்பைத் தரும்.

உலகத்திலேயே சிறந்த முறையில் பார்லிமெண்டரி ஜனநாயகம் பிரிட்டனிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் நடப்பதாகச் சொல்லலாம். அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி, ரிபப்ளிக்கன் கட்சி என்ற இரண்டும், பிரிட்டனில் கன்ஸர்வடிவ் கட்சி, தொழில் கட்சி என்ற இரண்டும் இருக்கின்றன. சுயேச்சை என்ற உதிரிகளோ வேறு கட்சிகளோ இல்லை. இப்படி இரண்டு கட்சிகளே உள்ள அந்த நாடுகளில், ஒரு கட்சி போனுல் மறு கட்சி ஆட்சிக்கு வருகிறது. இப்படி ஆட்சி நடப்பது, லட்சிய ஜனநாயகமாக இல்லாதிருக்கலாம். ஆயினும், வீண் குழப்பங்கள் இல்லாமல், ஜனங்களின் சம்மதத்தை ஓரளவு பெற்று, யதேச்சாதிகாரத்துக்கு இடம் இல்லாமல், பொறுப்புடன் ஆட்சி நடத்தக் காரிய சாத்தியமானது இந்தப் பார்லிமெண்டரி ஜனநாயகந்தான். இத்தகைய முறையில் நம் நாட்டில் இன்னமும் காங்கிரஸும் அதற்கு ஓர் எதிர்க்கட்சியுமாகப் பார்லிமெண்டரி ஜனநாயகம் இந்தத் தேர்தலிலும் உருவாகாதது மட்டும் அதிருப்தி தரும் நிலைதான்.

சரியான எதிர்க்கட்சி உருவாகாததற்குக் காங்கிரஸைக் குற்றம் கூறிப் பயனில்லை. ஜனங்களிடம் பரவலாக வேரூன்றி, நாடு முழுவதற்கும் பொதுவாக, முற்றும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அமைந்த ஒரு கட்சியே எதிர்க்கட்சியாக அமைய முடியும். அது நம் அரசியல் அமைப்புக்கு உட்பட்டும், சட்ட வரம்பை மீருமலும், உள் ஒன்று வைத்துப் புறம்பு ஒன்று செய்யாமலும் பொறுப்போடு நடந்துகொள்ளுவதாயிருக்கவேண்டும். இந்த நோக்கில் பார்த்தால், பிரஜா ஸோஷலிஸ்ட் கட்சி ஒன்றுதான் எதிர்க்கட்சியாக வளரக்கூடியது; வளர வேண்டும். இந்தக் கட்சி மற்ற இடங்களில் இந்தத் தேர்தலில் அவ்வளவாக வலுப் பெருவிட்டாலும், உத்தரப்பிரதேசம், பிஹார், பம்பாய் ஆகிய ராஜ்யங்களில் ஓரளவு பலம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். மத்திய சர்க்காரின் ஆட்சியை ஓரளவு கண்காணிக்கக் கூடியவை இந்த மூன்று ராஜ்யங்களுந்தான் என்று கூறுகிருர்கள். இந்த உண்மையும் இங்கே கவனிக்கத் தக்கது.

காங்கிரஸ் கட்சி வெற்றிப் பெருமிதங் கொண்டு, யதேச்சாதிகாரமாய் நடக்க முயலாமல், எதிர்த்தரப்பில் உள்ளவர்களை யெல்லாம் அரவணைத்துக் காரியம் செய்வது முக்கியம் என்பதை முடிவாக இங்கே வற்புறுத்த விரும்புகிருேம். அதோடு, தேர்தலுக்குப் பின் கட்சி ரீதியில் நாடெங்கும் மக்களுடன் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள அவர்கள் சமீ

பத்தில் தவறிவிட்டார்கள். இனியாவது அப்படி இல்லாமல், மக்களோடு பழகி, அவர்களுடைய அரசியல் பிரக்ஞையை வளர்த்து, ஜனநாயகப் பயிர் தழைத்து ஓங்கச் செய்வது முக்கியமாகும். ஆட்சி நடப்பதுமட்டும் போதாது; ஜன நாயக முறைகளுக்கு அடிகோலி வலுத் தேடுவதும் காங்கிரஸ் கட்சி யாரின் முக்கியமான கடமையாகும்.

பாகிஸ்தான் அரசியல் நிலைமை

மேற்குப் பாகிஸ்தானில் திடீ ரென்று டாக்டர் கான் சாயபுவின் மந்திரி சபைக்கு ஆபத்து நேர்ந்துவிட்டது. அவ ருடைய ரிபப்ளிக்கன் கட்சி எப்படி உருவாயிற்று என்பது எல்லாருக் கும் தெரிந்ததே. முஸ்லிம் லீக் கட்சியில் பிளவு ஏற்பட்டு ஒரு நாள் ரிபப்ளிக்கன் கட்சி பெரும் பான்மைக் கட்சி ஆயிற்று. அதே மாதிரி சமீபத்தில் மேற்குப் பாகிஸ்தான் ஒரே பகுதியாக இருக்கக்கூடாது, முன் போல் மொழிவாரியாகப் பிரிக்க வேண் டும் என்ற காரணத்தால் ரிபப்ளிக் கன் கட்சியிலிருந்து பலர் விலகி முஸ்லிம் லீக் கட்சி, தேசீயக் கட்சி இந்த எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து கான் சாயபுவின் மந்திரி சபைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப் பார்த் தார்கள். அதே சமயம் கான் சாயபு கவர்னரிடம் தம் மந்திரி சபையின் ராஜீநாமாவைச் சமர்ப் பித்தார். உடனே அங்கே தம் ஆட்சி ஏற்பட்டுவிட்டதாகப் பாக் ஜனதிபதி இஸ்கந்தர் மிர்ஸா பிர கடனம் செய்துவிட்டார். இதனுல் அங்கே பெரும் பரபரப்பு மூண் டிருக்கிறது. ஒரு புறம் காஷ்மீரில் இந்தியாவை 'ஜனநாயக ரீதியில் வாக்கெடுக்க அநுமதிக்கவில்லை' என்று குறை கூறிக்கொண்டு அதே சமயம் ஜனநாயக அமைப்புக் குலை யும்படி பாகிஸ்தானில் காரியங்கள் நடக்கின்றன. இந்த நிலையில்தான் காஷ்மீருக்கு ஐ. நா. தூதர் யாரிங் வந்து சேர்ந்தார்! பண்டித நேரு பாகிஸ்தானின் தற்போதைய அர சியல் நிலைமை குறித்து அநுதாபம் தெரிவித்தபோது பாக் அயல் நாட்டு மந்திரி ஃபெரோஸ் கான் நூன், "இவர் யார் எங்கள் உள் நாட்டு விவகாரத்தில் தலையிட? அப்படியானுல் நாகர் கிளர்ச்சி விஷயத்தில் நாங்களும் அநுதாபம் தெரிவிக்கலாமா?" என்று சீற்றம் கொள்ளுகிருர். இந்தியாவுடன் இணைந்த காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் அரசியல்வாதிகள் தலையிட மட்டும் எங்கிருந்து உரிமை வந்ததோ தெரியவில்லை! இதுதான் விசித்திரமாக இருக் கிறது. இதை மேற்கு வல்லரசுகள் ஆதரிப்பது அதையும் விட விசித் திரம்!

நடிகையின் படிப்பு

ஒரு நடிகைக்கு எவ்வளவு படிப்புத் தேவையோ அவ்வளவும் நான் படித்துவிட்டேன்; ஒப்பந்தங்களில் அழகாய்க் கையெழுத்துப் போட நான் கற்றுக்கொண்டு விட்டேன். —ஹெர்மியோன் கின் கோல்டு

கமிட்டியின் கைவேலை

ஒட்டகத்தின் உருவத்தைப் பார்த்தால் அது ஏதோ ஒரு கமிட்டியின் கைவேலை என்று தோன்று கிறது. —'இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

செகந்தராபாது, ஹைதராபாது.

இந்த நண்பரின் பெயர் இன்னதென்று குறிக்க முடியவில்லை. ஒரு பெயராக இருந்தால்தானே! இவர் பல நாளாகவே பல பெயர்களுடன் பல பேர் எழுதுவதுபோல் பல பிரச்னைகளை எழுதி விடை கேட்கிறார். ஆண் பெயர் சூடுகிறார்; பெண் பெயர் சூடுகிறார். பல பெயர், பல கவர், பல விலாசம்! ஆனால் எல்லாம் ஒரே கையெழுத்து! இவர் கேட்கும் கேள்விகளிலிருந்து ஒன்று தெளிவாகிறது: இவர் உள்ளக்கோளாற்றினால் தவிக்கிறார். இவர் நேரில் வந்து என்னைச் சந்திப்பாரானால், இவருடைய பிரச்னைகள் அனைத்துக்கும் தக்க விடை கொடுத்து இவருடைய உள்ளக் கோளாற்றையும் குணப்படுத்துவேன்.

பராங்குசம், மாயூரம்.

கேள்வி: பிரசவித்து ஆறு மாதமாகிறது. கருத் தரித்து ஏழாவது மாதம் தொடங்கி இதுவரையில் வலது நாசியிலிருந்து கட்டிச்சளி ஒரு மணி நேரத்துக்கு ஒரு தரம் சிந்த வேண்டியிருக்கிறது.

விடை: இந்த நோய்க்கும் கருத்தரிப்புக்கும் பிரசவத்துக்கும் சம்பந்தமில்லை. மூக்கை ஒட்டிய குகைகளில் சீழ் பிடித்திருக்கலாம். காது-மூக்கு வைத்திய நிபுணரைக் கேட்க வேண்டும்.

பாலசுப்பிரமணியன், சிங்காநல்லூர்.

கே-1: தூங்கி எழுந்தவுடன் வெறும் வயிற்றில் ஒரு குவளை நீரில் ஓர் எலுமிச்சம் பழம் பிழிந்து அருந்தலாமா? இதனால் உடலுக்கும் பற்களுக்கும் ஏற்படும் நன்மை தீமைகள் எவை?

ப: எலுமிச்சம் பழம் கலந்த நீரைப் பல் கூசாமல் இருந்தால் அருந்தலாம். அதில் வைட்டமின்-ஸி நிரம்ப இருப்பதால், உடம்புக்கும் பல்லுக்கும் நலம் அளிக்



கும்; ஈறு வலுக்கும். ஆனால் அந்த நீரை அதிகாலையில் எழுந்தவுடன் அருந்த வேண்டும் என்பதில்லை.

கே-2: பல்லின் எனமல் தேய்வதற்குக் காரணம் என்ன? அப்படித் தேய்ந்த பல்லைப் பாதுகாப்பது

எப்படி? எனமல் தேயாதிருக்க என்ன செய்ய வேண்டும்? ஒரு குவளை வெந்நீரில் ஒரு ஸ்பூன் உப்பைக் கலந்து கொப்புளிக்கலாமா? எனமலுக்கு ஊட்டம் அளிக்கும் உணவு வகைகள் என்ன என்ன?

ப: பல்லைச் செங்கல் பொடியால் தேய்ப்பவர்கள் உண்டு. வெற்றிலை, சுண்ணும்பு, புகையிலை அதிகமாய்ப் போடுவது சிலருடைய பழக்கம். இந்த இரண்டு பழக்கங்களும் எனமலைத் தேய்த்துவிடும். வெற்றிலையில் உள்ள அமிலமா, சுண்ணும்பின் காரமா எது இப்படி எனமலைத் தேய்த்து விடுகிறது என்பதை ஆராய வேண்டும். புகையிலையும் இதற்குக் காரணமாயிருக்கலாம். எனமல் தேய்ந்த பல்லைக் காப்பது இயலாத காரியம். எனமல் தேயாது காப்பதற்கு முதலில் மேலே சொன்ன பழக்கங்களைக் கைவிட வேண்டும். பச்சைக் கறி வகைகளை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டும். வைட்டமின்–டி அடங்கிய எண்ணெய்களைச் சாப்பிடுவதால், கால்சியம் உடம்பில் சேரும்; பல் வலுப் பெறும். சிறு வயசில் இந்தப் பாதுகாப்பு வெகு அவசியம். பல் இடுக்கில் உணவுத் துகள் சேராமல் ஆகாரம் சாப்பிட்டவுடன் வாயை நன்ருகக் கொப்புளிக்க வேண்டும். வெந்நீரில் உப்பைக் கலந்து கொப்புளிப்பது சிறந்த பழக்கம். ஆனல் ஒரு ஸ்பூன் உப்பு அதிகம். அவ்வளவு வேண்டாம்.

பல்லுக்குச் சுண்ணும்புச் சத்து இன்றியமையாதது என்ருல், வெற்றிலையும் சுண்ணும்புமாகப் போட்டுக்கொண்டால் எனமல் தேய்வானேன் என்று கேட்கலாம். அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷம்.

சி. கா. சென்னை.

கே: கல்யாணம் ஆகி ஐந்தாண்டு ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. மனைவிக்கு வயசு 22. கருப்பையில் சிறு ஆப்பரேஷனும் நடந்து ஓர் ஆண்டு ஆயிற்று.

ப: வயசு 22 தான். ஆகையால் இன்னமும் ஒன்று, இரண்டு ஆண்டுகள் பொறுத்துப் பார்க்கலாம்.

ஆர். எஸ். சொக்கலிங்கம்.

கே: வயசு 20; உயரம் 5 அடி 3 அங்குலம்; எடை 98 பவுண்டு. எப்போதும் சோம்பலாயிருக்கிறது. காலையில் எழுந்தாலும் மறுபடியும் படுத்துக்கொள்ள வேண்டும்போல் தோன்றுகிறது. சுறுசுறுப்பாயிருக்க என்ன செய்ய வேண்டும்?

ப: ஆகாரத்தில் கனியும், பாலும், மோரும் அதிகம் சேர்க்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் வெளியே சென்று இரண்டு, மூன்று மைல் நடக்க வேண்டும். குடலில் கொக்கிப் புழு தங்கியிருக்கிறதா என்று அறிய மலத்தைச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். அது இருந்தால் தக்க பரிகாரம் செய்துகொள்ள வேண்டும்.

சக்திவேல், தென்பத்தூர்.

கே-1: வயசு 22. உடம்பில் அடர்த்தியாக ரோமம் வளர்ந்திருக்கிறது. இடது கன்னத்தில் மச்சம் இருப்பது அதிருஷ்டத்தின் குறியா?

ப: ரோம அடர்த்தி குடும்பவாகாய்த்தான் இருக்க வேண்டும்.

மச்சம் அதிருஷ்டத்தின் குறியாக இருந்தால், வருங்கால நிகழ்ச்சிகளைக் கவனித்து, நண்பரே அதைச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கே-2: விக்கலுக்கு என்ன செய்வது?

ப: விக்கல் அநேகருக்குச் சாதாரணமாய் ஏற்படக்கூடியது. அதற்குத் தண்ணீர் அருந்தினல் போதும். விக்கல் துயரப்படுத்தும் அளவு இருந்தால், அது வியாதியாகும்.

வைத்தியரை நேரில் கேட்டுக் கொள்ள வேண்டும்.

கே-3: மிஞ்சி போட்டுக்கொள்ளும் கால் விரல் நீண்டிருப்பதன் மர்மம் என்ன?

ப: அதில் அப்படி மர்மம் ஒன்றும் இருப்பதாய்த் தெரியவில்லை.

அரங்கசாமி, கோவை.

கே: காலையில் எழுந்ததும் தலை சுற்றுகிறது. சாப்பிட்டவுடனே நெஞ்சு வலிக்கிறது. பல கஷ்டங்கள்.

ப: நண்பரைப் பற்றி முழு விவரங்கள் தெரிய வேண்டும். வைத்தியரை நேரில் சந்தித்து அறிய வேண்டும்.

கே. ஜி. சாமி, சாத்தூர்.

கே-1: ஆப்பத்துக்கு மாவு அரைத்த பிறகு புளிக்க வேண்டும் என்கிறார்களே; இதனால் என்ன நன்மை?

ப: ஆப்ப மாவு புளிக்கும்போது அதில் சோடா உப்பைக் கலவை செய்தால், ஆப்பம் சுடும்போது பஞ்சு போலாகும். மிகவும் ருசியாயிருக்கும். வேறு நன்மை ஒன்றும் இல்லை.

கே-2: ரத்த அழுத்தம் எப்படி உண்டாகிறது?

ப: வாழ்க்கைக் கவலைகள் அதிகமாகும்போது, ரத்த அழுத்தம் உண்டாகிறதென்பது. சிலருடைய அபிப்பிராயம். இதற்கு ஆதாரம் தெளிவாயில்லை. சிலருடைய தேக அமைப்பினால் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு மருந்துகள் இருக்கின்றன. ஆனால் உணவில் உப்பைக் குறைப்பதால் பலர் நன்மை அடைகிறார்கள்.

மா. கணேசன், மயிலம்.

கே: 'திக்குவாய்'ப் பேச்சுக்கு என்ன காரணம்?

ப: அதைரியமே காரணம். சிறு குழந்தையாயிருக்கும்போது முதியோர்கள் அதட்டி மிரட்டி வளர்ப்பதால், தன்னம்பிக்கை இழந்து பேசவே பயந்து போய்த் 'திக்குவாய்' ஏற்படக்கூடும். தக்க சிகிச்சை செய்து குணமாக்கிக் கொள்ளலாம். எவரும் இராத திறந்த வெளியில் உரக்கப் பேசிப் பழக வேண்டும். முதலில் மூச்சிழுத்து மார்பை விரித்துக்கொள்ள வேண்டும். பின்பு மெதுவாகப் பேசிப் பழக வேண்டும். பெரிய வீடாயிருந்தால், வீட்டிலேயே ஒரு பெரிய அறையில் இருந்துகொண்டு பழகிக்கொள்ளலாம்.

வி. எம். ராஜன், குடியாத்தம்.

கே: காலில் மயிர் வளர்வது நல்லதா?

ப: காலில் மயிர் வளர்வது இயல்பே. அதை நீக்க முயல வேண்டியதில்லை. நாவிதனின் உதவியால் நீக்கிக்கொள்ளலாம்.

கே. சாந்தா, திருநெல்வேலி.

கே: தேரைக்கு நச்சு உண்டா? கர்ப்ப ஸ்திரீமீது தேரை விழுந்தால், குழந்தை தேரைபோல் இளைக்குமா?

ப: தேரையும் தவளையும் ஒரே வகுப்புப் பிராணிகள். ஆனால் ஒரு வகைத் தேரையின் சருமத்தின் மீது சுரக்கும் நீர் நச்சுக் குணம் உடையது. இந்த நீரைத் தடவி அம்பு நுனியை விஷமுள்ளதாக்குகிறார்கள் சில ஜாதியினர். ஆனால் கர்ப்ப ஸ்திரீமீது தேரை விழுந்

தால் குழந்தை தேரைபோல் மெலிந்து பிறக்கும் என்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை. தேரையை மிதிக்கும்போது ஒரு வகை அருவருப்பும், தேரை திடீரென்று தாவிச் செல்லும்போது அச்சமும் உண்டாவது இயல்பே. இதனாலேயே தேரைக்கு இந்த அபவாதம் ஏற்பட்டிருக்கிறது.

உணவே மருந்து

கே. லட்சுமண சர்மா

மகாத்மா காந்தியிடம் தொடர்பு கொண்ட பெரியோர்களில் ஒருவர் இந்த ஆசிரியர். இயற்கை வைத்திய நிபுணர். இவர் எழுதியுள்ள 'அநுபவ இயற்கை வைத்தியம்' (ப்ராக்டிக்கல் நேச்சர் க்யூர்) என்ற ஆங்கில நூலிலிருந்து எடுத்த ஒரு பகுதி இந்தக் கட்டுரை. இயற்கை வைத்தியத்தின் முக்கிய தத்துவத்தையும் பல நோய்களுக்கு இயற்கை வைத்தியம் செய்துகொள்ளும் முறைகளையும் மிக விரிவாக இந்த நூலில் அவர் விவரித்திருக்கிறார். இயற்கை வைத்தியத்தை முற்றும் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, ஆரோக்கிய சம்பந்தமாக இதில் உள்ள அரிய விஷயங்களைச் சகல மக்களும் அறிந்துகொள்வது அவசியமாகும்.

வேதாந்த சாஸ்திரங்களில் ஸ்தூல சூட்சும சரீரங்களின் படைப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அதை அநுசரித்தே இயற்கை வைத்திய முறைகளை நிர்ணயிக்கிறோம். படைப்பு என்பது வெகு காலத்துக்கு முன் என்றோ ஒரு நாள் நிகழ்ந்தது அல்ல; படைப்பு இந்தக் கணத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதை நாம் உணரவேண்டும்.

பரமாத்மாவிடமிருந்து சூட்சுமமான ஆகாசம் பிறந்தது. ஆகாசத்திலிருந்து காற்று உதித்தது. காற்றிலிருந்து ஒளியும், ஒளியிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும், மண்ணிலிருந்து செடி கொடி முதலிய உணவுகளும், உணவுகளிலிருந்து ஜீவன்களும் உண்டாயின. இந்தப் பரிணாம சக்கரத்தின் வரிசைக் கிரமத்தை நாம் கவனிக்க வேண்டும்.

மண்ணும் மற்ற நான்கு பூதங்களும் மோதுவதால் செடிகள் உண்டாகின்றன. ஆரோக்கியமான உணவிலே ஐந்து பூதங்களின் குணங்களும் அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட உணவுகளே நல்ல உணவுகள்; மற்றவையெல்லாம் தீய உணவுகள். ஆகவே, சகல உடம்புகளிலும் ஐம்பூதங்களும் இருக்கின்றன. இந்த ஐந்து மூலாதாரங்களும் ஒன்றுக்கொன்று சரியான விகிதத்தில் இருந்து கொண்டிருக்கும் உடம்புகளே ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழும்.

மண்ணோடு உடம்புக்கு உள்ள சம்பந்தம் நேரடியானது அல்ல; உணவின் மூலமே ஏற்படுகிறது. மற்ற நான்கு பூதங்களோடும் நேரடியான சம்பந்தத்தை உடம்பு பெற்றிருக்கிறது. ஆகவே, மண் சிகிச்சை என்பது உணவுச் சிகிச்சையிலிருந்து அந்நியமானது அல்ல.

காப்பிரைட்: ப்ராக்டிக்கல் நேச்சர் க்யூர் (ஆங்கிலம்: பத்தொன்பதாவது பதிப்பு); வெளியிட்டவர்: நேச்சர் க்யூர் பப்ளிஷிங் ஹவுஸ், கணேஷ் நகர், புதுக்கோட்டை.

ஆரோக்கிய மூலாதாரங்கள் ஐந்தில் ஒன்றுன உணவும் சிகிச்சைக்கு ஒரு சாதனமாயிருக்கிறது. உணவின் உதவியில்லாமல் சிகிச்சை சாத்தியம் இல்லை.

உபவாசம் கிடக்கும்போது, ஆகாசம் நிறையக் கிடைக்கிறது. உண்ணும்போது, ஆகாசம் குறைகிறது. அகாலத்திலோ மிதமிஞ்சியோ உணவு உண்டால், ஆகாசத்தின் உதவி தடைப்பட்டுப் போகிறது; அதனுல் ஜீவ சக்தி குறைகிறது; நோய் குணமாகாது வலுக்கிறது. ஐந்து பூதங்களிலும் ஆகாசத்தின் சக்தியே மிகவும் உயர்ந்தது; முக்கியமானது; நுட்பமானது. மற்றவை, முதலில் சொன்ன வரிசைக் கிரமப்படி அடுத்தடுத்தே முக்கியத்துவம் வகிக்கின்றன.

ஒரு பறவைக்கு இரண்டு இறக்கைகளும் முக்கியமாகும். இதைப் போலவே, தேக ஆரோக்கியத்துக்கும் வைத்தியத்துக்கும் உபவாசம், பத்திய உணவு இரண்டுமே முக்கியம். ஆனுல், பறவை இரண்டு இறக்கைகளையும் ஏக காலத்தில் உபயோகிக்கிறது; மனிதனே உணவையும் உபவாசத்தையும் மாற்றி மாற்றியே பிரயோகிக்க வேண்டியிருக்கிறது. ஆழ்ந்த நெடுநாள்பட்ட நோய் கொண்ட ஒருவன், இந்த விஷயத்தை மிகவும் முக்கியமாய்க் கவனம் வைக்க வேண்டும். உணவையே முற்றும் நம்பினுல், அப்படிப்பட்ட நோய்கள் குணமாக நெடுங் காலம் பிடித்து விடுகிறது. எனவே, நெடு நாள் பட்ட நோயாளி, சில நாளைக்கு ஒரு தரம் உபவாசம் கிடப்பது அவசியம்.

உணவு உட்கொள்ளுவதிலும் கணக்காயிருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினுல், உணவு நன்மை தராது. உணவு இல்லாத ஒரு பொருளை மருந்தாக உண்ணவே கூடாது. இந்த விதியை மீறுகிறவர் ஆரோக்கியம் பெறவே முடியாது.

ஜீவசத்து இல்லாத வெறும் மண்ணும், மண்ணில் விளையும் உலோகங்களும், உலோகக் கூட்டுப் பொருள்களும் மருந்தாக உபயோகிக்கத்தக்கவை அல்ல. விஷங்களையெல்லாம் மருந்தென்று சொல்லிப் பிரயோகிப்பது தவறு. மண்ணில் உண்டாகும் எந்த உப்பையும் வழக்கமாய்ச் சிறிதே அதிகமாய் உண்டாலும், காலக் கிரமத்தில் ஆரோக்கியம் கெடும். எனவே, சாதாரண உப்பைக்கூட, அடியோடு விட முடியாவிட்டாலும் சொற்பமாய் உபயோகிப்பதுதான் நல்லது.

தாவரங்களில், விஷம் உள்ளவற்றைக் கண்டிப்பாய் விலக்க வேண்டும். ஏனென்றுல், அவை உணவல்ல; 'மருந்து' என்பதும் 'உணவு' என்பதும் ஒரே வஸ்துவின் இரண்டு பெயர்களே. ஏதென்ஸ் நகரில் வாழ்ந்த ஹிப்பாக்ரட்டீஸ் என்ற பேரறிஞரின் உபதேசத்தை நாம் இங்கே மனத்தில் பதித்துப் போற்ற வேண்டும். ''உணவே உன் மருந்தாக இருக்கட்டும்; மருந்தே உன் உணவாக இருக்கட்டும்'' என்று அவர் கூறியிருக்கிருர். முன் பாதி நோயாளியை நோக்கிச் சொன்னது; பின் பாதி ஆரோக்கியம் உள்ளவனை நோக்கிச் சொன்னது. நோயாளிக்கு நல்ல உணவு நோயைப் போக்கும்; ஆரோக்கியம் உள்ளவனுக்குப் பத்திய உணவு நோயைத் தடுக்கும். ஹிப்பாக்ரட்டீஸ் சுகாதார வாழ்க்கையைப் போற்றினுர். ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பக் கொடுக்கவும் இயற்கைக்கு அளவிறந்த சக்தி இருக்கிறது என்று அவர் நம்பினுர். விஷ மருந்துகளை உபயோகிப்பது தவறென்று கண்டித்தார். இப்படிப்பட்ட ஹிப்பாக்ரட்டீஸை வைத்திய சாஸ்திரத்தின் தந்தை என்கிருர்கள் அல்லோபதி வைத்தியர்கள். ஏதோ தங்கள் வைத்தியத்தை - ஆரோக்கியம் கெடுக்கும் வைத்தியத்தை - நிறுவியவர் போல அவரை இப்படி இவர்கள் குறிப்பிடுவதுதான் விநோதம்!

ஹிப்பாக்ரட்டீஸின் உபதேசம், நம்முடைய தைத்திரீய உபநிஷத் வாக்கியத்தை ஒத்திருக்கிறது. உணவே சர்வரோக நிவாரணி என்று அந்த உபநிஷத் சொல்லு

கிறது. ஏனென்றால், உணவிலிருந்தே சகல ஜீவன்களும் உதித்தன என்று அது குறிப்பிடுகிறது. எனவே, கண்ட சரக்குகளையெல்லாம் மருந்தென்று புராதன வைத்தியர்கள் மதிக்கவில்லை. 'ஆயுர்வேத சூத்திரம்' என்ற கிரந்தத்தைப் பார்த்தால் இது விளங்கும். உபவாசம், பிராணாயாமம், பச்சிலை உணவு மருந்துகள் ஆகிய வற்றையே நோயாளிகளுக்குச் சிகிச்சையாக அதில் சொல்லியிருக்கிறது. ஆனால், இப்போதுள்ள ஆயுர்வேதப் புரொபஸர்கள் இதையெல்லாம் புரட்டிவிட்டார்கள்; ரசத்தையும் பயங்கர விஷச் சரக்குகளையும் உபயோகிக்கிறார்கள்!

இவர்கள் கைவிட்ட அந்தப் புராதன நூலில் சொல்லியுள்ள உணவுப் பச்சிலைகள், தேகத்தின் வாத பித்த சிலேஷ்ம தோஷங்களையெல்லாம் நீக்கக் கூடியவை. ஆகவே, இன்ன வியாதிக்கு இன்ன பச்சிலை என்று அவற்றுக்குள்ளே ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லாமே எல்லாருக்கும் நல்லவை; ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக் கூடியவை. ஆகையால்தான், எங்கள் இயற்கை வைத்திய முறையில் இந்தத் திரிதோஷப் பிரிவினைகளை நாங்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

அதே உபநிஷத்தில் 'அன்னம் பிராணன். அது உண்ணப்படுவது; உண்பதும் அதுவே' என்று சொல்லியிருக்கிறது. வேதத்திலும் ஒரு வசனம் இருக்கிறது. 'அன்னம் மிருத்யு; அதுவே ஜீவன்' என்று அது சொல்லுகிறது. உணவைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதைத்தான் இந்த இரண்டு வசனங்களும் தெரிவிக்கின்றன. துஷ்பிரயோகம் செய்த உணவு விஷமாகிறது. அது ஆரோக்கியத்தைக் கெடுத்து, ஆயுளையும் குறைத்துவிடும்.

இப்படியாக, உணவும் மருந்தும் ஒன்றே என்று நம் உபநிஷத்து நமக்கு அறிவிக்கிறது. உணவில்லாத சரக்குகளை மருந்தென்று பிரயோகிக்கும் ஆள்களெல்லாம் போலி வைத்தியர்கள். ஆரோக்கியத்தையும் நோயற்று நீண்ட ஆயுளையும் விரும்புவோரெல்லாம் இந்தப் போலி வைத்தியர்களைப் பகிஷ்காரம் செய்ய வேண்டும்.

உலக அன்னை - இந்தியா

நம் இனத்தின் தாயகம் இந்தியா. ஐரோப்பிய மொழிகளுக்கெல்லாம் தாய் சம்ஸ்கிருதம். நம் தத்துவ சாஸ்திரத்தின் தாய் இந்தியா. கிறிஸ்துவ சமய லட்சியங்களுக்கெல்லாம், புத்தரின் மூலம் உதவிய தாய் இந்தியா. சுய ஆட்சிக்கும் ஜனநாயகத்துக்கும், கிராம சமுதாயத்தின் மூலம் வழி காட்டிய தாய் இந்தியா. இந்திய மாதா நம் அனைவருக்குமே அநேக வழிகளில் தாய்.

—வில் டியூராண்ட் (தத்துவ சாஸ்திர அறிஞர்)

இந்தியாவின் காரியம் உலகத்தின் காரியம்; இறைவனின் காரியம். இறைவனே நம் மாலுமி; நம் லட்சியத்தை நோக்கி நம்மை அவன் இட்டுச் செல்வான்.

—ஸ்ரீ அரவிந்த கோஷ்

சிசுக்களுக்குச் செல்லம்; சிறுவருக்குக் கட்டுப்பாடு;
தண்டனையும் கண்டனமுமோ இல்லவே இல்லை!

பர்மியக் குழந்தைகள்

ஹெலன் ட்ரேஜெர்

பர்மாவில் குழந்தைகள் வளர்க்கும் விஷயத்தில் பெற்றோர்கள் கஷ்டமே படுவதில்லை. எந்தக் காரியத்தையும் பர்மியர் கொஞ்சங்கூடச் சிரமம் இல்லாமல் அழகாய்ச் செய்வார்கள். அதே மாதிரி குழந்தைகளையும் வெகு சுலபமாய் வளர்த்துவிடுகிறார்கள். பெற்றோர்கள் என்ற தோரணையே இல்லாமல் குழந்தைகளிடத்தில் மிகவும் சாவதானமாயும் சாதாரணமாயும் நடந்துகொள்ளுகிறார்கள், குழந்தைகள். தங்கள் வயசை மிஞ்சி எல்லாம் தெரிந்து நடக்க வேண்டும் என்ற அவசரம் அவர்களுக்கு இல்லை. வயசுக்கு ஏற்றபடி நாளடைவில் குழந்தைகள் தாமே எல்லாம் தெரிந்து கொள்ளுகிறார்கள். பிஞ்சில் பழுத்தது போன்ற அறிவுள்ள குழந்தைகளைப் பற்றிக் கூடப் பர்மியர் பெருமை பாராட்டிக் கொள்ளுவதில்லை. அப்படிப் பெருமைப்படுவதை மிகவும் மட்டமான குணமாகவே கருதுகிறார்கள். அவர்களுடைய திருப்தி நிறைந்த முகத்தையும் கவலையற்ற நடையையும் பார்க்கும்போது, அவர்கள் எதையும் அளவுக்கு மீறிப் பெரிதாய்ப் பாவிக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது.

வாழ்க்கையிலோ, குடும்பத்திலோ, எதிலும் ஒரு நிதானத்தோடு இருப்பதுதான் பர்மியருக்கு முக்கியம். குழந்தைகளின் வாழ்க்கை இன்பமாக இருக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்கர் எவ்வளவு பாடுபடுகிறார்கள்? அவர்கள் படும் சிரமம் எல்லாம் மிகவும் அநாவசியமானது என்றுதான் பர்மியர் நினைப்பார்கள். ஒருவருடைய சந்தோஷத்துக்காக மற்றொருவர் என்ன செய்ய முடியும்? புத்த மதத்தினர் அது சாத்தியம் என்று நினைப்பதில்லை. பர்மாவிலோ நூற்றுக்கு 85 பேர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆனால் 'பர்மா தேசத்துக்குச் சென்று அங்குள்ளவர்களைப்பற்றி எழுதுகிறவர் அனைவரும் அங்கே மக்கள் சந்தோஷமா யிருப்பதாக நினைக்கிறார்களே; அது ஏன்?' என்று கேட்டால், அதற்கு ஒன்றும் சரியான பதில் இல்லை. 'பர்மாவில் அரிசி நன்றாய் விளைகிறது: அதுதான் காரணம்' என்று சிலர் சொல்லுகிறார்கள். 'இந்தியாவைப் போல் அங்கே மழைப் பஞ்சம் இல்லை. ஆகவே, விளைச்சல் குறைவு ஒன்றும் கிடையாது; பட்டினி, பசி என்பதும் இல்லை. வருஷம் முழுவதும் ஜனங்களுக்கு நல்ல உணவு கிடைக்கிறது. தவிர, புத்த மதத்தில் அவர்களுக்குப் பெரும் பற்றுதல் இருக்கிறது. அவர்கள் உற்சாகமாய்க் கவலையற்று நிம்மதியாக இருப்பதற்கு இவையெல்லாந்தான் காரணம்' என்று சிலர் கருதுகிறார்கள். 'வாழ்க்கையில் அவர்கள் இப்படி மனச் சந்துஷ்டியோடு இருப்பதற்குப் பர்மாவின் சீதோஷ்ண நிலை ஒரு காரணம்' என்று சிலர் கூறுகிறார்கள். இந்த எல்லா விஷயங்களுமே பர்மியர்களுடைய குணத்துக்கும் சந்தோஷமான மனப்பான்மைக்கும் ஒரு விதத்தில் காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் அவர்களை அவர்களுடைய சொந்த நாட்டிலேயே மதிப்பில்லாது நடத்திய பிரிட்டிஷ் அரசாட்சியை 125 வருஷ காலம் எப்படி அவர்கள் சகித்திருக்க முடியும்? அப்புறம் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது நெஞ்சில் ஈரம் இல்லாமல் எதிரிகள் பொழிந்த குண்டுகளுக்கு இலக்காகி அவர்கள் பட்ட

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஜனவரி '57),
4600, டைவெர்ஸி அவென்யூ, சிக்காகோ - 39, ஐக்கிய அமெரிக்கா.

சிரமந்தான் எவ்வளவு! அது மட்டுமல்ல; சுதந்தரத்துக்காக அவர்கள் ஜப்பானியரோடு போராடி வெற்றி பெற்றபோது, நாட்டில் கம்யூனிஸ்டுகளாலும் வேறு பல அரசியல் சூழ்ச்சிக்காரராலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் அவர்கள் உற்சாகமாயிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்னதான் காரணம் கூறமுடியும்?

எனக்கென்னவோ அவர்களுடைய வாழ்க்கை முறையும் அவர்கள் வளர்க்கும் விதமுந்தான் மற்ற எல்லாவற்றையும்விட அவர்களுடைய சந்தோஷமான வாழ்க்கைக்கு மிக முக்கியமான காரணம் என்று தோன்றுகிறது.

பர்மாவிலுள்ள கிராமம் ஒன்றில் பிறந்து வளர்வதற்கும், அமெரிக்கா நாட்டிலுள்ள ஓர் ஊரில் பிறந்து வளர்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அங்கே வாழ்க்கை இவ்வளவு சிக்கலாக இல்லாமல் மிகவும் எளிய முறையில் நடக்கிறது. அமெரிக்கரைப் போல் பெற்றோர் அங்கே சதா ஏதோ அவசர ஜோலியாகவே ஓடிக்கொண் டிருப்பதில்லை. 'இதற்கு என்ன செய்யலாம்? அதற்கு என்ன செய்யலாம்?' என்றெல்லாம் கவலை கொள்ளும்படியான பிரச்னைகளும் ஒன்றும் குடும்பத்தில் ஏற்படுவதில்லை. குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் அதிகக் கவலையினால் பெற்றோர்களுக்கு ரத்த அழுத்தம் என்ற வியாதி ஏற்பட்டு வேதனைப் படுவதும் கிடையாது. குழந்தை வளர்ப்பு ஒரு பெரும் பிரச்னையாகவே அவர்களுக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பர்மியக் குழந்தைகள் தனியாக வெளியே போகும் வயசு வரும் வரையில் பெற்றோர்களோடு போவார்கள். கொஞ்சம் பெரியவர்களானதும் துணையில்லாமல் தனியே போய் வரட்டும் என்று பெற்றோர்களே விட்டுவிடுவார்கள்.

எவ்விதமாய்ப் பொழுது போக்குவது என்பதைப்பற்றிக் குழந்தைகளே கவனித்துக்கொள்ளுவார்கள். அதைப்பற்றிப் பெற்றோர்கள் கவலைப்பட்டுப் பெரிய சிரமம் ஒன்றும் எடுத்துக்கொள்ளுவதில்லை. யார் வீட்டில் எந்த விசேஷம் நடந்தாலும் குடும்பத்தோடு செல்லுவார்கள்.

குழந்தைப் பருவத்தில் தங்களுக்கு இருந்திராத சௌகரியங்கள் தங்கள் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும் என்று பர்மாவில் பெற்றோர் கவலைப்படுவதில்லை. குழந்தைகளைப் பொறுப்புடனும் அன்புடனும் கவனித்துக் கொண்டாலே போதும் அல்லவா என்று அவர்கள் கருதுகிறார்கள்; குழந்தைகளும் தாங்கள் விரும்பியதையெல்லாம் விரும்பிய இடத்திலேயே அடைய வேண்டும் என்பதற்காக அழுது சாகசம் செய்வதில்லை. பெற்றோரைப்பற்றியும் அவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் அவர்கள் நன்றாய் அறிவார்கள். ஆகவே, குழந்தைகள் இப்படி இருக்கிறார்களே என்று பெற்றோர் அவமானமோ வருத்தமோ கொள்வதற்கு இடமே இருப்பதில்லை. குழந்தைகளுக்கும் பெற்றோரைப்பற்றிய பெரும் ஏமாற்றமோ மனத்தாங்கலோ ஏற்படுவதில்லை. எவ்வளவு சாதாரண அந்தஸ்தில் இருந்தாலும், வறுமையில் வாடினாலும் பர்மியக் குடும்பத்தில் ஒற்றுமைக்கும் அன்புக்கும் குறைவே இல்லை. மற்றவர்கள் செய்வதைப் பார்த்து எல்லாவற்றையும் குழந்தைகள் தாமே தெரிந்துகொள்வார்கள்; ஒவ்வொன்றையும் பெரிதாய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற கவலை பெற்றோருக்கு இல்லை. 'பட்சணம் சேற்றில் விழுந்துவிட்டதே' என்று குழந்தை மியாகின் மனம் வருந்தினாலும், அதற்காக அவள் 'ஓ!' என்று கத்தி விட மாட்டாள். ஏனென்றால், அழுவது அழகில்லை என்பதனால்தான். அழுதால் அப்பா கோபித்துக்கொள்ளுவார். 'அப்பா சந்தோஷப்பட வேண்டும்' என்று மியாகின் ஆசைப்படுவாளே தவிர, அவருடைய கோபத்துக்கு ஆளாக அவள் விரும்பமாட்டாள். சொல்லாமல், முக ஜாடையிலிருந்தே தெரிந்துகொண்டு அதன்படி

குழந்தை நடக்க வேண்டும் என்று தான் பர்மாவில் நினைக்கிறார்கள்.

பெரியவர்களிடம் குழந்தைகள் மரியாதையோடு நடந்துகொள்ளுவது மிகவும் முக்கியம் என்று பர்மியர் கருதுகிறார்கள். இதிலிருந்து அன்பு, பொறுப்புணர்ச்சி, தன்மதிப்பு இவை போன்ற நற்குணங்கள் தாமே வந்துவிடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். குழந்தைப் பருவத்திலேயே மரியாதையுடன் நடந்துகொள்ளத் தெரிந்துகொண்டால், பிறகு வாழ்க்கை முழுவதும் அவர்கள் எது செய்தாலும் சொன்னாலும் அது சரியாகவே இருக்கும்.

பிறந்த நாளைக் கொண்டாடும் போது, பெரியவர்களும் சரி, சிறியவர்களும் சரி, பிறருக்குப் பரிசுகள் வழங்குவார்களே தவிர, பிறரிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். நல்லவர்களாக இருப்பதற்கு அடையாளம், பிறரிடம் கரிசனை காண்பிப்பது தான். தாங்கள் கரிசனையோடு இருந்தால், தங்களிடம் பிறரும் கரிசனையோடு நடந்துகொள்ளுவார்கள் என்று பர்மியர் நம்புகிறார்கள். ஒருவரைப்பற்றி ஒருவர் தவறான அபிப்பிராயம் கொள்வதும், நல்லது கெட்டது தெரியாமல் நடப்பதும் போன்ற தவறுகள் ஏற்படப் பர்மியருக்குள் இடம் இல்லை.

குழந்தைகள் விஷயத்தில் பெற்றோரின் கடமைகள் ஐந்து: முன் கூட்டியே தீங்கு வராமல் பார்த்துக் கொள்வது; நல்லதை எடுத்துக் காண்பிப்பது; படிக்கும்படி செய்வது; அவர்களுக்குக் கல்யாணம் செய்விப்பது; தம்மிடம் உள்ள சொத்தைப் பகிர்ந்துகொடுப்பது - இந்த ஐந்தையும் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக இராமல் செயலில் காட்ட வேண்டிய கடமைகளாகவே மதிக்கிறார்கள். சொத்தைப் பாகப் பிரிவினை செய்யாமல் அப்படியே குடும்பத்தில் வைத்திருப்பார்கள். குடும்பத்துச் சொத்தைப் பிரித்துக் கொடுக்கும்போது, ஒவ்வோர் அங்கத்தினருக்கும் தமக்கு வேண்டியதைக் கேட்டு எடுத்துக்கொள்ள அதிகாரம் உண்டு. நிலத்தையோ நெல்லையோ விற்றுவிட்டு மனைவியிடம் வந்து கணவன் அதைக் கூற மாட்டான். அவளிடம் அதைப் பற்றிக் கூறி அவள் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொண்டுதான் முடிவு செய்வான்.

பர்மாவில் பொதுவாக ஸ்திரீகளின் அந்தஸ்து மிகவும் உயர்வாகவே இருக்கிறது. 1951 - ஆம் வருஷம் முதல்முதல் தேசீயப் பொதுத் தேர்தல் நடந்தபோது, மந்திரி சபைக்கு ஒரு ஸ்திரீயை நியமனம் செய்தார்கள்.

புதிதாக ஒருவர் பர்மாவுக்கு வந்தால் வெகு சீக்கிரம் பழகிப் போய்விடும். இதற்குக் காரணம் பர்மியர் பிறரிடம் மரியாதையாய் நடந்துகொள்வதுதான். குடும்பத்தில் மிக்க அன்பும் ஒட்டுதலும் இருக்கும்போது, பிறரிடம் அவர்கள் எப்படி வேறுவிதமாய் நடப்பார்கள்? ஒரு சிறு பையனைக் கண்டு வழி கேட்டால், அவன் எரிந்து விழாமல் சிரித்த முகத்தோடு பணிவாய் வழி காட்டுவான். முகம் அறியாத மனிதர்களைக்கூட 'மாமா', 'மாமி' என்றே அவன் அழைப்பான். சம வயசு உள்ளவர்களைப் பர்மாவில் 'அக்கா' என்றும் 'அண்ணா' என்றுமே அழைப்பார்கள்.

ஒரு குடும்பம் எவ்வளவு சிறியதாயிருந்தாலும், டஜன் கணக்கில் 'அண்ணா' என்றும், 'அக்கா' என்றும், 'மாமா' என்றும், 'மாமி' என்றும் உறவு முறையார் இருப்பார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களை உறவு முறை தவறாமல் அழைக்கக் கற்றுக் கொள்வார்கள். வயசு வித்தியாசம் தெரியாமல் போனாலும் உறவு முறையினால் பெரியவர் யார், சிறியவர் யார் என்ற வித்தியாசம் தெரிந்துவிடும். வயசில் யார் பெரியவர்களோ அவர்களுக்குத் தான் எல்லா விஷயத்திலும் முதல் மரியாதை. எவ்வளவு சிறிய வயசுள்ளவரானாலும் அவரை விடச் சிறிய வயசுள்ளவர்கள் அவருக்கு மரியாதை காட்டுவார்கள். நல்ல பழக்க வழக்கங்கள் உடைய குழந்தை, உறவினரிடமும் உறவினர் அல்லாதவரிடமும் ஒரே வித

மரியாதையுடன் நடந்துகொள்ளும். மிகவும் சின்னக் குழந்தை என்றால், அதன்மீது எல்லாரும் ஒரே பிராணனாக இருப்பார்கள். யார் முதல் குழந்தை, யார் இரண்டாவது குழந்தை என்பது அவர்களுடைய பெயரிலிருந்தே தெரிந்து விடும். எவருமே வயசுக்கு மேல் பெரியவராகவோ, சிறியவராகவோ காட்டிக்கொள்ளச் சிரமப்படுவதில்லை. பர்மாவில் இளம் வயசில் இன்பம் இருந்தாலும் வயசானால் அதற்குத் தனிக் கௌரவம் உண்டு.

எந்த வீட்டுக்குப் போனாலும், குழந்தைகள் அதிகமாய்க் கண்களில் படுவதில்லை. மிகச் சிறிய குழந்தைகளாயிருந்தால், தாய் போகும் இடமெல்லாம் குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டே போய் விடுவாள். குழந்தையும் பேச்சு மூச்சுக் காட்டாமல் இருக்கும். அதற்குப் பசி என்று தெரிந்தால், உடனே தாய் எடுத்துப் பால் கொடுப்பாள். அதற்காக அலுப்பு அடைய மாட்டாள். குழந்தைக்கு நிஜார் போட்டு வைப்பது, அதை அவசரமாக அவிழ்த்து மாற்றுவது போன்ற சங்கடங்கள் இல்லை. ஆகவே, குழந்தைகள் ஒரு தொந்தரவும் இல்லாமல் எல்லா இடங்களுக்கும் போய் வருவார்கள். குழந்தைகள் முனகுவது, பெற்றோர் வைவது என்பதெல்லாம் வெகு அபூர்வம்.

குழந்தையைத் தனியாய் ஓர் அறையில் விட்டு வைக்கமாட்டார்கள். வீட்டுக் கூடத்தில் தொட்டிலில்தான் குழந்தை படுத்திருக்கும். யார் வந்தாலும் எடுத்துக் கொஞ்சி விட்டுப் போவார்கள். கொஞ்சம் பெரிய குழந்தையானதும், அதை மூத்த பெண் இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு பொறுமையாய் விளையாட்டுக் காட்டி, வேண்டியதைச் செய்து கவனித்துக் கொள்வாள். தம்பி, தங்கைகளை மூத்த பெண் கவனித்துக்கொள்வது பர்மாவில் சாதாரணமாக நிலவும் வழக்கம். அதை எந்தப் பெண்ணும் தன் முக்கியப் பொறுப்பாகவே கருதுவாள். உற்சவத்திலோ, வயலில் நடவு நடும் சமயத்திலோ குழந்தையையும் இடுப்பில் வைத்துக்கொண்டேதான் வேலை செய்வார்கள். குழந்தையிடம் அலுப்புச் சலிப்புக் காட்டாமல், மிகவும் பொறுமையோடும் ஆசையோடும் இருப்பார்கள்.

குழந்தைகள் கட்டுப்பாடு இல்லாமல், தாராளமாய் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும். அவற்றுக்கு ஏதாவது தீங்கு வருமோ என்ற பயத்துக்கு இடம் இல்லை. அமெரிக்க வீடுகளைப்போல் மெத்தை, நாற்காலி, சோபா எதுவும் அங்கே கிடையாது. எந்தச் சாமானையாவது குழந்தைகள் ஏறித் துவைத்துப் பிய்த்துவிடுவார்களோ என்ற கவலைக்கு இடம் இல்லை. உடைத்தெறிவதற்குக் கண்ணாடி ஜன்னல்களும் இல்லை.

குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்து ஒவ்வொரு விஷயத்திலும் எப்படி நடக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பெற்றோர், வீட்டில் இருக்கும் சலவைக் கல் புத்தர் சிலையைப் பூஜை செய்வார்கள். சிறுவர் சிறுமிகளும், புஷ்பங்கள் சார்த்தி நைவேத்தியம் செய்வதற்கென்று பழங்களைப் பறித்துக் கொண்டு வருவார்கள். எல்லாரும் கைகூப்பியபடி நிற்பார்கள்.

பர்மியக் குழந்தைகள் மிகவும் அடக்க ஒடுக்கமாயிருப்பதாக அமெரிக்கர்களுக்குத் தோன்றுகிறது. அவர்கள் தாமாக ஒன்றும் பேசமாட்டார்கள். ஏதாவது கேட்டால்தான், பதில் சொல்லுவார்கள். பெரியவர்கள் பேசும்போது குறுக்கே வந்து பேச மாட்டார்கள். அமெரிக்கக் குழந்தைகள் போல், தூங்கப் போவதற்கு நல்ல வார்த்தை சொல்லி இணக்க வேண்டும் என்பது இல்லை. ஒவ்வொன்றும் மணிப் பிரகாரம் நடக்க வேண்டும் என்ற கட்டாயமே பர்மாவில் இல்லை. எப்போது தூக்கம் வந்ததோ அப்போது தூங்க வேண்டியதுதான். விழித்துக்கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பம் என்றால், எல்லாரும்

விழித்துக்கொண் டிருப்பார்கள். 'ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாய்க் குழந்தைகளை அடித்து அடக்கி வைத்திருப்பார்கள்: இல்லாவிட்டால் இப்படிக் குழந்தைகள் ஒரு விஷமமும் செய்யாமல் இருப்பார்களா?' என்று முதலில் நினைத்தேன். ஆனால் நான் அங்கே வாத்தியாராக இருந்து பார்த்த போது, நான் நினைத்தது எவ்வளவு தவறு என்று தெரிந்தது. வகுப்பில் குழந்தைகள் ஒன்றும் பேசமாட்டார்கள். ஒரு கேள்வியும் தாமாகக் கேட்க மாட்டார்கள். நாம் எப்படிப் பேசினாலும் அவர்கள் பேசாமல் இருப்பார்களே யொழிய பதில் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். எனக்கு மிகவும் கோபங்கூட வரும். அதை இப்போது நினைக்கும்போது எனக்கு அவமானமாகவே இருக்கிறது. பர்மாவில் ஆசிரியருக்கு மிகவும் மரியாதை உண்டு. அவரைப் பெற்றோருக்கு மேலேயே, அதிகமாகக் கருதுவார்கள். 'அதிக மரியாதையினாலேயே, என்னிடம் அவர்கள் பேசாமல் இருந்திருக்கிறார்கள்' என்று எனக்குப் பிறகுதான் தெரிந்தது. மாணவர்களுக்குக் கேள்வி கேட்கத் தெரியாது என்பது இல்லை. வாத்தியாரைக் கேள்விகள் கேட்கக்கூடாது என்பதனாலேயே அவர்கள் மௌனமா யிருப்பார்கள்.

பிறர் நினைப்பதைப்பற்றிப் பர்மாவில் எப்போதும் கவலை உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் பிறரிடம் பிரியம் இல்லாது நடக்கக் கூடாது என்பதே அவர்களுக்கு முக்கியம்.

அடக்கம், பணிவு, தாழ்மை முதலிய குணங்களைச் சிறந்தவை என்று பர்மியர் கருதுகிறார்கள். அமெரிக்கர்களோ 'தான்' என்பதையே பெரிதாக எண்ணி நடக்கிறார்கள். குழந்தைகள் 'ஏன்', 'எதற்காக?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டால்தான், அவர்களைப் புத்திசாலிகள் என்று அமெரிக்கர் நினைப்பார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களுடன் பர்மியப் பெற்றோர்களைப் போல் எப்படிக் கவலையில்லாமல் நிம்மதியாக இருக்க முடியும்?

பர்மாவில் குழந்தை வளர்ப்பைப் பார்த்தால், அமெரிக்கருக்கு மிகவும் இயல்புக்கு விரோதமாக இருப்பதாகத் தோன்றும். ஆயினும், அமெரிக்காவில் குழந்தைகள் வளர்ப்பதைப்பற்றியும் பர்மியர் அப்படித்தான் நினைப்பார்கள். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இருவரும் ஒப்புக்கொள்வார்கள். பர்மாவைக் காட்டிலும் அமெரிக்காவில் பெற்றோர் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் குழந்தைகளை வளர்ப்பதில் கஷ்டப்படுகிறார்கள் என்ற உண்மைதான் அது.

பர்மியர் இயல்பாகவும் சாதாரணமாகவும் பொறுமையாகவும் நடந்துகொள்ளுகிறார்கள். பிறர் குறை கூறினால் கோபம் கொள்ள மாட்டார்கள். நாம் இயல்பாய், சாதாரணமாக நடக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிறோமே யொழிய, உண்மையில் பர்மியர் தான் அப்படி நடக்கிறார்கள்.

முனிவரின் பிரார்த்தனை

தெய்வத்தை நோக்கி விசுவாமித்திரர் இப்படிப் பிரார்த்தனை செய்தார்: ''எனக்குச் செல்வத்தைக் கொடுத்தாய்; பசுக்களைக் கொடுத்தாய்; புகழைக் கொடுத்தாய். அவற்றையெல்லாம் நீ திருப்பி எடுத்துக்கொள்ள முடியும். ஆனால், நான் அறிந்து உபதேசிக்கும் சத்தியத்தை எனக்கு நீ கொடுக்கவில்லை; அதை நானே கண்டுகொண்டேன். என் தவத்தின் மூலம் அதை நான் சம்பாதித்துக் கொண்டேன். அது எனக்கே சொந்தம். அதை நீ என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளவே முடியாது.''

—கே. எம். முன்ஷி

சாமியாட்டமும் குறி சொல்லுவதும் தமிழ் நாட்டைப் போல் கன்னடத்திலும் வழங்குகின்றன!

பூத நாட்டியம்

ஜே. ஏ.

அராபிக் கதைகளில் வரும் அற்புதமும் பயங்கரமும் நிறைந்த சம்பவங்களை எல்லாரும் படித்திருக்கலாம். அவை எல்லாமே ஒன்று சேர்ந்தாலும் ஈடாகாத பயங்கரக் காட்சிகளை நாம் தென் கன்னடத்தின் பூத நாட்டியங்களில் காணலாம். இதற்குச் சரியான பொருள், 'பேய்க் கூத்து'. இந்தக் கூத்து அங்கே இன்றும் நடந்து வருகிறது. இதைக் கண்ட கிழவர்கள்கூடப் பல வருஷ காலம் வரையில் தூக்கத்தில் பயந்து உளறுவார்களாம். இந்தக் கூத்தைப் பார்க்கும்போது ரத்தம் உறைந்து மயிர்க்கூச் செறியுமாம்.



அற்புதமாய் உடுத்த பூத வேஷக்காரன்

இந்த ஜில்லாவில் 'பொம்பதரு' என்ற ஒரு வகுப்பினர் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய பயங்கரமான உருவத்துக்கு ஏற்றபடி உடையும் ஆபரணங்களும் அணிந்துகொண்டு முகத்துக்கு வர்ணம் பூசிக்கொண்டு சபையில் பிரவேசிப்பார்கள். இவர்கள்மீது பூத ஆவேசம் வந்தவுடன் இவர்களுக்கு அபூர்வ சக்தி உண்டாகி விடுகிறது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் இழுத்துப் பிடித்தாலும் அடங்காமல் மணிக்கணக்கில் இவர்கள் கூத்தாடுவார்கள். வழிகாட்டிகள் ஆவேசக்காரனுக்கு முன் அவன் போகும் பக்கத்தில் வழி காண்பித்துக்கொண்டு போவார்கள்.

ஜுமாதியும் பண்டனும்

இது போன்ற பூதங்களுக்கு, அதாவது பூத ஆவேசம் வந்த மனிதர்களுக்குக் கிராமத்துப் பெரியவர்கள் பூஜை செய்து காணிக்கை செலுத்துவார்கள்.

பூத ஆவேசம் வந்த மனிதனை யாரும் எந்தச் சக்தியும் தடை செய்ய முடியாது. அப்படி, அற்புதமாய்ப் பயங்கரமாய்க் குதிப்பார்கள். அதிகமாகக் குடித்துவிட்டு உடம்பு தெரியாமல் இவர்கள் ஆடுவதாக இந்தக் காலத்து மனிதர்கள் சிலர் சொல்லுவார்

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்), பங்களூர்.

கள். ஆனுல், உண்மையில் இவர்கள் குடிப்பதே இல்லை. இவர்களுடைய கண்ணிலும் நரம்புகள் முறுக்கேறிய உடம்பிலும் இவர்கள் குதிக்கும்போது உடம்பில் தோன்றும் வெதுவெதுப்பிலும் ஏதோ ஓர் அற்புத சக்தி நிறைந்திருப்பது நமக்குப் புலனுகிறது.

இப்படி மணிக்கணக்கில் கூத்து நடந்தபின், பூதக் கோயிலில் இருக்கும் பூசாரிக்கருகே போய், இந்த வேஷக்காரன் நிற்பான்.

இப்படிப் பூதக் கோயில்கள் பல இருக்கின்றன. இவை சாதாரணமாகப் பன்னிரண்டு அடி நீளமும் ஆறடி அகலமும் உள்ளவை. மேலே ஓடு போட்டிருப்பார்கள். இருப்பது ஒரே வாயில். இதன்முன் விஸ்தாரமான கூடம் இருக்கும். கோயிலின் உட்புறத்தில் வெண்கலத்தால் வார்ப்படம் செய்த விக்கிரகங்கள் இருக்கும். இவை விகாரமான மனித உருவம் கொண்டவை. காட்டுப் பன்றி, குதிரை, எருமை இவற்றின்மேல் ஏறி அமர்ந்திருக்கும் தோற்றம் பெற்றவை.

பூதங்கள் புராதன தெய்வங்களுக்கும் வீரர்களுக்கும் பிரதிநிதிகள். சம்பிரதாயப்படி மிகப் பழையவையாகக் கருதப்பெறும் 'கோடி'யும் 'சென்னையா'வும் ஒப்பற்ற வீரத்துக்கு உதாரணமானவர்கள். சில பெண் பூதங்களையும் அங்கே காணலாம். ஜுமாதி (தூமவதி) என்ற பூதம், தன் சகோதரனை பண்டன் என்பவனுடைய உதவியால் தன்னுடைய காரியங்களை முடித்துக்கொள்வாள்.

குரூரமான ஏவல்களைச் செய்யும் குட்டிச் சாத்தானும் ஒரு பெண் பூதமே. பரம்பரைக் கதைகளில் வரும் வீரர்களுக்குப் பிரதிநிதிகளான பூதங்களைத் தவிர, மஹிஷண்டையா, ஜரண்டையா, பஞ்ஜுர்லி முதலிய கீழ்த்தரமான சக்திகளைக் கொண்ட பூதங்களும் சில இருக்கின்றன.

பண்டிகைப் பருவங்களிலும் பூத நாட்டியம் நடக்கும் உற்சவங்களிலும் பூத விக்கிரகங்களுக்குக்



பூத விக்கிரகங்கள்

கோயிலிலிருந்து புறப்பாடு செய்வார்கள். பூசாரி விளக்கேற்றிப் பூச் சாற்றிப் பூஜை செய்வார். வெண்கல விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்வதோடு மது மாமிசங்களை நிவேதனம் செய்வார்.

உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்த இந்தப் பூத வேஷக்காரர்கள் சில சமயம் உலோகங்களால் செய்த பிராணிகளின் முகத்தைத் தலையில் மாட்டிக்கொள்வதும் உண்டு. அப்படியே பூசாரியின் முன் போய் நிற்பார்கள்.

பூதமும் பூசாரியும்

பூஜை முடிந்த அடுத்த நிமிஷத்தில் பூத வேஷக்காரன் பூதாவேசம் ஏற்பட, மணியடித்துக் கொண்டே, தன்னைப் பூஜிக்கும் பக்தர்கள் முன்பு நாட்டியம் செய்யத் தொடங்கிவிடுவான்.

இப்படிப் பயங்கரமான பூத நாட்டியம் முடிந்தபின் வேஷதாரிக்கு வாழைப் பழம், வெல்லம், அரிசி ஆகியவற்றைக் கொடுப்பார்கள். ஆவேசம் வந்த ஆசாமி, உற்சவத்தில் கலந்துகொண்ட எல்லாருடைய பெயர்களையும் கூப்பிட்டு அவர்களுடைய வருங்காலத்தைப்பற்றிச் சோதிடம் சொல்லுவான். இந்தப் பூதத் தலைவனின் முன்னிலையில் பலருடைய பிணக்குகளும் வழக்குகளும் ஒழியும். இப்படித் தென் கன்னடத்து மக்கள் வாழ்க்கையில் பூத வழிபாடு சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

துளு நாடும் இந்தப் பகுதியை ஒட்டியதே. இந்த நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தாரும் வீட்டின் ஒரு பகுதியைக் குலத்துக்கு உரிய பூதத்துக் கென்று ஒதுக்கிவிடுவது வழக்கம். அந்த இடத்தில் தம் குடும்பத்தின் இஷ்ட பூதத்தை ஆவாகனம் செய்ய ஒரு சிறு சுவரையோ கல்லையோ ஸ்தாபித்து அந்தப் பூதத்தின் பெயரால் அதை அழைப்பார்கள். பெரிய ஜமீன்தார்கள் அபூர்வமாய் எப்போதாவது தம் குடும்ப தெய்வமாகிய பூதத்தின் திருப்திக்காகப் பூத நாட்டியம் ஏற்பாடு செய்வது உண்டு.

பூதங்கள் தம்மைக் காக்கும் தெய்வங்களே என்று மக்கள் பூஜிப்பதோடு ஒவ்வொரு சிறு காரியங்களிலும் பூதத்தின் தலையீடு இருப்பதாகவும் நம்புகிறார்கள்.

ஜன்மத்தில் ஒரு தடவை நாம் இந்தப் பூத நாட்டியத்தைப் பார்த்தால் போதும்; அப்புறம் என்றுமே மறக்க முடியாத ஒரு சம்பவமாக இது நிலைத்துவிடும்.

புதிய தேசீயக் காலண்டர்

மார்ச் 22-ஆம் தேதி முதல் புதிய தேசீயக் காலண்டரை இந்திய சர்க்கார் அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறது. அன்று சூரியன் மேஷராசியில் நுழைகிறான். சாலிவாகன சகாப்தம் என்ற ஆண்டும் இதுவே.

மாதம்	மொத்த நாட்கள்	முதல் தேதி தொடங்கும் நாள்
சைத்ர	30 (லீப் வருஷத்தில் 31)	மார்ச் 22
வைசாக	31	ஏப்ரல் 21
ஜேஷ்ட	31	மே 22
ஆஷாட	31	ஜூன் 22
சிராவண	31	ஜூலை 23
பாத்ர	31	ஆகஸ்ட் 23
அச்வின	30	செப். 23
கார்த்திக	30	அக்டோ. 23
மார்கசீர்ஷ	30	நவம். 22
பௌஷ	30	டிசம். 22
மாக	30	ஜன. 21
பல்குன	30	பிப்ர. 20

போட்டோ என்றுலே, எவருமே அலாதிப் பிராணி ஆகிவிடுகிறுர்கள்; அதிலும் மணமகனுமாக இருந்துவிட்டால்......!

கல்யாணப் போட்டோக்கள்

மாலதி சந்தூர்

ஒரு குரூப் போட்டோ. அதை அடுத்துத் திருப்பதி வேங்கடாசலபதி படம், காஞ்சனமாலே போட்டோ, ஒரு கல்யாணப் போட்டோ. இவற்றின் பக்கத்தில் ஒரு சீன அழகி. அப்புறம் ஒரு சிறுவனுடைய போட்டோ, அண்டையில் ஆந்திரகேசரி, சத்திய நாராயண சுவாமி, காளிங்க மர்த்தனப் படங்கள். கடைசியில் மகாத்மாஜியின் போட்டோ. இதோடு வரிசை முடிந்துவிடவில்லே. அடுத்த சுவரிலும் படங்கள் தொடர்கின்றன.

மற்றப் போட்டோக்களேயெல்லாம் விட்டுவிட்டுக் கல்யாணப் போட்டோக்களேக் கவனிப்போம். சாதாரண நாட்களில் போட்டோ எடுத்துக்கொண்டாலும் எடுத்துக் கொள்ளாவிட்டாலும், புது மணத் தம்பதிகளேப் போட்டோ எடுக்கும் வழக்கம் இருக்கிறது. அது இரு வகைப்படும். கல்யாணப் பெண்ணும் பிள்ளேயும்மட்டும் இருப்பது ஒன்று. மற்ருென்று குரூப் போட்டோ - அதாவது, புரோகிதர் உள்படப் பெரிய கூட்டத்தோடு எடுத்துக்கொள்ளும் போட்டோ. இவற்றைத் தவிர, அடிக்கடி 'ஸ்நாப் ஷாட்'டுகளும் எடுப்பார்கள்.

எப்படித்தான் எடுக்கட்டுமே! கல்யாணப் போட்டோக்கள் மட்டும் விசித்திரமானவை. மற்றச் சமயங்களில் எடுத்த போட்டோக்களில் உற்சாகமாகவும் அழகாகவும் தென்படும் சிலர், கல்யாணப் போட்டோக்களில் மட்டும் எட்டுப் பட்டினி கிடந்தவர்போல் தோன்றுவார்கள். கல்யாணப் பெண்ணும் பிள்ளேயும் மூச்சே இல்லாதவர்கள் போலும் காற்றில் மிதப்பவர்கள் போலும் தோன்றுவார்கள்.

கல்யாணத்துக்கு முன் ஒரு வாரத்திலிருந்தே கல்யாணச் சந்தடியாலும் தூக்கம் இல்லாததாலும் இளேத்துவிட்டதுபோல் தென்படும் தம்பதிகளின் முகங்கள் போட்டோவிலும் சோர்வுடனே விழுகின்றன. சில நகரங்களில் நாகரிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கல்யாண அவசரமெல்லாம் முடிந்தபின், புது மணத் தம்பதிகளே ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்று போட்டோ எடுப்பார்கள். அப்படி எடுத்த போட்டோக்களில் முகம் சற்றுத் தெளிவாகவும் களேயாகவும் தென்படும். சில வீடுகளில் பாலும் பழமும் சாப்பிடுவது முதல் எடுத்த கல்யாணப் போட்டோக்கள் இருக்கும். கல்யாணப் பிள்ளே, நன்ருகக் குடித்துவிட்டு மயங்கியிருப்பவனேப் போல் தோன்றுவான். கல்யாணப் பெண், பூனேபோல் மணேயின் ஓர் ஓரத்தில் ஒடுங்கிச் சோர்வுடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருப்பாள். இந்த மாதிரி போட்டோக்களேப் பார்த்த யாருமே, அந்தத் தம்பதிகள் ஏதோ அவஸ்தைப்படுகிறுர்கள் என்றே நினேப்பார்கள். வாயைத் திறந்து சொன்னுல் நன்ருயிருக்காதே!

கல்யாணப் போட்டோக்களில் அழகாகவும் உற்சாகத்தோடும் தோன்றும் தம்பதிகள் சிலரே.

நான் கல்யாணப் போட்டோக்களே வேடிக்கையாகவும் ஆராய்ச்சி நோக்கோடும் பார்ப்பேன். அவை விநோதமாகவும் விசித்திரமாகவும் இருக்குமே அல்லாமல், சாதாரணமாகத் தோன்றுவதில்லே.

இருபது முப்பது வருஷங்களுக்கு முன் கல்யாணப் போட்டோக்கள் மட்டும் அல்ல; சாதாரணப் போட்

மூலம்: ஆந்த்ர ப்ரபா (தெலுங்கு), சென்னே.

டோக்களும் விசித்திரமாகவே இருந்தன. போட்டோகிராபர், ஸ்டாண்டில் தொங்கும் கறுப்புத் திரை மறைவில் போவதும் வருவது மாக இருந்துகொண்டு, கடைசியில் கிளிக் என்று போட்டோ எடுத்து முடிப்பதற்குள் அங்கே இருப்பவர் களை ஆட்டி வைத்துவிடுவான்.

பத்து நாள் காத்திருந்த பின், போட்டோ வரும். சிலர் போட் டோவில் விழுந்திருப்பார்கள்; சிலர் காற்றில் கலந்திருப்பார்கள். அசைந்துவிட்டவர்களின் முகம் உருத் தெரியாமல் போய்விடும். சிலர் சாய்ந்தும், சிலர் பாய்வது போலவும், சிலர் நாற்காலியி லிருந்து எழுந்திருப்பது மாதிரியும், சிலர் நாற்காலியோடு ஒட்டிக் கொண்டும் பல தினுசாகத் தோன்றுவார்கள். கண் இரண்டை யும் மூடிக்கொண்டவர்களும் இருப் பார்கள்.

அந்தக் காலத்துக் கல்யாணங் களில் லோலாக்குகள், புருச்சுகள், நீண்ட செயின், காலில் பூட்ஸ், மூக்குக் கண்ணுடி, ரிஸ்ட் வாட்ச் இவற்றை அணிந்துகொண்டு, போட்டோ எடுத்துக்கொள்வது ஃபாஷன். கல்யாணத்தில் ஐந்து நாளும் சாப்பாடோ தூக்கமோ சரியாக இல்லாமல் ஹோமப் புகை யில் உட்கார்ந்திருந்த தம்பதிகள் மிகச் சோர்ந்துதான் போயிருப் பார்கள். தூங்கி வழிவார்கள்.

கல்யாணத்தின்போது வாங்கிய பெரிய சரிகைப் புடைவையைக் கல்யாணப் பெண்ணுக்குச் சுற்றி விட்டு, மாப்பிள்ளைக்கு ஸூட் அணி வித்துப் போட்டோ எடுப்பார்கள்; அடடா! போட்டோதான் என்ன அழகு! அந்த மாதிரி போட்டோ ஒன்றைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒரு நாள் முழுவதும் சுலபமாகப் பொழுதைப் போக்கி விடலாம்.

இந்தக் காலத்தில்தான் ஆணுக்கோ பெண்ணுக்கோ 20, 25 வயசுக்குள் கல்யாணம் செய்வ தில்லை. 20, 30 வருஷங்களுக்கு முன் பாலிய விவாகந்தானே செய் தார்கள். பத்துப் பன்னிரண்டு வய சுள்ள பெண்ணுக்கு ஆக்ரா புடைவையைக் கட்டிவிட்டால், எப்படி இருக்கும்! கல்யாணத்தில் இடும் திலகம், கன்னத்தில் திருஷ் டிப் பொட்டு, கழுத்தில் மாலைகள், புருச், மூக்குக் கண்ணுடி (கண் சரி யாக இருந்தாலுந்தான்) கையில் நின்று போன கடிகாரம் இவற்றை அணிவித்து, அந்தப் பெண்ணை நாற்காலியில் உட்கார வைப்பார் கள். வெட்கம், பயம், புதுமை இவற்ருல் ஒடுங்கிய கல்யாணப் பெண், பயந்த பார்வையுடன் நாற் காலியின் ஓர் ஓரமாக உட்கார்ந் திருப்பாள். மாப்பிள்ளையோ மார்பை நிமிர்த்திக்கொண்டு யார் மேலோ பாயப் போகும் வீராதி வீரனைப்போல் உட்கார்ந்திருப் பான்.

அவ்வளவு பெரிய புடைவைக் குள்ளே யிருந்து அந்தப் பெண், பயந்து எட்டிப் பார்ப்பதுபோலும் மாப்பிள்ளை ராவணுசுரனைப் போலும் தோன்றுவார்கள். உண் மையில் மாப்பிள்ளை மிகவும் சாந்த மானவனுக இருக்கலாம்; கல்யா ணப் பெண் சூர்ப்பணகையாக இருக்கலாம். ஆனுல் கல்யாணப் போட்டோவில் மட்டும் மேலே சொன்னபடிதான் அவர்கள் தோன்றுவார்கள்.

எங்கள் வீட்டில் கறையான் வரும்போல் இருந்தது. பழைய பெட்டிகளைத் தட்டிக் கொட்டிச் சரிப்படுத்தினேம். அவற்றில் ஒன்று போட்டோ பெட்டி. அதில் இருந்தவை தாத்தா காலத்துப் போட்டோக்கள். எங்கள் குடும்பத் தாரும் அவர்களுடைய சிநேகிதர் களும் பல சமயங்களில் எடுத்துக் கொண்ட போட்டோக்கள் அவை. அவற்றில் கல்யாணப் போட்டோக் களும் இருந்தன.

மாப்பிள்ளை புல் ஸூட் அணிந் திருந்தான். இந்தக் காலத்துத் துப்பறியும் நாவலில் சொல்லியபடி கிருதா மீசை; மீசைகள் 'எலுமிச் சம் பழத்தை என்மீது நிற்க வைத்துக்கொள்வேன்' என்று சவால் விடுவதுபோல் இருந்தன. நாற்காலியில்நன்ருகத் தெரியும்படி வைத்துக்கொண்டிருந்த கையில், ஐந்து மோதிரங்கள் இருந்தன.

ஒரு கையில் பிடிலின் அடியைப் பிடித்துக்கொண்டு மோவாய்க்

கட்டையில் அதன் நுனியை அழுத்திக்கொண்டு, ஒரு கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு, ஒரு கல்யாணப் பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பன்னிரண்டு வயசுகூட இருக்காது. ஒல்லியாக, ஆக்ராப் புடைவைக்குள் மறைந்திருந்த அந்தப் பெண், யாராவது பலக்கப் பேசினுல்கூட அழுதுவிடுவாள் போல் இருந்தது. மிகக் கவலையோடு காமிராவைப் பார்த்துக்கொண் டிருந்திருக்கிருள். கையில் ஆண்கள் அணியும் ரிஸ்ட்வாட்ச் இருந்தது. எல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்ருல், அந்தப் பெண்ணுக்குப் பிடில் வாசிக்கத் தெரியாது! பிடிலுக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? சொல்லுங்கள்.

இதுபோன்ற விசித்திரமான போட்டோ மற்ருென்று கிடைத்தது: கல்யாணப் பெண் முன் மாதிரியே ஒல்லியான சிறு பெண். மூக்குக் கண்ணுடி தவிர மேலே சொன்ன மற்ற அலங்காரங்களை எல்லாம் அவளும் செய்துகொண்டிருந்தாள். அவளுக்கு முன்னுல் ஒரு மேஜை. மேஜைமேல் ஒரு கிராமபோனைத் திறந்து வைத்து, சாவி கொடுத்து வைத்திருந்தார்கள். பக்கத்தில் ஒரு வயசுக் குழந்தை ஒருவன் இருந்தான். கல்யாணப் பெண் ஒரு கையை மேஜைமேல் ஊன்றி, ஒரு தோளைக் கோணலாகத் தூக்கி, தலையைப் பின்னுக்குத் தள்ளி, ஆத்திரத்தோடு பல்லைக் கடித்துக்கொண்டு நிற்பதாகத் தோன்றியது.

மாப்பிள்ளை ஸூட் அணிந்திருந்தான். ஹிட்லர் மீசை. நன்ருக அழுதுவிட்டு, முகத்தை அலம்பிக்கொண்டு வந்ததுபோலவும், கூப்பிட்டால் மறுபடியும் அழுது விடுவான்போலவும் நின்றுகொண்டிருந்தான். நாம் போட்டோவைப் பார்த்தவுடன், இந்தக் கல்யாணப் பெண் அவனை அடித்திருப்பாளோ என்றுதான் தோன்றும்.

இப்படியெல்லாம் போட்டோ எடுத்துக்கொள்வதோடு இவற்றின் பிரதிகளை எல்லாருக்கும் வேறு கொடுத்துவிடுவார்கள்!

எனக்குச் சிநேகிதி ஓர் அம்மாள் இருக்கிருள். அவள் தன் கல்யாணப் போட்டோவை வர்ணித்தபோது, எனக்குச் சிரித்துச் சிரித்து வயிற்று வலியே எடுத்துவிட்டது.

அந்த அம்மாள் சிறிது இரட்டை நாடி. இருந்தாலும் சற்று இளைத்துப் போயிருந்தாள். நாலு பேராகச் சேர்ந்து, அவளுக்குப் பின்னலில் பூ வைத்துத் தைத்தார்களாம். வீட்டில் இருப்பவர்கள் எல்லாருடைய நகைகளையும் அவளுக்குப் போட்டார்கள். கடைசியில் நாலிழைச் சந்திரஹாரம் ஒன்றைப் புடைவையின்மேல் தெரியும்படி பூட்டிவிட்டார்கள். அது மிகவும் நீளமானது. பெரிய பெரிய தொட்டிப் பூக்கள் போட்ட புடைவையைக் கட்டினுர்கள். இறுகிய பின்னலை முன்னுல் இழுத்து விட்டார்கள். கழுத்தைத் திருப்ப முடியாமல் முதுகைக் கூன் போட்டுக்கொண்டு கல்யாணப் பெண் போட்டோவில் நின்றிருக்கிருள்.

மாப்பிள்ளையின் தலைப் பாகையையும் நெற்றிப் பொட்டையும் பார்த்தால் தெருவிலிருந்த ஒரு பக்கவடாக்காரன் எங்கேயோ ஓர் இடத்தில் பட்சணத் தட்டையும் கைத் தடியையும் வைத்துவிட்டுப் போட்டோவுக்காக வந்ததுபோல் இருந்தது. அந்தப் போட்டோவைப் பார்த்தவுடன் நமக்கு இந்த எண்ணம் தோன்ருவிட்டாலும், அந்த அம்மாள் பேச்சைக் கேட்டவுடன், 'இவர் உண்மையில் பட்சணம் விற்பவர்தான்' என்று நமக்குத் தோன்றுகிறது.

கல்யாணப் போட்டோக்களைப் பற்றி இப்படியே எவ்வளவு வேண்டுமானுலும் எழுதலாம். தம்பதிகளில் ஒருவரைப்போல் மற்ருெருவர் விழுவதில்லை. அநேகமாக, சுபாவமாகப் போட்டோவில் விழுவதில்லை. கல்யாணப் பந்தலில் கலகலவென்று சந்தோஷமாக இருக்கும் தம்பதிகளைக்கூட, போட்டோ என்னும்போது ஒரு சோர்வு ஆட்கொண்டுவிடுகிறது. அது போட்டோகிராபர் தப்போ, இவர்கள் தப்போ? யாருக்குத் தெரியும்!

சமாதான வாழ்விலும் சில காரியங்களுக்கு
அணு சக்தி இப்போதே உதவத் தொடங்கிவிட்டது.

அணுக்கப்பலும் கடிகாரமும்

★

உலகத்திலேயே முதல்முதலாக அணுசக்தியால் இயங்கும் வியாபாரக் கப்பலைக் கட்டுவதற்கு, ஜனாதிபதி ஐஸன்ஹோவர் உத்தரவு போட்டிருக்கிறார்.

உத்தரவை அறிவிக்கும்போது, ''அணுசக்தியால் இயங்கும் இந்த மாதிரி சாமான் கப்பல்களும் பிரயாணிக் கப்பல்களும் உலக நாடுகளை ஒரு நாள், சமாதான முறையில் வர்த்தகத்தில் இணைத்துவிடும்'' என்று ஜனாதிபதி சொன்னார்.

புரட்சிகரமான இந்தக் கப்பலின் வேகம் 21 நாட் (கடல் மைல்) இருக்கும். 100 பிரயாணிகளை இது ஏற்றிச் செல்லும். 12,000 டன் சரக்குகளை ஏற்றிக்கொள்ள இதில் வசதி இருக்கும். 1959-ஆம் வருஷம் இது கட்டி முடிந்து கடலில் செல்வதற்குத் தயாராகிவிடும். முடிந்தால் அதற்கு முன்பே கட்டி முடிக்கவும் முயற்சி நடக்கிறது.

கப்பல்கள் அணுசக்தியால் இயங்குவதில் கப்பல்காரர்கள் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். யுரேனியம்-235 போன்ற அணுசக்தி எரிபொருளின் ஒரு சிறு அளவிலிருந்து மிகப் பிரமாதமான அளவுள்ள சக்தி வெளிக்கிளம்புவது இதற்கு ஒரு காரணம். சொல்லப்போனால், இந்த எரிபொருளில் ஒரு ராத்தலிலிருந்து (453-கிராம்) கிளம்பும் சக்தி, 700 டன் எரி எண்ணெயிலிருந்து கிளம்பும் சக்திக்குச் சமமாக இருக்கும்.

தவிர, அணுசக்திக் கப்பல்கள், இன்றைய கப்பல்களை விட இன்னும் நீண்ட பிரயாணம் செய்வதுடன் இன்னும் அதிகப்படியான சரக்குகளைக் கொண்டு போகும். அதிக வேகத்தில் அதிகப்படியான தடவைகள் செல்லும்; இப்போதுள்ள கப்பல்களைப் போல் துறைமுகங்களில் அதிக நேரம் இவை தங்கவேண்டியிராது; ஏனென்றால், அடிக்கடி எரிபொருள்களை எடுத்துக்கொள்ளும் அவசியம் இல்லாமல் வெகு தூரம் இவை செல்ல முடியும்.

கப்பல் கட்டுவதில் பிரபலம் வாய்ந்த நியூபோர்ட் நியூஸ் ஷிப்பில்டிங் அண்டு டிரை டாக் கம்பெனியார், அணுசக்திக் கப்பல்களின் அநேக அநுகூலங்களைச் சமீபத்தில் எடுத்துக் கூறினார்கள். அவற்றில் சில இவை:

1. அணுசக்தி எரி பொருள் அளவில் மிகவும் சுருக்கமாக இருக்கிறது. ஆகவே, இப்போது எரி எண்ணெய் அடைத்துக்கொள்ளும் இடமும் அதன் பாரமும் குறையும். கப்பலில் அதிகச் சரக்கு ஏற்றிக்கொள்வதற்கு இந்த அளவுக்கு வசதி கிடைக்கும்.

மாடல் அணுக்கப்பல்

மூலம்: யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸ், சென்னை.

2. அணுசக்தி எரி பொருளின் அளவு மிகச் சுருக்கமாக இருப்பதால், அதிலிருந்து கிடைக்கும் சக்தி, யூனிட்டுக்கு யூனிட் எரி எண்ணெயின் சக்தியை விட மலிவாவது சாத்தியம்.

3. அணுசக்தியால் ஓடும் பிரயாணிக் கப்பல்களுக்குப் புகை போக்கிகள், காற்று உள்ளே வரும் குழாய்கள், நீராவிக் குழாய்கள் தேவையில்லை. எனவே, அதிகப் பிரயாணிகளை ஏற்றிக் கொள்ள அவற்றில் இட வசதி ஏற்படும். அணுவைப் பிளப்பது எரிக்கும் வேலையல்ல; ஆகவே, அதற்குக் காற்று ஸப்ளையோ புகை போக்கியோ வேண்டியதில்லை.



அணுக்கடிகாரத்தை நிபுணர் ஜெர்ரால்டு தொட்டு ஆராய்கிறார்

அணுசக்திக் கப்பல்களுக்கும் சாதாரணக் கப்பல்களுக்கும் இடையே உள்ள முக்கியமான வித்தியாசம் இதுதான்: அணுசக்திக் கப்பலில் உஷ்ணத்தை, எரி எண்ணெய் அல்லது நிலக்கரிக்குப் பதிலாக அணுசக்தி ரியாக்டர் உண்டாக்குகிறது; ரியாக்டரிலிருந்து வரும் உஷ்ணம், நீராவியை உண்டு பண்ணுகிறது; நீராவி, கப்பலின் சக்கரங்களை இயக்குகிறது.

இனி, முதல்முதலாக அமெரிக்காவில் தயாராகி யிருக்கும் அணுக் கடிகாரத்தைப்பற்றிய விவரங்களைக் கவனிக்கலாம்.

இந்தக் கடிகாரத்துக்கு 'அட்டாமிக்ரான்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது 300 வருஷம் ஓடினால், 5 செகண்டு நேரந்தான் முன் பின்னாகப் பிசகுமாம். இன்னும் அபிவிருத்தி செய்த அணுக் கடிகாரம் இறுதியாக வரும்போது, அது 30,000 வருஷத்தில் ஒரே ஒரு செகண்டுதான் பிசகிக் காட்டுமாம்.

இந்த நூதன கடிகாரத்துக்குப் 'பெண்டுலம்' போல் உதவுவது ஸீஸியம் என்ற மூலப் பொருளின் அணுவே. ஸீஸியம் அணு ஒரு செகண்டுக்கு 919 கோடியே 20 லட்சம் ஸைக்கிள் விகிதம் ஆடிக்கொண்டே இருக்கும். இந்த அலை அதிர்ச்சி விகிதம் மாறவே மாறாது. ஸீஸியம் அணுவை வாக்குவம் ட்யூப் ஒன்றுக்குள் வைத்திருக்கிறார்கள். அது இப்படி ஆடிக்கொண்டே, ரேடியோ ட்ரான்ஸ்மிட்டர் கருவியைப் போல் தன் அலைகளை அனுப்புகிறது. ரேடியோ ரெஸீவர் கருவி போன்ற மற்றொரு கருவி அந்த அலைகளை வரவேற்று வேலை செய்கிறது.

எனவே, கைக்கடிகாரங்களில் உள்ள பாலன்ஸ் சக்கரம் அல்லது சுவர்க் கடிகாரங்களில் உள்ள பெண்டுலம் போலவே ஸீஸியம்

இந்த அணுக்கடிகாரத்தில் பயன் படுகிறது.

அணுக்கடிகாரம் 500 பவுண்டு (225 கிலோகிராம்) நிறை இருக்கிறது. இதன் விலை 50 ஆயிரம் டாலர். இது என்றென்றும் ஓயாமல் நிரந்தரமாய் ஓடிக்கொண்டிருக்கும். இதுவரையில் பத்து அணுக் கடிகாரங்கள் செய்திருக்கிறார்கள்; ஒன்பது கடிகாரங்கள் விற்றுப்போயின.

பல வருஷ காலம் தீவிரமாய் ஆராய்ந்ததன் பலனாகவே இந்தக் கடிகாரம் உருவாகியிருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் 10-லட்சம் டாலர் செலவழிந்தது. மஸாசுஸெட்ஸ் மாகாணத்தில் உள்ள மால்டன் நகரத்து நேஷனல் கம்பெனியார் இதைத் தயாரித்தவர்கள். எலெக்ட்ரானிக் ஆராய்ச்சியில் பிரசித்தி பெற்றவர்கள் அந்தக் கம்பெனியார்.

நியூ யார்க் நகரில் உள்ள கொலம்பியா யூனிவர்ஸிட்டியின் புரொபஸர் ஐ. ஐ. ரபி என்பவர் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் அணுவின் மைய அமைப்புப் பற்றி அடிப்படையான சில உண்மைகளைக் கண்டுபிடித்தார். அதற்காக 1944-இல் அவருக்கு நோபல் பரிசும் கிடைத்தது. அவர் கண்டு பிடித்த ரகசியங்களை ஆதாரமாகக் கொண்டே இந்த அணுக் கடிகாரத்தை அமைத்திருக்கிறார்கள்.

சகல அணுக்களுமே மிக நுண்மையான ஒலிபரப்பு நிலையங்களைப் போன்றவை என்று தெரிய வந்தது. ஒவ்வோர் அணுவும் செகண்டு ஒன்றுக்கு இத்தனை அதிர்ச்சி என்று பிரத்தியேகமான ஒரு விகிதத்தில் அலைகளைப் பரப்பிக்கொண் டிருக்கிறது. இந்த அணுக்களின் அலைபரப்பு அதிர்ச்சி விகிதத்தை நிர்ணயிப்பதற்காக 'ட்யூன்' செய்யும் முறைகளைப் புரொபஸர் ரபி கண்டு பிடித்தார்.

இந்த அணு அலை அதிர்ச்சிகளை, இயற்கைப் பெண்டுலமாக உபயோகித்து அணுக் கடிகாரம் செய்யலாம் என்று அவர் ஒரு திட்டம் வகுத்தார். வேறு எந்த முறையில் தயாரிக்கும் கருவியையும் விட மிகவும் கணக்காகக் காலத்தை அளக்கக் கூடியது அணுக் கடிகாரந்தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'ஐக்கிய அமெரிக்க நேஷனல் ப்யூரோ அவ் ஸ்டாண்டார்ட்ஸ்' என்ற இலாகாக்காரர்கள், வாஷிங்டன் நகரில் சில அணுக் கடிகார மாடல்களை ஆராய்ச்சிச்சாலையில் தயாரித்துப் பார்த்தார்கள். ஆனாலும், வியாபார ரீதியில் முதல் முதலாகத் தயாராகியிருக்கும் சிறந்த அணுக்கடிகாரம் 'அட்டாமிக்ரான்' என்பதுதான்.

வான ஆராய்ச்சி, நீண்ட தூரக் கப்பல் பிரயாணம், ரேடியோ செய்திப் போக்கு வரத்து, ஸர்வே, நிலப்படம் தயாரிப்பது இந்தத் துறைகளிலெல்லாம் இந்தக் கடிகாரத்தால் பெரும் அபிவிருத்தி ஏற்படும். ஒளியின் வேகத்தை மிகவும் கணக்காக நிர்ணயிப்பது, ஐன்ஸ்டீனின் ரெலட்டிவிட்டி சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்கள் சிலவற்றைச் சோதித்துப் பார்ப்பது இவை போன்ற பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும் இந்தக் கடிகாரம் பெரிதும் உபயோகப்படும் என்று எதிர் பார்க்கிறார்கள்.

'அட்டாமிக்ரான்' என்ற அணுக் கடிகாரத்தை இப்போதே ஐக்கிய அமெரிக்க விமானப் படையினர் உபயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். 'நவார்ஹோ' என்ற நீண்ட தூர விமானப் போக்குவரத்து முறை ஒன்றை அவர்கள் பரீட்சை செய்து வருகிறார்கள். ஒரு விமான நிலையத்தைச் சுற்றிலும் 2,000 மைல் தூரம் உள்ள வட்டத்துக்குள் பறக்கும் சகல விமானங்களுக்கும் நிலையத்தின் தூரத்தையும் திசையையும் தெரிவிப்பதுதான் இந்த முறை. இதுபற்றிய பரீட்சையில் தான் 'அட்டாமிக்ரானை' உபயோகிக்கிறார்கள்.

மஸாசுஸெட்ஸ் இன்ஸ்டிட்யூட் அவ் டெக்னலஜி என்ற பயிற்சி நிலையத்தில் பௌதிக சாஸ்திரப் புரொபஸர் பதவி வகிக்கும் டாக்டர் ஜெர்ரால்டு என்பவரின் உதவி கொண்டே 'அட்டாமிக்ரான்' கருவியைத் தயாரித்தார்கள். அவர் ஏற்கனவே புரொபஸர் ரபியின் துணைவராக இருந்தவர்.

நிலம் போனாலும் அவனுக்குப் பணம் வந்தது; ஊருக்கு நலம் வந்தது!

சம்பல் நதிக் கரையில்

கே. எஸ்.

அபிவிருத்தித் திட்டம் இப்போது சம்பல் பிரதேசத்தில் அமலுக்கு வரப்போகிறது. முன்னே இந்த இடம் எல்லா வகையிலும் பிற்போக்காகவே இருந்தது; ரெயில் பாதையும் ரஸ்தாவும் மட்டுந்தான் அங்கே அமைந்திருந்தன. லட்சக் கணக்கான டன் நிலக்கரியை 800 மைலுக்கு அப்பால் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து ரெயிலில் இங்கே எடுத்து வருவார்கள். சம்பல் திட்டம் நிறைவேறிவிட்டால் 2 லட்சம் கிலோவாட் மின் சார சக்தி இங்கேயே கிடைக்கும். ராணா பிரதாப சாகர் அணைக்கு அருகிலுள்ள பிரதேசம் காடும் மலையும் செறிந்தது; அதிலும் சம்பல் பிரதேசம் மற்ற இடங்களை விட அழகாக இருக்கும். சுலியா நீர்வீழ்ச்சியைப்பற்றி டாட் என்ற சரித்திர ஆசிரியர், ''இயற்கைத் தேவி இங்கே சிறப்பான ஆடை உடுத்துக் காட்சியளிக்கிறாள்'' என்று வர்ணித்திருக்கிறார். பரோலியிலுள்ள கோயில்களும் அதேமாதிரிதான் அமைந்திருக்கின்றன. ''இந்து சிற்பத்துக்கும் கட்டிடக் கலைக்கும் சிறந்த உதாரணமாக இவை விளங்குகின்றன'' என்று அவைகளைப்பற்றி டாட் குறிப்பிட்டிருக்கிறார். இந்த இடமே பில்லர்கள் வாழும் கரடு முரடான காட்டுப் பிரதேசம். இங்கே புலி, சிறுத்தை, மான், காட்டுப் பன்றி முதலிய விலங்குகள் ஏராளம். இங்கே வாழும் பில்லர்கள் இன்னும் வில் அம்புகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தம் முன்னோரைப் போலவே துளியும் குறி பிசகாமல் அம்பு எய்கிறார்கள் என்றால் பாருங்களேன்!

''சம்பல் அணை இருக்கிறதே, தெரியுமா அந்த இடம்?'' என்று அங்கிருந்த பில்ல வேடன் ஒருவனைக் கேட்டேன். ஆற்றங்கரையோரம் தேங்கியிருந்த ஒரு குட்டையைப் பார்த்தாற்போல் குத்திட்டு நிற்கும் பாறை ஒன்றில் அவன் அமர்ந்திருந்தான். நீரின் ஆழத்தில் சற்றுச் சாம்பல் நிறமுள்ள ஓர் உருவம் (மீன்) தெரிந்தது; அதையே அவன் கவனித்துக்கொண்டிருந்தான். மிகவும் ஆழம். ஆகவே, அதன்மேல் அம்பு எய்வது சாத்தியமில்லை.

''தெரியுமே! யாருக்குத்தான் சம்பல் பிரதேசம் தெரியாது? என் நிலத்தை யெல்லாங்கூட எடுத்துக்கொண்டு விட்டார்களே'' என்று, அந்த மீன் நெளிவதையே விடாமல் கவனித்தபடி சொல்லலானான்: ''இருந்தாலும், நிறையப் பணம் கொடுத்தார்கள்.''

''அப்புறம் என்ன செய்வதாக உத்தேசம்?''

அவன் தன் தூணியிலிருந்து ஓர் அம்பை எடுத்து வில்லில் வைத்து எய்யத் தயாராக இருந்தான். மீன் மேலே வந்தது. ஆனாலும், மறுபடியும் கீழே போய் விட்டது. வேடன் வில்லைக் கீழே வைத்துவிட்டுச் சகஜமாக உட்கார்ந்துகொண்டு, ''இன்னும் நிறைய நிலம் வாங்குவேன். மின்

மூலம்: யோஜனா (ஆங்கிலம்: 9-2-'57), டில்லி-8.

சாரம் வந்தால் வாய்க்கால் பாசன வசதி ஏற்படும்; கிணறுகளிலிருந்து பம்பு வைத்து வேறு இறைக்கலாம். எனக்கு அந்த விஷயமெல்லாம் தெரியுங்கோ'' என்முன். பிறகு பழைய ரொட்டித் துண்டு ஒன்றை எடுத்துத் தண்ணீரில் போட்டான். மீன் மறுபடியும் மேலே நெளிந்து வந்தது. வேடன் வில்லை எடுத்து இரண்டு விரலாலும் அம்பை இழுத்துத் தொடுக்கத் தயாரானுன். (கிருஷ்ண பகவானுடைய மறைவுக்குப் பில்ல வேடன் ஒருவனின் அம்பே காரணமாக இருந்தது. அது முதல் பில்லர்களால் சுட்டுவிரலை உபயோகிக்க முடிவதில்லையாம். நடு விரலைத்தான் அவர்கள் உபயோகிக்கிருர்கள்.) அம்பின் நுனியும், விடாமல் மீனின் போக்கையொட்டி அசைந்துகொண் டிருந்தது.

''அணையை எழுப்பி முடித்து மின்சார நிலையம் வேலை செய்யத் தொடங்கிவிட்டால் அப்புறம் நீ இப்படி மீன் வேட்டை ஆடுவதை அநுமதிப்பார்களா என்ன?''

அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கூர்ந்து ஒரே நினைவாகக் காதண்டை எட்டும்படி வில்லின் நாணை இழுத்து அம்பை எய்தான். மீன் அந்த ரொட்டித் துண்டை விழுங்க வாயைத் திறந்தது. அதே சமயம் அதன் வாயில் மின்னலைப்போல் அம்பு பளிச் சென்று பாய்ந்தது. சளபளவென்று நாலு பக்கமும் நீர் சிதறும் ஓசை கேட்டது. கொஞ்சம் ரத்தமும் நீரில் பரவியது. வேடன் குட்டையிலே இறங்கி அந்த மீனைப் பிடித்து அம்பையும் உருவி எடுத்துக்கொண்டான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி! ''மீன் இருக்கும் இடத்தில் பில்லன் இருப்பான்; பில்லன் இருக்கும் இடத்தில் மீன் இருக்கும் என்று ஒரு பழமொழி இந்தப் பக்கத்தில் உண்டு. அது முழுக்க முழுக்க உண்மை'' என்முன் வெற்றி தோன்ற.

வோட்டுக் கணக்கு

உதவாக்கரையான ஓர் ஆள் சிறு நகரம் ஒன்றில் சட்டசபைத் தேர்தலுக்கு நின்றார். வீடு வீடாகச் சென்று வோட்டுக் கேட்டார். கேட்டு முடிந்ததும் வோட்டர் ஜாபிதாவில் ஒவ்வொரு வோட்டர்பற்றியும் பென்ஸிலால் ஷராக்கள் குறித்துக்கொண்டே நடந்தார்.

ஒரு வீட்டில் ஒரு கிழவி இருந்தாள். இந்த ஆளைக் கண்டவுடனேயே அவள் ஆத்திரங்கொண்டு, ''ஏ மூதேவி, இங்கே எங்கே வந்தாய்? போ, வெளியே!'' என்று சொல்லி, விளக்குமாற்றைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டாள்.

''ஒரே ஒரு நிமிஷம், அம்மா. தேர்தலில் எனக்கு உங்கள் வோட்டைத் தயை செய்து போடவேண்டும்'' என்று ஆள் நயமாய் வேண்டினர்.

''வோட்டா வேண்டும், வோட்டு? சட்டசபையில் உட்கார உனக்கு என்ன தகுதி இருக்கிறது? தெருவிலே உன்னைத் திரியவிடுவதே தப்பாயிற்றே! உன்னை ஜெயிலில் அல்லவா தள்ள வேண்டும். போ என்றால், போ; மரியாதையாய் ஓடிவிடு'' என்றாள் கிழவி.

ஆள் இனி ஒரு நிமிஷம் தாமதித்தாலும் ஆபத்து என்று எண்ணி வெளியேறினர். தெருவுக்கு வந்ததும், வோட்டர் ஜாபிதாவில் அந்தக் கிழவியின் பெயருக்கு நேரே ஒரு ஷரா எழுதி வைத்தார்: 'இது சந்தேகமான வோட்டு.'

—'நெவார்க் ஸ்டார் லெட்ஜெர்'

காராமணியின் கதை

ஆர். வீராசாமி

உண்ண நல்ல காய், அழகு சொரியும் பூ, பழம் பெருமை வாய்ந்த பயிர் - இதுதான் காராமணி. இந்தக் 'காராமணிப் பெண்'ணின் ரஸமான வரலாற்றை எழுதியிருக்கும் இவர், கோயம்புத்தூர்ச் சிறு தானிய ஆராய்ச்சிப் பண்ணையின் ஆராய்ச்சியாளர்.

இளவேனில் காலத்தில் ஒரு நாள், மனோகரமான மாலை நேரம். உலகப் பிரசித்தி பெற்ற சென்னை மரீனா கடல் கரை. கண்ணுக்கு எட்டிய தூரம் பரந்து கிடக்கும் அலைகடல். தொலை தூரத்தில், வான முகட்டில், வானும் கடலும் சந்திப்பது போன்ற ஒரு பிரமை. இயற்கை வனப்பு, கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. மாலை நேரம் ஆனபடியால் கடற்கரையின் வெண்மணல் பரப்பில் ஜனக் கூட்டம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. சுக துக்கங்கள் மண்டிக் கிடக்கும் அன்றாட வாழ்க்கையில் மன அமைதியையும், ஓய்வையும் கருதி நகர மக்கள் கடல்கரைக்குச் செல்லுவது இயல்புதானே. நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன்.

மணல் பரப்பில் என் அருகே ஒரு சிறு குடும்பம். கணவன், மனைவி, பத்து வயசுப் பையன், ஒரு குழந்தை. மரீனா கடல் கரையில், அதுவும் மாலை நேரத்தில், திண்பண்ட விற்பனைக்கா பஞ்சம்? முதலில் முந்திரிப் பருப்பு-'காஷ்யூநட்' என்று ஆங்கில பாஷையில் மாறுவேடம் பூண்டு-வந்தது. பையன் அர்த்த புஷ்டியோடு தந்தையைப் பார்த்தான். சற்று நேரத்தில் பையனின் முகம் மலர்ந்தது. கையில் முந்திரிப் பருப்போடு அவன் வாயும் அசை போட ஆரம்பித்தது. இது முடிந்ததும், பட்டாணிக் கடலை வியாபாரம். அடுத்தபடியாக, 'கரம் காராமணிச் சுண்டல்' வந்து சேர்ந்தது. ('கரம்' என்றால், வேறு ஒன்றும் அல்ல; 'சூடான' என்று தான் பொருள்.) மீண்டும் பையன் முரண்டு செய்து வெற்றி கண்டான்.

இதையெல்லாம் பார்த்து மகிழ்ந்த எனக்குத் தத்துவ ரீதியில் எண்ணங்கள் தோன்றலாயின. இயற்கையில்தான் எத்தனை விந்தைகள்! தாவர உலகம் கைம்மாறு கருதாது மனித குலத்துக்கு எவ்வளவு மகத்தான சேவை செய்து வருகிறது! உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு, வாழ்க்கைக்கு அவசியமான சாமான்கள், சுவைக்கக் காய் கறிகள், இனித்த பழங்கள், மணங் கமழும் மலர் வகைகள், உல்லாசப் பூஞ்சோலைகள், சிறந்த மருந்துகள் இவை எல்லாம் தாவரங்கள் மனிதனுக்கு அளிக்கும் ஒப்பற்ற அன்புக் காணிக்கைகள். காட்டிலே கிடைக்கும் கணக்கற்ற செல்வத்தைத்தான் என்னவென்று சொல்லுவது! தானியங்களையும் பயறுகளையும் கொண்டு எத்தனை விதம் விதமான தின்பண்டங்களைத் தயார் செய்து சாப்பிடுகிறோம்! கடைசியாக, நான் கண்ட காராமணி என் சிந்தையைக் கிளறியது. சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது.

மூலம்: மேழிச் செல்வம் (தமிழ்: ஜனவரி '57), விவசாய டைரெக்டர், சென்னை.

''தம்பி'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். ஒரு பெண் நின்றுகொண் டிருந்தாள்.

''தாங்கள் யார்?''

''என்னைத் தெரியவில்லையா? நான்தான் காராமணி. என்னைப் பற்றித்தானே சிந்தித்துக்கொண் டிருந்தாய்? என் கதையை உனக்குச் சொல்லலாம் என்று வந்தேன்.''

''ஆஹா! பேஷாகச் சொல்லுங்கள். கதை கேட்பதென்றால் எனக்கு மிகவும் பிரியம்'' என்று சொல்லி, நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

கல்லும் கவி பாடும் தெய்வத் தமிழகத்தில் காராமணி கதை சொல்ல ஆரம்பித்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நான் கேட்ட கதையைத்தான் நேயர்களோடு பங்கு கொள்ளுகிறேன்:

'பயறுகள்' (Pulses) என்ற பொதுப் பெயர் கொண்ட துவரை, அவரை, மொச்சை, உளுந்து, பச்சைப் பயறு முதலியவை நமக்குச் சிறந்த உணவாகப் பலவகையிலும் பயன்படுகின்றன. காராமணியும் பயறு வகைகளில் ஒன்றாகும். தட்டைப்பயறு என்று இதற்கு வேறு ஒரு பெயரும் உண்டு. ஆங்கில பாஷையில் இதைக் 'கௌபீ' (Cowpea) என்று அழைப்பார்கள். புரதம் (Protein) என்னும் மூலப்பொருள் நம்முடைய உடலின் தசை வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியம். புரதச் சத்து இல்லாத உணவு பயனற்ற உணவு, காராமணிப் பருப்பில், மற்ற முக்கிய உணவுச் சத்துக்களோடு, புரதச்சத்தும் மிகுதியாக இருக்கிறது. காராமணியில் 24.6 சத விகிதம் புரதம் அடங்கியிருக்கிறது. ஆகவே, இது ஒரு சிறந்த உணவுப்பொருள்.

காராமணி நம் நாட்டின் பூர்விகப் பயிர். ஆதிகாலம் முதற்கொண்டே நம் நாட்டில் பயிராகி வருகிறது. இதில் பல ரகங்கள் உண்டு. செடியின் தோற்றம், காயின் நீளம், விதையின் நிறம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த ரகங்களைப் பகுத்திருக்கிறார்கள். கொத்தாக வளரும் செடிகளைக் கொண்டது ஒரு ரகம்; படரும் செடிகளைக் கொண்டது மற்றொரு ரகம். காராமணியின் பூக்களும் விதைகளும் அந்த அந்த ரகத்துக்கு ஏற்றபடி வெவ்வேறு நிறங் கொண்டவை. தூய வெண்மை, ஊதா ரேகை படர்ந்த வெண்மை, ஊதா, இளஞ்சிவப்பு, குங்குமச் சிவப்பு முதலிய நிறங்களோடு பூக்கள் தென்படும். காராமணிப் பயிர் பூத்துக் குலுங்கும் காட்சி, பச்சை நிற ரத்தினக் கம்பளத்தின் மேல் ஆயிரக் கணக்கான வர்ணஜாலப் பட்டுப் பூச்சிகள் சிறகடித்துப் பறப்பது போல் தோற்றம் அளிக்கும். விதைகளிலும் வெவ்வேறு வர்ணங்கள் தென்படுகின்றன. பால்போன்ற வெண்ணிறம், கறுப்புப் புள்ளிகளோடு கூடிய வெண்மை, கருஞ்சாம்பல் நிறம், கனகாம்பர நிறம், கருஞ்சிவப்பு, சுத்தக் கறுப்பு முதலியவை சாதாரணமாய்க் காணும் நிறங்கள். ரகங்களுக்குத் தக்கபடி காய்களின் நீளமும் மாறுபடும். சாதாரணமாய், காராமணிக் காய்கள் 6 அங்குலத்திலிருந்து 15 அங்குலம் வரைக்கும் வளரும். குட்டை ரகக் காராமணிக் காயில் நார் அதிகமாக இருப்பதால், கறியாகச் சமைப்பதற்கு அவ்வளவு உகந்ததல்ல. ஆனால்,இதன்பயறுகள்சிறந்த உணவாகப் பயன்படுகின்றன. நீண்ட ரகக் காராமணிக் காய், சுவை மிக்க கறிவகைகள் சமைப்பதற்கு மிகவும் சிறந்தது. இதன் பச்சைக் காய்களில், சதையும் சுவையும் அதிகம்; நார் குறைவு. காய் சாதாரணமாக 15 அங்குல நீளம் வளரும். தென் கன்னடத்தைச் சேர்ந்த மங்களூரில் பயிராகும் ஒரு தினுசுக் காராமணியின் காய் 39 அங்குல நீளம் வரை வளர்கிறது. ஒரு காராமணிக் காயின் நீளம் சுமார் ஒரு கஜம்! காய் தளதளப்பாகச் சதை பிடித்திருக்கும்; நார் குறைந்திருக்கும். ஆகவே, கறி சமைப்பதற்கு இந்த ரகம் மிகவும் சிலாக்கியமானது. இதற்கு, 'யானைக் காராமணி' என்று ஒரு காரணப் பெயர் உண்டு.

கேரளத்தில், காராமணியின் இலையும் கீரைபோல் பயன்படுகிறது.

காராமணி சிறந்த பசுந்தாளுரப் பயிர். அறுவடையான பின்பு, காராமணிச் செடிகளைக் கலப்பை கொண்டு மடக்கி உழுது மண்ணோடு மண்ணாக மட்கும்படி செய்தால், நிலம் வளம் பெறும். சாதாரணமாக, எந்தப் பயிரும் அது வளரும் நிலத்தின் வளத்தைக் குறைக்கும். ஆனால், காராமணி முதலிய பயறு வகைகள், தாங்கள் வளரும் நிலத்தை வளம் பெறச் செய்கின்றன. கேட்பதற்குக் கொஞ்சம் அதிசயமாகத்தானே இருக்கிறது! நல்லது: வளரும் காராமணிச் செடி ஒன்றை வேரோடு பூமியிலிருந்து பெயர்த்து எடுத்து அதன் வேர்ப்பாகங்களைக் கூர்ந்து கவனியுங்கள். வேர்க் கிளைகளில், உருண்டை வடிவமான பல சிறு முடிச்சுகள் இருப்பதைக் காணலாம். இந்த முடிச்சுகளை உண்டாக்கியவை 'பாக்டீரியா' (Bacteria) என்னும் ஒரு வகை நுண்ணிய ஜீவராசிகள் தான். காராமணி போன்ற பயறு வகை இந்தப் 'பாக்டீரியா'க்களின் வேரில்தான் வாழும். இந்த அதிசய ஜீவராசிகள், காற்றிலுள்ள உப்பு வாயுவைக் (Nitrogen) கிரகிக்கின்றன; அப்படிக் கிரகித்த உப்பு வாயுவை, தாம் வாழும் செடிகளுக்கும் நிலத்துக்கும் அளிக்கின்றன. உப்பு வாயு, மண் வளத்துக்கு மிகவும் அவசியம். இந்த உப்பு வாயுவை அதிகரிக்கும் நோக்கத்தோடுதான் நிலத்துக்கு மாட்டு எரு, பசுந்தாளுரம், அம்மோனியம் சல்ஃபேட் முதலிய உரங்களை இடுகிறோம். காராமணி போன்ற பயறு வகைகளைப் பயிர் செய்வதன் மூலம், எந்த விதமான செலவும் இல்லாமல், நிலத்துக்கு உப்பு வாயு கிடைக்கிறது; மண்ணும் வளம் அடைகிறது. ஆகவே, சோளம், கம்பு, தினை, வரகு, பருத்தி முதலிய பயிர்களோடு கலப்புப் பயிராகவோ அல்லது மாற்றுப் பயிராகவோ காராமணியைப் பயிரிட்டு மண்வளத்தைச் சிறப்பித்துக்கொள்ளலாம்; வருவாயை

புலத்தில் காராமணிக் கொடிகள் மண்டிக் கிடக்கும் காட்சி

யும் அதிகரிக்கச் செய்யலாம். காராமணியைப் பிற தானிய வகைப் பயிர்களுடன் கலப்புப் பயிராகப் பயிரிடும்போது காராமணியின் வேர் முடிச்சுக்களில் சேகரமாகும் உப்பு வாயுவைத் தானிய வகைப் பயிர்களும் உபயோகித்துக்கொண்டு செழிப்பாக வளர்ந்து பலன் அளிக்கின்றன.

தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி இந்த மாவட்டங்களில் காராமணியை மிகுதியாய்ப் பயிரிடுகிறார்கள். பிற பயறு வகைகளைப் போல் அல்லாமல் தட்டைப் பயறு பருவ வரம்புள்ளது அல்ல. ஆகவே, இதை எல்லாக் காலங்களிலும், மானாவாரிப் பயிராகவோ இறைப்புப் பயிராகவோ சாகுபடி செய்யலாம். மழை மிகுந்த பிரதேசங்களிலும் இது செழித்து வளர்கிறது. தஞ்சை நிலங்களிலும், நெல் பயிர் அறுவடைக்குப் பின்பு இதைப் பயிரிடலாம். காராமணிச் சாகுபடியில் கிடைக்கும் பொருள்கள் இவை: காராமணிப் பயறு, பச்சைக் காய்கள், பசுந்தாள் உரம், பசுந்தீவனம்.

கோயம்புத்தூர்ச் சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்திய ஆராய்ச்சிகளின் பயனாக, காராமணியில் நான்கு வகைச் சிறப்பு வித்துக்களைக் கண்டு பிடித்திருக்கிறோம். அவை ஸி. 57, ஸி. 521 என்ற பயறு விளைச்சல் ரகங்கள்; இ. ஸி. 419, இ ஸி. 455 என்ற கறிக்குதவும் காய் ரகங்கள். முந்திய இரண்டு தினுசுகளும் 135 நாளில் அறுவடைக்குத் தயாராகும்; பிந்திய இரண்டு வகைகளும் 90 நாளில் பலன் அளிக்கும். இவை எல்லாம் நல்ல காய்ப்புத் தரும் வகைகள். எல்லா மாவட்டங்களுக்கும் தகுதியானவை. ஓர் ஏக்கருக்குச் சராசரி 500 ராத்தல் பயறு விளைச்சல் கிடைக்கும். விவசாயப் பெருமக்கள் இவற்றைப் பயிரிட்டுப் பயனடையலாம்.

காராமணியைப்பற்றி மற்றொரு ரசமான விஷயம் இது: சந்திரன் நாம் வாழும் இந்தப் பூமண்டலத்தின்மேல் பல வகைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறான். பௌர்ணமி நாளில், பூர்ண சந்திரன் பால் போன்ற தன் அமுத கிரணங்களை அள்ளி வீசி வான வீதியில் பவனி வரும்போது, அலைகடல் தன் அலைக் கைகளை அணைத்தையும் கொட்டி முழக்கி ஆரவாரம் செய்யும். இதைப் போலவே சந்திரனுக்கும் மனித உள்ளத்துக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. பௌர்ணமி அன்று மனநோய் கொண்டவர்களுக்கு நோயின் கொடுமை மிகுதியாக இருக்கும். ஆகவே, பௌர்ணமியைக் 'கனத்த நாள்' என்று சொல்லுவது வழக்கம். இதே போல், காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலரும் நோயான காதல் நோயும், நிலா நாளில் கொஞ்சம் அதிகப்படியாகவே துன்புறுத்துவதாக இலக்கியங்களில் வரும் காதலர்கள் சொல்லி வருந்துவார்கள். பூர்ண சந்திரன், காதலர்களின் 'குல தெய்வம்'. இரவில் தான் குமுதம், மல்லிகை, சம்பங்கி முதலியவை மலரும். அவை சந்திரனுடைய வரவு கண்டே குதூகலத்தால் பூத்துக் குலுங்குவதாகச் சொல்வது ஒரு மரபு.

இப்போது, காராமணிக்கும் சந்திரனுக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சற்றுக் கவனிக்கலாம். காராமணி பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே புஷ்பிக்கும். அது நாளடைவில் காயாக மாறி விதைகளை உற்பத்தி செய்கிறது. இதற்கு ஆண் சத்தும் பெண் சத்தும் கலக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் பூவின் அமைப்பைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுவது நலம். பூவில் ஆண் உறுப்புக்களான மகரந்தக் கேசரங்களும், (Stamen) பெண்ணுறுப்பாகிய சூலகமும் (Pistil) தனித் தனியே அமைந்திருக்கும். சூலகத்தின் அடிப்பாகத்தில் சூல்பையும் (Ovary) அதற்குள்ளே நுண்ணிய சூல்களும் (Ovules) தென்படும். இந்தச் சூல்கள்தான் விதைகளாக வளர்ச்சி அடையும். சூல்பையிலுள்ள சூல்கள் விதைகளாக வளர்வதற்கு, மகரந்தக் கேசரங்கள் உற்பத்தி செய்யும் மகரந்தத் தூள்கள் (Pol-

len) சூலகத்தின் நுனிப்பாகமான சூல் முடியைச் (Stigma) சேர வேண்டும். இந்தச் சேர்க்கைக்கு மகரந்தச் சேர்க்கை (Pollination) என்று பெயர். வித்துக்கள் உற்பத்தியாவதற்கு இந்தச் சேர்க்கை மிக மிக அவசியம்.

ஆணுறுப்புக்களான மகரந்தக் கேசரங்களின் நுனிகளில் மெல்லிய ஜவ்வால் அமைந்த சிறு பைகள் இருக்கும். இந்தப் பைகளுக்குள்ளே, மகரந்தத் தூள்கள் உற்பத்தியாகி, பக்குவம் அடைந்ததும் வெளிப்படும். முதிர்ந்த நிலையில், மகரந்தக் கேசரங்களின் பைகள் வெடித்து, மகரந்தத் தூள்கள் பல பக்கமும் சிதறும். இதற்கு ஆங்கிலத்தில் 'ஆந்தீஸிஸ்' (Anthesis) என்று பெயர். காராமணியின் பூவில், இப்படி மகரந்தத் தூள்கள் வெளிப்படுவதற்கும் சந்திர ஒளிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக, கோயம்புத்தூர்ச் சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்திய பரிசோதனைகள் மூலம் கண்டு பிடித்திருக்கிறோம். பௌர்ணமி போன்ற நிலவொளி மிகுந்த இரவுகளில், காராமணிப் பூவில், மகரந்தப் பைகள் வெடித்து மகரந்தத் தூள்கள் சிதறுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு நிலவொளி அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மகரந்தச் சிதறல் அதிகமாக இருக்கும். இருண்ட இரவுகளில் மகரந்தச் சிதறல் மிகவும் குறைவு. காதலர்களை ஆட்டிவைப்பது போல, காராமணியையும் சந்திரன் ஆட்டி வைக்கிறான்!

நான் கேட்டேன்: ''இவ்வளவு அருமை பெருமைகளை உடைய தங்களைத் தமிழ் நாடு இன்னும் சரியாகப் புரிந்துகொண்டு நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வில்லையே; ஏன்?''

''இது விசித்திரமான நாடு. அருமை, பெருமை மட்டும் இருந்தால் போதாது. விளம்பரமும் பிரசாரமும் கூடவே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதுவும் குடத்தில் வைத்த விளக்குப் போலத்தான் ஆகிவிடும். ஆகையால்தான், என் கதையை உன்னிடம் சொன்னேன். கொஞ்சம் விளம்பரம் செய்து விடு'' என்று சொல்லிக் காராமணிப் பெண் கலகல வென்று சிரித்தாள்.

சிரிப்பொலி கேட்டுக் கண் விழித்தேன். கடல் கரையின் மணல் பரப்பில், என் அருகே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை சிரித்துக்கொண்டிருந்தது.

வருவதும் போவதும்

''பணம் எங்கேதான் போகிறதோ என்று ஆச்சரியப்படுவதை நிறுத்துங்கள்'' என்று ஆத்திரத்தோடு கணவனை எச்சரித்தாள் ஒரு பெண். மேலும் தொடர்ந்து, ''அது வரும் வழியைப்பற்றிக் கவலைப்படுவது ஒன்றுதான் உங்கள் வேலை'' என்றாள்.

—'கேப் ஆர்கஸ்'

நினைப்பதும் மறப்பதும்

என் ஆயுள் குறுகி வரும் இந்த முதுமையில் எனக்கு இரண்டே இரண்டு வருத்தங்கள் உண்டு: நான் சரியாக நடந்துகொள்ளும்போதெல்லாம் அதை யாரும் நினைவு கூர்வதில்லை; நான் தவறாக நடந்துகொள்ளும் போதெல்லாம் அதை யாரும் மறப்பதில்லை.

—எஸ்ரா பென்ஸன், யு. எஸ். ஏ. விவசாய மந்திரி.

கர்ணனும் அர்ஜுனனும்

★

துரோணாசாரியர் ஒரு சமயம் கௌரவர்களையும் பாண்டவர்களையும் தாம் கற்றுக் கொடுத்த வித்தையில் பரீட்சை செய்யலானார். பெரிதான மேடை ஒன்றைக் கட்டச் செய்தார். சுற்றிலும் மக்கள் இருந்து பார்ப்பதற்கும் வசதி செய்வித்தார். நாட்டு மக்களும் பீஷ்மர், விதுரர், திருதராஷ்டிரன், குந்தி முதலியோரும் அங்கே கூடியிருந்தார்கள். கௌரவரும் பாண்டவரும் துரோணாசாரியரையும் கிருபாசாரியரையும் வணங்கி ஆசி பெற்று ஒவ்வொருவராகத் தம் திறமையை மேடையில் ஏறிக் காண்பிக்கலானார்கள். அதைக் கண்டு, கூடியிருக்கும் சபையோர் வியப்படைந்தார்கள். எப்பொழுதும் பகை கொண்டவரான பீமனும் துரியோதனனும் கதையை எடுத்துக்கொண்டு மேடையில் வந்தார்கள். இருவரும் மத யானைகளைப்போல் இடசாரி வலசாரியாகச் சுற்றி வந்தார்கள். விதுரர், காந்தாரிக்கும் திருதராஷ்டிரனுக்கும் பிள்ளைகளின் செயலை விளக்கிக் கூறி வந்தார்.

இருவரும் திறமையுடன் போரிட்டார்கள். பார்ப்பவரில் சிலர் துரியோதனனையும் சிலர் பீமனையும் புகழ்ந்து, இரு கட்சிகளாகப் பிரிந்துவிட்டார்கள். கலங்கிய கடல் போல் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். இதைக் கண்டு துரோணர் அசுவத்தாமனை அனுப்பிப் பீமனுக்கும் துரியோதனனுக்கும் சமாதானம் ஏற்படும்படி செய்தார்.

பிறகு துரோணர் மேடையில் ஏறிக்கொண்டார். முழங்கிக் கொண்டிருக்கும் வாத்தியங்களை நிறுத்தினார். சபையோரைப் பார்த்து, 'என் புதல்வனைவிடப் பிரியமான அர்ஜுனனைப் பாருங்கள், இப்பொழுது. அவன் அஸ்திரம் அறிந்தவர்களில் சிறந்தவன். இந்திரனுடைய மகன். இந்திரனின் தம்பியான மகாவிஷ்ணுவுக்கு நிகரானவன்'' என்று கூறினார்.

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

உடனே அர்ஜுனன் வில்லையும் அம்பருத் தூணியையும் எடுத்துக் கொண்டு தங்கக் கவசத்துடன் ஆசிரியரின் ஆசி பெற்று மேடையில் நின்றான். அவனைக் காண மழை வில்லும் மின்னலும் சேர்ந்த அந்தி மேகம் போல் தோன்றியது. மக்கள் அவனைக் கண்டு ஆனந்தம் எய்தினார்கள். சங்கு ஒலித்தது. வாத்தியங்கள் முழங்கின.

''இவன் குந்தியின் மகன். தேவராஜனின் மைந்தன். கௌரவரைக் காப்பவன். வில் வித்தையில் சிறந்தவன். தர்மம் செய்பவரில் முதன்மையானவன். ஒழுக்கத்துக்கு உறைவிடம்'' என்று சபையோர் கூறிக்கொண்டார்கள். இதைக் கேட்டுக்கொண் டிருந்த குந்தியின் உள்ளம் பொங்கியது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன. திருதராஷ்டிரன் விதுரன் வாயிலாக நடப்பதை அறிந்தான். ''மூன்று அக்கினிகள் போன்ற குந்தியின் மைந்தர்களால் நான் பாக்கியசாலி ஆனேன். என் குலம் உயர்ந்தது'' என்று சொல்லிக் கொண்டான். சபையோரின்ஆனந்த ஆரவாரம் ஒருவாறு அடங்கியது. அர்ஜுனன் ஆசிரியரிடமிருந்து தான் கற்ற அஸ்திரத் திறமையைக் காட்டலானான். ஆக்னேயாஸ்திரத்தினால் அக்கினியையும், வாருணாஸ்திரத்தால் நீரையும், வாயவ்யாஸ்திரத்தால் வாயுவையும், பர்ஜன்யாஸ்திரத்தால் மேகங்களையும் படைத்தான். அந்தர்த்தானாஸ்திரத்தால் மறைந்து நின்றான். கணப்பொழுதில் உயரமாகவும் குட்டையாகவும் தன்னைக் காட்டிக்கொண்டான். முதலில் தேரின் நுகத்தடிக்கு அருகிலும், மறு கணம் தேரின் நடுவிலும், அடுத்த நிமிஷம் தரையிலும் அவன் தெரிந்தான். வில்லில் பலவிதமான திறமையைக் காண்பித்தான். கத்தியிலும் கதையிலும் அவன் காட்டிய திறமையைச் சபையோர் பார்த்துப் பரவசமானார்கள். தோமரம், பாசம், பிண்டிபாலம்,



கோடரி முதலிய ஆயுதங்களிலும் தன் தேர்ச்சியை அர்ஜுனன் சபையோருக்குக் காட்டினன்.

இவ்வாறு அர்ஜுனன் பரீட்சை முடியும் தருணத்தில் இருந்தது. வாசல் பக்கத்தில் இடி முழக்கம் போன்ற சத்தம் கேட்டது. மலைகள் சிதறுகின்றனவோ, பூமி பிளந்துவிட்டதோ என்று சிலர் சந்தேகமுற்றனர். அனைவரும் வாசல் பக்கம் பார்த்தார்கள். பாண்டவர்கள் துரோணரைச் சூழ்ந்திருந்தார்கள். அதைக் காண ஐந்து நட்சத்திரங்களுடன் கூடிய சந்திரனைப்போல் இருந்தது. துரியோதனனை அவனுடைய சகோதரர்கள் எல்லாரும் அசுவத்தாமனுடன் ஆயுதங்களை உயர்த்திப் பிடித்துக்கொண்டு சூழ்ந்து நின்றார்கள்.

அதே சமயத்தில் ஜனத்திரளை விலக்கிக்கொண்டு கர்ணன் மேடையை நோக்கி வந்தான். தங்கப் பனை மரம் போன்ற உயரம், சிங்கத்தினுடையது போன்ற உடல் அமைப்பு, ஒப்பற்ற வீரம், அதற்கேற்ற பராக்கிரமம் இவற்றோடு கூடிய கர்ணனைச் சபையோர் ஆச்சரியத்தால் மலர்ந்த கண்களுடன், 'இவன் யார்' என்று தமக்குள் கேட்டுக்கொண்டு, இமை கொட்டாமல் பார்த்திருந்தார்கள்.

பகைவரை வெல்லும் கர்ணன் மேடையில் ஏறினன். இடி முழக்கம் போன்ற குரலுடன் தம்பி என்று தெரியாத அர்ஜுனனைப் பார்த்து, ''பார்த்தா, நீ இங்கே செய்து காட்டிய எல்லாச் செயல்களையும் நானும் செய்வேன். நீ நிகரற்றவன் என்று பெருமை கொள்ள வேண்டாம்'' என்று கூறி முடிப்பதற்குள், சபையோர் அனைவரும் யந்திரத்தால் தூக்கப்பட்டவர்போல் எழுந்துவிட்டார்கள். துரியோதனன் மகிழ்ந்தான். வெட்கம், கோபம் இரண்டும் அர்ஜுனனைச் சூழ்ந்துகொண்டன.

பிறகு துரோணரின் அநுமதி பெற்றுக் கர்ணன் அர்ஜுனன் செய்த யாவற்றையும் செய்தான். உடனே துரியோதனன் தம்பிமார்களுடன் கர்ணனைத் தழுவிக் கொண்டு சொல்வான்: ''தோள் வலியுற்ற கர்ணு, அதிருஷ்ட வசத்தால் நீ வந்தாய். நீ எங்கள் மானத்தைக் காத்தாய். நானும் கௌரவரின் ராஜ்யமும் உனக்கே சொந்தம். விருப்பம்போல் நீ அநுபவித்துக்கொள்ளலாம்.''

இதைக் கேட்ட கர்ணன், ''அரசே, எனக்கு மற்றவை ஒன்றும் வேண்டாம். உம் நட்புத் தான் வேண்டும். நான் அர்ஜுனனோடு தனியாகச் சண்டை செய்ய விரும்புகிறேன்'' என்ருன்.

அர்ஜுனன் இந்த வார்த்தையால் தன்னைக் கர்ணன் இகழ்ந்ததாகக் கருதினன். நூறு சகோதரருக்கிடையே மலைபோல் நிற்கும் கர்ணனைப் பார்த்து, ''அழைக்காமல் வந்தவருக்கும், கேட்காமல் பதில் கூறுபவருக்கும் உள்ள உலகத்துக்கு உன்னை நான் என் பாணங்களால் அனுப்புவேன், கர்ணு'' என்று சொன்னன்.

கர்ணன், ''அர்ஜுன, இந்த மேடை எல்லோருக்கும் பொது. நீ ஏன் இழிவான சொற்களைக் கொட்டுகிருய்? நீ அம்புகளால் எனக்குப் பதில் சொல். நம் குருவின் முன்னிலையிலேயே உன் தலையைப் பாணங்களால் அறுக்கிறேன்'' என்ருன்.

உடனே அர்ஜுனன் துரோணரின் அநுமதியையும் ஆசியையும் பெற்ருன். சகோதரர் அவனைத் தழுவிக்கொண்டார்கள். போருக்கு வந்தான் அர்ஜுனன். தம்பிமாருடன் துரியோதனன் கர்ணனை அணைத்துக்கொண்டான். அம்புடன் வில்லை எடுத்துக்கொண்டு கர்ணன் மேடைக்கு வந்தான்.

திருதராஷ்டிரனின் மக்கள் கர்ணன் பக்கமாக நின்ருர்கள். துரோணர், கிருபர், பீஷ்மர் முதலியோர் அர்ஜுனன் பக்கமாக நின்ருர்கள். இப்படி அங்கு இரு பிரிவுகள் ஏற்பட்டன. விஷயம் அறிந்ததும் குந்தி மூர்ச்சை அடைந்தாள். அவளை விதுரர் தேற்றினர்.

இவ்வாறு இருவரும் போர்க்கோலம் பூண்டு நிற்கும்பொழுது கிருபாசாரியர் கர்ணனிடம் கூறுவார்: ''பாண்டுவின் மகன் - குருவம்சத்தில் பிறந்தவன்-பார்த்தன்-

உன்னோடு போரிடப் போகிறான். கர்ணா, நீயும் உன்னுடைய குலம், பெருமை முதலியவற்றைக் கூறு. உன் அந்தஸ்தைத் தெரிந்து கொண்டு அர்ஜுனன் உன்னோடு துவந்துவ யுத்தம் செய்ய வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிப்பான். தாழ்ந்த நிலையில் இருப்பவருடன் அரச குமாரர் போர் செய்ய மாட்டார்கள்.'' இதைக் கேட்டவுடன் கர்ணனின் முகம் மழையில் அடிபட்ட தாமரை போல் ஒளி இழந்தது.

துரியோதனன் உடனே, கிருபரை நோக்கி, ''ஆசிரியரே, நல்ல குலத்தில் பிறந்தவன், சூரன், சேனையை நடத்திச் செல்பவன் என்று மூன்று வகையாக அரசர்களைப் பிரிக்கிறார்கள், தர்மத்தை அறிந்தவர். நான் இதோ கர்ணனை அங்க தேசத்துக்கு அரசனாகச் செய்துவிடுகிறேன். அர்ஜுனன் அரசனாகிய கர்ணனோடு போரிடுவதில் தவறில்லை'' என்றான். திருதராஷ்டிரன், பீஷ்மர் முதலியோரிடம் விஷயத்தைக் கூறி அநுமதி பெற்றான். கர்ணனைத் தங்க ஆசனத்தில் அமரச் செய்து தங்கக் குடங்களில் புண்ணிய தீர்த்தங்களை வரவழைத்து மந்திரத்தோடு அங்க ராஜ்யத்தின் அரசனாகப் பட்டாபிஷேகம் செய்வித்தான். அரசனுக்கு வேண்டிய கிரீடம், கொற்றக் குடை முதலிய எல்லாவற்றையும் அவனுக்குத் துரியோதனன் அளித்தான்.

அப்பொழுது கர்ணன் துரியோதனனைப் பார்த்து, ''அரசே, தாங்கள் எனக்குக் கொடுத்த ராஜ்யத்துக்கு ஏற்றபடி நான் என்ன தங்களுக்குச் செய்ய வேண்டும்? சொல்லுங்கள்'' என்றான். அதற்குத் துரியோதனன், ''ஆயுள் வரையில் நம் இருவருக்கும் குன்றாத நட்பு இருக்கவேண்டும். இதைத்தான் விரும்புகிறேன்'' என்றான். கர்ணன் ''அப்படியே ஆகட்டும்'' என்றான். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு ஆனந்தமுற்றார்கள்.

அப்பொழுது விஷயம் அறிந்து அதிரதன் தோளில் இட்ட ஆடை நழுவ, வேர்வை பெருக, நடுங்கும் உடலுடன், கழியை ஊன்றிக் கொண்டே அங்கே வந்தான். அவனைப் பார்த்தவுடன் வில்லைக் கீழே வைத்துக் கர்ணன் தந்தை என்ற மரியாதையுடன் வணங்கினான். அதிரதனும் அபிஷேகத்தால் ஈரமான கர்ணன் தலையை ஆனந்தக் கண்ணீரால் மீண்டும் நனைத்தான்.

இதைப் பார்த்திருந்த பீமன், 'கர்ணன் தேரோட்டியின் மகன்' என்று தீர்மானித்துக்கொண்டான். ''கர்ணா, ராஜபுத்திரனான அர்ஜுனனோடு போரிட உனக்குத் தகுதி இல்லை. உன் குலத்துக்கு ஏற்ற தார்க் குச்சியைக் கையில் எடுத்துக் கொள். நீ அங்க ராஜ்யத்துக்கு அரசனாவதற்கும் தகுதியற்றவன்'' என்று பலவாறு இகழ்ந்து பேசினான். இதைக் கேட்டுக் கர்ணன் துடிக்கும் உதட்டுடன் பெருமூச்சு விட்டான். ஆகாயத்தில் இருக்கும் ஆதித்தனைப் பார்த்தான்.

துரியோதனன் கோபத்தோடு மத யானை தாமரை ஓடையிலிருந்து கிளம்புவதுபோல் சகோதரக் கூட்டத்திலிருந்து குதித்து எழுந்தான். பீமனைப் பார்த்து, ''பீமா, நீ கூறுவது சரியல்ல; க்ஷத்திரியர் பலவான்களுடன் போரிடுவதுதான் முறை. உலகில் பெரியோர் சூரருக்கும் நதிகளுக்கும் மூலத்தை விசாரிக்கும் வழக்கம் இல்லை. உலகத்தை எரிக்கும் அக்கினி நீரிலிருந்துதான் உண்டாயிற்று. ததீசி முனிவரின் எலும்பால் உண்டாக்கப்பட்டது வஜ்ராயுதம். துரோணாசாரியர் குடத்திலிருந்து உதித்தார். கிருபாசாரியர் நாணல் செடியில் தோன்றியவர். குண்டலமும் கவசமும் தரித்துத் தேவர்களுக்கேற்ற லட்சணங்களுடைய கர்ணன் எவ்வாறு தேரோட்டிக்கு மகனாகப் பிறந்திருக்க முடியும்? பெண் மானுக்குப் புலி பிறக்குமா? அங்க ராஜ்யத்தை மட்டுமல்ல. உலகையே ஆளும் திறமை அவனுக்கு உண்டு. அது போகட்டும். நான் கர்ணனை அரசனாக்கியது யாருக்குப் பிடிக்கவில்லையோ, அவர் தேரில் ஏறிக்

கொண்டோ நடந்தோ வில்லை வளைத்துப் போருக்கு முன் வரட்டும்'' என்றான்.

இவ்வாறு, துரியோதனன் கூறியதைக் கேட்டவுடன் சபையோர், ''ஹா, ஹா'' என்றார்கள். பலர், ''பேஷ்! பேஷ்'' என்று கொண்டாடினார்கள். இதற்கிடையில் ஆதித்தன் அஸ்தமித்துவிட்டான். துரியோதனன் கர்ணன் கையைப் பிடித்துக்கொண்டு விளக்கைத் தாங்கியவர் முன் செல்ல, மேடையிலிருந்து அரண்மனைக்குச் சென்றான். துரோணர், கிருபர், பீஷ்மர் முதலியோருடன் பாண்டவர் தம் இருப்பிடம் சென்றார்கள். ஜனங்களில் சிலர் அர்ஜுனனையும், சிலர் கர்ணனையும், மற்றும் சிலர் துரியோதனனையும் புகழ்ந்துகொண்டே போனார்கள். துரியோதனனுக்குக் கர்ணன் நட்புக் கிடைத்தவுடன் அர்ஜுனனுடைய பயம் நீங்கிவிட்டது. யுதிஷ்டிரரும் கர்ணனுக்கு நிகரான வில்லாளி இல்லை என்றே கூறிவிட்டார்.

இப்படிக் கௌரவ - பாண்டவ பரீட்சை, சூரியனின் மறைவு காரணமாக முடிவுற்றது.

வித்தியாரம்பம்

சிறுவனுக்குப் பள்ளிக்கூட வயசு வந்துவிட்டது. அவனுடைய தாய் அவனை உற்சாகப்படுத்திப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுவதற்காக, அவனுக்குப் புதிய சட்டை துணியெல்லாம் வாங்கி உடுத்துவிட்டாள். பள்ளிக்கூடத்திலே உள்ள பல குழந்தைகளும் அவனைப் பார்க்கப் போகும் காட்சியையெல்லாம் வர்ணித்தாள். அங்கே கொண்டுபோய் விட்டாள்.

மாலையிலே பையன் திரும்பி வந்தான். முதல் நாள் மிக நன்றாகவே அவன் நடந்துகொண்டதாகச் செய்தி எட்டியது.

மறுநாள் காலையில் இன்னமும் அவன் தூங்கிக்கொண்டிருந்தான். தாய் போய் எழுப்பினாள்.

''எதற்காக?''

''நேரம் ஆகிறதே; பள்ளிக்கூடம் போக வேண்டாமா?''

''இன்றைக்குமா?'' என்று கேட்டான் பையன்.

—மேரி ஜேன் க்ராஃப்ட், 'பஞ்ச்'.

கணவனும் மனைவியும்

ஓஹியோ கோர்ட்: தன் தாயை விடாமல் கூடவே அழைத்து வைத்துக்கொண்டிருக்கும் மனைவியைக் கணவன் போஷிக்க வேண்டிய தேவையில்லை.

ஓக்லஹாமா கோர்ட்: கணவனை மனைவி விளையாட்டாகச் சித்திரவதை செய்துகொண்டே யிருப்பதை நாம் ஆதரிக்கக் கூடாது.

ரோடு தீவு கோர்ட்: தன் சம்பளம் முழுவதையும் வீட்டுக்குக் கொண்டு போகிற கணவன் மூடன்; தனக்காகச் சிறிது பணத்தை அவன் மிகுத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

—'பரேட்', யு. எஸ். ஏ.



தோட்டங்களின் சரிதம்

'ஸீரி'

இயற்கையிலோ செயற்கையிலோ எப்படி உருவானாலும் எழில் நிறைந்த தேசீயச் சொத்தாகும் இந்தத்தோட்டங்கள்.

இயற்கையையும் மனிதனையும் பிரிக்காமல் ஒன்று சேர்த்துப் பார்க்க வேண்டுமானால் பாரத நாட்டுக்குத்தான் போக வேண்டும் என்று மேலைநாட்டாரில் பலர் கருதுகிறார்கள். நாம் தீர்த்த யாத்திரை செய்யும் பல இடங்கள் இயற்கையின் நடுவே நிலை பெற்றவையாகும். ஆலயங்களில் பூஜைக்கு நாம் இயற்கையின் புன்னகையாம் பூக்களைத்தான் உபயோகிக்கிறோம். மங்கையர் தம் எழிலை எடுத்துக் காட்ட மலரைத்தான் சூடுகிறார்கள். சிறந்த விருந்தினரையும் பூமாலையிட்டுப் பூச்செண்டு கொடுத்துத்தான் வரவேற்கிறோம். வறட்டுச் சாஸ்திர நூல்கள்கூடத் தம்மை ரசமாகச் செய்துகொள்ள இயற்கை வர்ணனைகளில் ஈடுபடுகின்றன. 'லீலாவதி' என்ற கணித நூலாசிரியர்கூட இயற்கையின் வனப்பை வெகுவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இப்படியெல்லாம் இயற்கையின் இயல்பான அழகை ரசித்து வந்ததால்தான், நம் முன்னோர் செயற்கை முறையில் மரம் செடி கொடிகளை வளர்க்க அதிகமாக ஈடுபடவில்லையோ ஒரு வேளை!

ஆலயங்களைச் சுற்றிலும் நம் நாட்டில் இயற்கையின் அழகு செழித்திருப்பதைக் காணலாம். அழகிய தாமரை ஓடைகளும் மல்லிகைக் கொடிகளும் பிற பூஞ்செடிகளும் நிறைந்திருப்பதை இன்றும் பார்க்கலாம். ஆனால் இவற்றில் அழகை விட இவற்றின் உபயோகம் தான் சிறந்து நிற்கிறது.

இன்று நம் நாட்டில் இருக்கும் தோட்டங்களுக்கு உருவம் அளித்துச் சென்றவர், மொகலாய அரசர்களும் அரசிகளுந்தான். ஜஹாங்கீரும் நூர்ஜஹானும் லாகூர், ஸ்ரீநகர் இரண்டிலும் அழகிய தோட்டங்களை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். ஷாஜஹான் காலத்தில் டில்லியில் நூறு உல்லாசத் தோட்டங்கள் இருந்தனவாம். இன்றும் சிறிதும் குன்றாத வனப்புடன் துவங்கும் ரோஷனார், குட்ஸிய, க்வீன்ஸ் என்னும் மூன்று தோட்டங்களும் அந்தக் காலத்தில் ஏற்பட்டவையாகும்.

பகைவரிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள மலர் நிறைந்த தோட்டங்களில் மொகலாய மன்னர்கள் மறைந்திருந்தார்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 20-1-'57), கோழிக்கோடு.

களாம். விருந்தினரை உபசரிக்கவும் அந்தப்புரப் பெண்மணிகளுடன் இன்புற்றிருக்கவும் தோட்டங்களை மொகல் மன்னர்கள் உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் பொதுமக்களின் உபயோகத்துக்காகத் தோட்டங்கள் இல்லை என்பதை நாம் குறிக்கத்தான் வேண்டும். மொகலாய ராஜ்யம் தலை குனிந்தவுடன் அயல் நாட்டுக் கம்பெனிக்காரரும் அவருடைய நண்பர்களும் அந்தத் தோட்டங்களைப் பங்கிட்டு எடுத்துக் கொண்டார்கள்.

'ப்ளாஸி' யுத்தம் இந்திய சரித்திரத்தில் முக்கியமான ஒரு சம்பவம். நம் நாட்டில் வெள்ளையரின் ஆட்சிக்கும் ஒரு வகை மரத்துக்கும் தொடர்பு உண்டு என்பதைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். 'ப்ளாஸி' என்னும் சொல் பலாச மரத்தையே குறிக்கிறது. கிளைவும் ஸிராஜ்உத்தௌலாவும் கைகலந்த இடம் பலாச மரங்கள் அடர்ந்த ஒரு சதுப்பு நிலமாகும். தீச்சுவாலைபோல் துலங்கும் பலாசம் பூக்களைச் சரித்திர ஆசிரியர்கள் கிளைவின் வெற்றிச் சின்னம் என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சி நம் நாட்டில் பல கெடுதிகளை உண்டாக்கி விட்டுக் கள்ளிச் செடிகளைப்போல் படர்ந்துவிட்டது. ஆனால் அந்தக் கள்ளியில் ஒருவகைப் பூ கண்களுக்கு இன்பம் அளிப்பதுபோல் தோட்டங்களைக் காக்கும் வேலைகளில், அவர்களுடைய ஆட்சி ஈடுபட்டது நமக்கு இன்பம் அளிக்கிறது.

சமையல் கலையிலும் சங்கீதத்திலும் ஆங்கிலேயரின் அறியாமையைக் குறித்துப் பல கேலிகள் செய்வது உண்டு. ஆனால் தோட்டக் கலையில் ஆங்கிலேயர் தலை நிமிர்ந்து நிற்கும் திறமை கொண்டவர்கள்தான். பச்சை ரத்தினக் கம்பளம் விரித்தது போன்ற புல் தரை ஏற்படுத்தும் முறையை நம் மக்களுக்குக் கற்பித்தவர் வெள்ளையர்தான். இங்கிலாந்தில் போர் நடக்கும்போது அதிக உணவுப் பொருள் உற்பத்தி செய்யப் பசும் புல் தரையை உழ நேர்ந்தது. அப்போது ஆங்கிலேயரின் உள்ளம் வெதும்பியது. இன்று நம் நாட்டில் துலங்கும் புகழ் பெற்ற தோட்டங்கள் எல்லாம் ஆங்கிலேயரின் தோட்டக் கலை அறிவுக்குத் தக்க சான்று.

உல்லாசத் தோட்டத்துக்கும் பிற தோட்டத்துக்கும் சிறிய வேறுபாடு ஒன்று உண்டு. அழகையே முக்கியமாகக் கருதி உருவாக்கியது உல்லாசத் தோட்டம். மற்றது சாஸ்திர முறையையும் மக்களின் அவசியத்தையும் முன்னிட்டு வளர்த்தது.

ஸாலமன் என்ற அரசன் பூஞ்செடிகளையும் பிற செடிகளையும் சேர்த்து வைத்தே வளர்த்தார். எகிப்து மக்களும் பாபிலோனிய மக்களும் மரம் செடி முதலியவற்றின் விசேஷங்களைச் சாஸ்திரீய முறையில் அறிந்திருந்தார்கள். ஆனால் செடிகளில்தான் தம் கவனத்தை அதிகமாக அவர்கள் செலுத்தி வந்தார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்பு அரிஸ்டாட்டில் என்பவர் அழகிய சிறிய தோட்டத்தைச் சாஸ்திரீய முறையில் தாம் அமைத்ததாக எழுதியிருக்கிறார். பிறகு கி. பி. முதல் நூற்றாண்டில் அந்தோணியஸ் காஸ்டர் என்பவர் ரோமாபுரியில் சாஸ்திரீயமான தோட்டத்தை வளர்த்துப் பாதுகாத்ததாக அறிகிறோம். பிறகு ஆயிரம் ஆண்டுகள் இருளில் ஆழ்ந்து கிடந்த ஐரோப்பியர், கி. பி. பதினைலாவது நூற்றாண்டில் விவசாய சாஸ்திரத்துக்குப் புத்துயிர் அளித்துப் பிரசாரம் செய்தார்கள். இந்தக் காலத்தில் இத்தாலி போன்ற இடங்களில் இத்தகைய தோட்டங்கள் உருவாகி இருக்கின்றன. அமெரிக்கா நாடு தான் இந்த முறையில் இப்போது முன்னேறியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

லண்டனுக்கு அருகில் உள்ள 'க்யூ' (Kew) தோட்டம் உலகத்தில் சிறந்த சாஸ்திரீயமான தோட்டங்களில் முதல் இடம் பெற்றது. இந்தத் தோட்டத்துக்கு இருநூறு வயசுக்கு மேல் ஆகிறது. சார்லஸ் டார்வின் போன்ற சிறந்த அறிவாளிகள் கவனத்துடன் இதை

வளர்த்தார்கள். இதன் சுற்றளவு முந்நூறு மைல்.

இங்கிலாந்தில் 'டுலிப்' என்ற செடிகள் பூக்கும்போதுதான் வசந்தம் வரும். பரந்த 'டுலிப்' வரிசைகளில் குங்குமச் செப்புப் போன்ற பூக்கள் மலரும்போது வசந்தோற்சவத்தைக் கொண்டாட ஏராளமான ஜனத்திரள் 'க்யூ' தோட்டத்தில் வந்து கூடும். பசும்புல் தரையில் ஆண் பெண் குழந்தை எல்லாருமே குட்டிக்கரணம் போடுவார்கள். ஒரு புறம் சித்திரகாரர் அமர்ந்து, இயற்கையை அப்படியே கான்வாஸில் பதிக்க வர்ணம் தயார் செய்துகொண்டிருப்பார். பெண்மணிகள் இயற்கை வனப்பைத் துணிகளில் சித்திர வேலைகள் மூலம் ஏற்றிக் கொண்டிருப்பார்கள். ஒதுக்குப் புறமாகச் சில இடங்களில் இளந்தம்பதிகள் மெய்மறந்து என்ன என்னவோ பேசிக்கொண்டிருப்பார்கள்; அல்லது பூஞ்செடிகளுக்கு அருகிலும் சிறு நீரோடைக்கருகிலும் சென்று விளையாடிக்கொண்டிருப்பார்கள்.

'க்யூ' தோட்டம் இப்படிச் சாமானிய மனிதர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதுடன், தாவர சாஸ்திரிகளுக்கும் விசேஷ அறிவைக் கொடுக்கிறது. உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் பதுங்கியிருக்கும் எத்தனையோ விதச் செடிகளை இங்கே சேகரித்து வைத்திருக்கிறார்கள். இவற்றின் கணக்கு ஐயாயிரம். இங்கே சேகரித்து வைத்திருக்கும் செடிகளின் மொத்த எண்ணிக்கை எழுபது லட்சம். நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து முயன்றால்தான், இதில் இருக்கும் எல்லாச் செடிகளையும் பயிர்களையும் ஒருவன் ஒரு முறை பார்க்க முடியும்.

'க்யூ' தோட்டத்துக்காகச் செடிகளைத் தேடி வரப் பல முயற்சிகளைப் பல முறையில் அப்போதைப்போது செய்து வருகிறார்கள். உலகத்துக்கு ரப்பர் கிடைத்தது இத்தகைய முயற்சிகளின் பயனே. ப்ரஸீல் மக்கள் ரப்பர்ப் பாலை எடுப்பதைப் பார்த்து விக்ஹோம் என்பவர் 'க்யூ'வில் ரப்பர் விதையைக் கொண்டு வந்து பயிராக்க ஏற்பாடு செய்தார். அதன் விளைவாக ரப்பர் விவசாயம் பரவியது. இப்போது உலகம் முழுவதும் ரப்பர் மலிந்து கிடக்கிறது.

அன்னாஸ், வாழைப் பழம், கொக்கோ, காபி, கர்ப்பூரம் ஆகியவற்றுக்குத் தக்க சீதோஷ்ண நிலையை ஏற்படுத்தி அவற்றை இங்கே பயிர் செய்கிறார்கள். தோட்டக் கலையைப் பிறருக்குக் கற்பித்துக் கொடுப்பதும் இதன் நிர்வாகிகள் புரியும் வேலைகளில் ஒன்றாகும். அதன் விளைவாக உலகில் பல இடங்களில் பல 'குட்டிக்யூ'த் தோட்டங்கள் உருவாகி இருக்கின்றன.

நம் நாட்டில் கல்கத்தா, பங்களூர், லக்னௌ, புனா, உதகமண்டலம் முதலிய இடங்களில் சாஸ்திரீய முறையில் வளர்த்த புகழ்பெற்ற தோட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் கல்கத்தா தோட்டந்தான் மிகப் பெரியது. 273 ஏக்கர்கள் இதன் விஸ்தீர்ணம். 1787-இல் தான் இது ஆரம்பித்தது. லெஃப்டினண்ட் ராபர்ட் கிப் என்ற கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தர்தான் இதன் முதல் சூப்பரிண்டெண்டெண்டாக இருந்தார். அவருடைய நினைவுச் சின்னமாக ஒரு தூண் நட்டிருக்கிறார்கள். இந்தத் தோட்டத்தை முக்கியமாகக் கொண்டு பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இதன் விளைவாகத்தான் நம் நாட்டில் தேயிலைத் தோட்டம் உருவாயிற்று. இது நமக்கு ஆண்டு ஒன்றுக்கு 150 கோடி பணம் கொடுக்கிறது.

கல்கத்தா சாஸ்திரீயத் தோட்டத்தை 25 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் 16,000 பயிர்களை வளர்க்கிறார்கள். ஆயிரம் மரங்களைக் கொண்ட பனைமரத் தோட்டமும் ஜடையணிந்த பிக்ஷுவைப் போன்ற ஆலமரமும் இதன் சிறப்புக்கள்.

மற்ற நாடுகளைவிட நம் நாட்டில் தோட்டங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். உடல் நலத்துக்கும் மன மகிழ்ச்சிக்கும் தோட்டங்கள் மிக அவசியம்.

குதிரை ராஜ்யம்

★

பெருந் தத்துவங்களைக் கேலிச் சித்திரங்களின் மூலம் விளக்கிய 'ஸ்விஃப்ட்' எழுதிய மற்றொரு கற்பனை யாத்திரை லபுடா. அதில் வரும் சித்திரத்தை இங்கே எடுத்துரைக்கிறார் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

வெறும் விஞ்ஞான அறிவு வளர்ந்தால் மட்டும் போதாது; அந்த அறிவு நல்ல வழியிலே அன்பு வடித்த அறப்பாதையிலே சென்றால்தான் உலகத்துக்கு உய்வு உண்டு. 'லபுடா (Laputa) என்ற தீவில் விஞ்ஞானம் ஓங்கி நின்றது; அது வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டது' என்ற கருத்தை நமக்கு ஸ்விஃப்ட் நன்றாய் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

லபுடா தீவிலுள்ள விஞ்ஞானிகள் எப்போதும் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கிவிடுவார்கள். அவர்களுடைய தலை சற்று வலத்திலோ இடத்திலோ சாய்ந்து நிற்கும். ஒரு கண் எப்போதும் உள்ளேயே நோக்கும். அவர்களுடைய உடைகள் மீது சூரியன், சந்திரன், விண்மீன் இவற்றின் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும். பிடில், புல்லாங்குழல் முதலிய கருவிகளும் அங்கே மிளிரும். இத்தகைய சான்றோர்களின் தியானத்தைக் கலைக்க ஃளாப்பர் (Flapper) என்ற கருவியை உபயோகிப்பார்கள். வானசாத்திரத்தில் ஆழ்ந்துவிட்டால் அவர்களுக்கு உலகமே தெரியாது. அவர்களுடைய மனைவிமார்கள் அவர்கள் கண்ணெதிரே பொல்லா ஒழுக்கத்தில் இறங்கினாலும், அவர்களுக்கு ஒன்றும் விளங்காது.

வேந்தனுடைய அரியணையின் அருகில் ஒரு மேஜை இருக்கும். அதன்மீது கோள உருவங்களும் கணிதத்துக்கு வேண்டிய கருவிகளும் காட்சி அளிக்கும்.

அந்த நாட்டில், வானவீதியில் சுழலும் கோளங்களின் நல்லிசையை மாற்றப் பல கருவிகள் இருந்தனவாம். ஏட்டிலே கணக்குகளைச் செவ்வனே போடுவார்கள்; ஆனால் அவர்களுடைய வீடுகள் சரிவர அமைவதில்லை; சங்கீதம், கணிதம் இவற்றைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றுமே தெரியாது. அவர்களால் சரியான படி தர்க்கம் செய்ய முடியாது. செறிந்த கற்பனையும் அதில் எழும் அபூர்வமான படைப்பும் அவர்களுடைய அறிவுக்குப் புறம்பானவை.

அவர்களுக்கு அமைதியே கிடையாது. விண்ணில் இரண்டு கோளங்கள் முட்டி உலகத்தை அழித்துவிட்டால் என்ன ஆகுமோ என்ற அச்சம் எப்போதும் அவர்களுடைய மனத்தில் குடிகொண்டிருக்கும். இத்தகைய அச்சத்தை உடைய அவர்களுடைய மனைவிகள் அவர்களை வெறுக்கிறார்கள். அந்நியர்மீது அந்தப் பெண்களுக்கு அளவு கடந்த இஷ்டம் - ஏன், காதலுங் கூடத்தான்!

அவர்களுடைய நாட்டில் பறக்கும் தீவுகள் என்ற கருவிகள் இருந்தன. ஏதாவது ஒரு நகரம் கலகம் செய்யுமானால், அதன்மீது இந்தப் பறக்கும் தீவு சுழலும். அப்போது அந்த நகரத்துக்கு வெயிலும் மழையும் இல்லாமல் போய்விடும். அதிகமான கலகத்தை அது செய்யுமானால், ஆகாயத்திலிருந்து கற்களைப் பெய்வார்கள். இத்தகைய கோர சித்திரம் நவீன நாகரிகத்தின் சிகரத்துக்கு ஒரு விடிவெள்ளியாய்த் தோன்றாமல் போகுமோ? ஆகாய விமானத்திலிருந்து போர்க் கருவிகளை

யும், அணுக்குண்டுகளேயும் 'நாக ரிக'க் காட்டுமிராண்டிகள் இன்று இரக்கம் இல்லாது பொழியவில் லேயா?

விஞ்ஞானக் கழகம் ஒன்று உண்டு. அதில் காணும் விஞ்ஞானி களேப்பற்றிய கேலிச் சித்திரங்களே நமக்கு ஸ்விஃப்ட் தருகிருர். ஒரு விஞ்ஞானி எட்டு ஆண்டுகளாக வெள்ளரியிலிருந்து சூரியனின் கதிர்களேப் பிரித்து எடுக்கிரு ராம். அந்தக் கதிர்களேக் கவர்னர்க ளுடைய தோட்டங்களுக்குச் சொற் பத் தொகைக்குத் தருவாராம். ஓர் எஞ்சினீர் கூரையிலிருந்து அஸ்திவாரத்துக்கு வருகிருராம். வேறு சிலர் மலத்திலிருந்து உணவு களே எடுக்கிருர்களாம். அநேக மாய்ச் சொற்களே நீக்கிவிட்டால் உடலுக்கு நன்மை ஏற்படும்; சொல் சிக்கனமும் தோன்றும்; மூளேக்கு அதிகச் சிரமம் வராது அல்லவா?

ஸ்ட்ரல்பர்க் (Struldbrugg) என்ற இனத்தாருக்கு மூப்பு அதி கரித்துக்கொண்டே போகும். அவர்கள் இறக்கமாட்டார்கள். மூப்பின் விகாரத் தோற்றங்களே ஸ்விஃப்ட் சித்திரிக்கிருர். வயசு ஆக ஆகப் பேராசைதான் பெரு கும். நட்பு, அன்பு முதலிய நல்ல குணங்கள் தேய்ந்துவிடும். பன்னிப் பன்னிப் பேசுவது, அறிவு புகட்டு வதில் தங்களுக்கு நிகர் யாரும் இல்லே என்ற எண்ணம், பணத்தை எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ச்சி அடைகிற இயல்பு இவற்றை அவர்களிடம் காணலாம். அவர்களேப் பார்த்தால் கண்ணுக்கு மிகுந்த அருவருப்புத் தோன்றும். மனிதர்களேக் காட்டிலும் பெண் கள் கோரமான காட்சி அளிப்பார் கள். வயசானதற்கு என்ன சின்ன மென்ருல், பணத்தில் அளவு கடந்த ஆசை விழுவதுதான். பணத்தைக் கொண்டு இந்த அழி வில்லாத கிழங்கள் தேசத்தையே விலே கொடுத்து வாங்கிவிடும். ஆனுல் அதை ஆள்வதற்குத் தகுந்த ஆற்றல் இல்லாமையால், நாடு அழிந்துவிடும் என்பதில் யாதோர் ஐயமும் இல்லே. விஞ்ஞான வளர்ச்சி வாழ்க்கையைப் பாழ்படுத்தக் கூடியதாயிருந்தால், அது புறக் கணிக்கத் தகுந்தது என்ற கருத்தை நன்ருக நமக்கு விளக்கிக் காட்டியிருக்கிருர். லபுடா தீவில் நடக்கிற விஷயங்கள் நவீன நாகரி கத்துக்கு மிகப் பொருந்தும் என் பது நூலேப் படிப்பவர்களுக்கு நன்கு புலனுகாமல் போகாது.

நாள் தேயத் தேய மனிதன் ஒரு மிருகம் ஆகிவிடுகிருன் என்று ஸ்விஃப்ட் கருதுகிருர். அவனிடம் யாதோர் உயர் குணமும் இராது. இத்தகையோர் மக்களாகக் காட்சி அளிக்கவில்லே; மாக்களாகத் திகழ் கிருர்கள். இதை விளக்கக் குதிரைகள் அரசாள்கிற ஒரு தீவுக்கு நம்மை ஸ்விஃப்ட் அழைத் துச் செல்லுகிருர். அந்தக் குதிரை நாட்டில் வாழும் மனிதர்களுக்கு யாஹூஸ் (Yahoos) என்று பெயர்.

குதிரைகள் ஒழுங்காயும் மிக அறிவோடும் நடந்துகொண்டதைப் பார்த்த கலிவருக்கு மந்திரவாதி கள்தான் குதிரை வேஷம் போட் டுக்கொண்டு நடிக்கிருர்களோ என்ற எண்ணம் வந்தது. அந்த நாட்டுக்குச் சென்றதும், குதிரை கள் கலிவருக்கு வேண்டிய உப சாரங்கள் செய்தன. கலிவரை ஒரு யாஹூ என்று அந்தக் குதிரைவேந் தன் கருதிவிட்டான். கலிவரின் அடக்கமும் அறிவும் தூய்மையும் அவனுக்கு வியப்பைத் தந்தன. ஐரோப்பிய நாட்டில் நடக்கும் பொய்யையும் ஏமாற்றத்தையும் சொல்லப் புகுந்தார் கலிவர். பொய் என்ற சொல்லுக்குத் தகுந்த சொல், தங்கள் மொழியில் இல்லே என்று அந்த ஊர் வேந்தன் சொன்னுன். பொய்யே புகாத நாடு அது என்று நமக்கு இதனுல் விளங்குகிறதன்ருே?

வறுமை, வழக்கு, குடி, விப சாரம், சூதாடல், ராஜத்துரோ கம், கொலே, களவு, விஷம் வைத் தல், திருட்டு, பொய்க் கையெழுத் துப் போடுவது - இவைபற்றிக் கலிவர் பேசுங்கால், அந்த வேந்த னுக்கு இவை எல்லாம் ஒரு பெரும் வியப்பை அளித்தன. இவற்றுக்குத் தகுந்த சொற்கள் அந்த நாட்டின் அகராதியிலேயே இல்லேயாம். அதிகாரம், அரசியல்,

போர், சட்டம், தண்டனை இவை போன்ற அநேக விஷயங்களை அந்த வேந்தன் அறிந்துகொள்ள முடியவில்லை. அவை அந்த நாட்டில் இல்லை.

எதற்கும் ஐரோப்பாவில் ஒரு சண்டை நடக்கும். சட்டை கறுப்புத் துணியாக இருக்கவேண்டுமா அல்லது வெள்ளையா யிருக்கவேண்டுமா? இந்தக் கேள்வியைச் சுற்றிப் பெருங் கலகம் எழுந்துவிடும். ஊரில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். நம்மிடத்திலும் இத்தகைய கலகங்கள் எழாமலில்லை. வடகலையா, தென்கலையா? விபூதியா, திருமண்ணு? முதல் தீர்த்தமா, இரண்டாந் தீர்த்தமா? முனித்திரயமா, மடமா, சுயமாசாரிய புருஷர்களா? வடமனு, பிருகச்சரணமா? சோள தேசத்து வடமனு, அவுத்தர வடமனு? கொண்டை கட்டி வேளாளரா, துளுவ வேளாளரா? தொண்டைமண்டல முதலியாரா, கார்காத்த வேளாளரா? யானைக்கு என்ன நாமம் போடுவது? இத்தகைய கேள்விகளைக் கேட்டுக்கொண்டு நாமும் அழிந்துதானே போகிறோம். மர்க்கட நியாயமா (குரங்கு நியாயமா),மார்ஜால நியாயமா (பூனை நியாயமா)? - இந்த மாதிரி கேள்விகளை எழுப்பி, இன்பமாய் வாழக்கூடிய நிலையைக் குலைத்து, அது கசக்கும்படி செய்கிறோம். போர்க் கருவிகளைப் பற்றியும், அவற்றால் விளையக்கூடிய இன்னல்களையும் எடுத்துரைத்தார் கலிவர். இத்தகைய கொடுந் தன்மை மனிதனிடத்தில் தோன்றுமா என்று வியந்துபோனான் குதிரைவேந்தன்.

வக்கீல்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வெள்ளையைக் கறுப்பு என்பார்கள்; கறுப்பை வெள்ளையென்று சாதிப்பார்கள். பணத்துக்காக எதையும் சாதிக்கும் ஆற்றலை உடையவர்கள் அவர்கள்.

வைத்தியர்களும் நீசமான தொழிலை நடத்துகிறார்கள். சீக்கிரம் நோயை அகற்றமாட்டார்கள். அகற்றினால் பணம் குறைந்து போய்விடுமே!

முதல் மந்திரி பதவி அடைய விரும்புகிறவர்கள், தங்கள் மனைவி மூலமாகவோ பெண் மூலமாகவோ உடன்பிறந்தாள் மூலமாகவோ அதைச் சாதித்துக்கொள்ளுவார்கள் என்று கலிவர் சொன்னார். இதைக் கேட்டவுடன் அந்த வேந்தனின் வியப்பு மிகவும் விரிந்தது.

குதிரை நாட்டில் வக்கீல்களுக்கு இடம் இல்லை. வைத்தியர்களைப் பார்க்க முடியாது; பொய் கிடையாது. பொய் என்ற சொல்லே அங்கே கிடையாதென்றால், அதன் பெருமையை என்ன என்று சொல்லுவது!

நட்பும் அன்புந்தான் அங்கே காட்சி அளிக்கின்றன. அந்நியர்கள் அந்த நாட்டில் வேற்றுமுகம் பாராமல் பழகக்கூடிய தன்மையையும், மனப்பான்மையையும் காண்பார்கள். அறிவுச் சுடரைத்தான் அவர்கள் தொழுவார்கள். காட்வின் இந்தக் கருத்தை தம் அரசியல் நியாயத்தில் அமைத்திருக்கிறார்.

மணவினைகளைப்பற்றிக் குதிரை நாட்டினர் மிகவும் கவலை எடுத்துக்கொண்டார்கள். தேக வர்ணத்துக்குத் தனி மதிப்பு அளித்தார்கள். அது அருவருப்பைத் தரக்கூடாது. ஆடவர்களுக்கு உடல் வலிமையே அழகு; பெண்களுக்குத் தேவையானது ரூப சௌந்தரியம். காதலுக்காக இத்தகைய குணங்களை அந்த நாட்டினர் வற்புறுத்தவில்லை.

மனித இனம் நல்ல நிலையில் நீடித்திருக்கும் பொருட்டே இந்தப் பண்புகளைப் பார்த்துத் தக்க திருமணங்கள் நடந்தன. கவிதையில் அவர்கள் சிறந்தோங்கினார்கள். எழுபது அல்லது எழுபத்தைந்து வயசுக்குமேல் அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். மரண பயம் அங்கே இல்லை. ஓர் அந்நிய நாட்டுக்குப் போகும்போது நண்பர்களிடமிருந்து விடை கொள்ளுவார்களே, அந்த மாதிரியே அவர்கள் மரணத்தை வரவேற்றார்கள்.

உடலை மாய்க்கும் மருத்துவன் அந்த நாட்டிலே இல்லை; பொரு

ளைக் கொள்ளையிடும் வக்கீல்கள் இல்லை. நயவஞ்சகர்கள் இல்லை. திருடர்கள் இல்லை. எப்போதும் நட்பைப்பற்றியும் அன்பைப்பற்றியுந் தான் பேச்சுக்கள் எழும். அன்பு, நட்பு, அறிவு - இவைதான் அந்த நாட்டில் தாண்டவமாடும்.

மனிதனின் குறைகளைக் காட்டிக் குறைவற்ற ஒரு குதிரை நாட்டுக்கு நம்மை ஸ்விஃப்ட் அழைத்துச் செல்லுகிறார். உயர்ந்த லட்சியத்தில் மனிதனுடைய சிறுமைகளெல்லாம் அதிகமாய்க் காணத்தானே காணும்? 'மனிதன் அழிந்து போகிறானே என்ற பெருந்துயரில் எழுந்த சித்திரமே தவிர வேறில்லை' என்று கலிவரின் லபுடா யாத்திரையை ஐயம் இல்லாமல் சாற்றலாம். இருளுக்கப்பால் அழியாத ஒரு வானவில்லைப் போல் அறிவுச் சுடர் அதில் விளங்கக் காண்கிறோம்.

கலைப் பித்தர்

வேட்டையாடும் கோஷ்டி ஒன்று, ஆப்பிரிக்கக் காட்டுக்குள் புகுந்தது. கோஷ்டியில் இருந்த ஒரு வேட்டையாடிக்குப் போட்டோ பிடிக்கும் கலையில் அசாத்திய மோகம்.

ஒரு நாள் வெளியே தனியாகப் போன வேறொரு வேட்டையாடி, அலங்கோலமாக முகாமை நோக்கி ஓடி வந்தார். அவருக்குப் பின்னால் ஒரு சிங்கம் வாயைப் பிளந்து துரத்திக்கொண்டு ஓடி வந்தது.

போட்டோ மோக வேட்டையாடி உடனே 'ஜம்' என்று தம்முடைய காமிராவைத் தூக்கிப் பிடித்து, ''சகோதரரே, கொஞ்சம் மெதுவாக வாரும்; கொஞ்சம் மெதுவாக. காமிராவில் நீர் மாத்திரம் தெரிகிறீர்; இன்னும் சிங்கம் தெரியவில்லை. சேர்த்துப் படம் பிடிக்க வேண்டாமா? அதுவும் வரட்டும். கொஞ்சம் மெது; கொஞ்சம் மெது!'' என்று வேண்டிக்கொண்டார்.

—'மிலவாக்கி ஜர்னல்'

புரூப் திருத்தும் உத்தியோகம்

பத்திரிகாசிரியர்: புரூப் திருத்தும் உத்தியோகமா கேட்கிறாய்?

பையன்: ஆமாம், ஸார்.

பத்திரிகாசிரியர்: அது மிகவும் பொறுப்பான வேலை; அதற்கு வேண்டிய யோக்கியதைகள் என்னவென்று உனக்குத் தெரியுமா?

பையன்: தெரியும், ஸார். பத்திரிகையில் நீங்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் என்மீது பழியைப் போடுவீர்கள். நான் மறுத்து ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாது. ..சொல்ல மாட்டேன், ஸார்.

—'கோட் கெயிட்டீஸ்'

பட்சிகளையே வேட்டையாடும் அபூர்வமான பட்சி—

பைரி

ஹ்யூ எம். ஹால்லிடே

நாங்கள் மலையுச்சியில் தொத்திக்கொண்டிருந்த இடத்திலிருந்து கீழே கரையோரம் கவிந்திருந்த மரங்களைப் பார்த்தபோது குத்துச்செடி போலக்கூடத் தட்டுப்படவில்லை. மலைமேலே நாங்கள் இருந்த இடத்துக்கு அருகில் எங்கேயோ ஒரு பிளவில் ஆணும் பெண்ணுமான இரண்டு பைரிகள் கூடு கட்டியிருந்தன.

பல வாய்க்கால்களை யெல்லாம் கடந்து வந்திருந்தோம் இங்கே. பாட்டையோ 20 மைல் தொலைவில் இருந்தது.

ஐக்கிய அமெரிக்காவில் ஒண்டேரியோ மாகாணத்தில் பைரி தென்படுவதே அபூர்வம். ஆகவே, அதன் கூடு இன்ன இடத்தில் இருக்கிறது என்று தகவல் கிடைத்தால் ஆவலாகத்தானே இருக்கும்! ரேஞ்சர் ஒருவர், 'இங்கே அக்கம் பக்கத்தில் பைரிகளைப் பார்த்திருக்கிறேன்' என்று சொன்னதை நம்பித்தான் அங்கே போனேன்.

அந்தப் பக்கத்தில் ஓர் ஏரி உண்டு. அங்கிருந்து நல்ல தூரதரிசினி மூலம் பார்த்தபோது மலையுச்சிக்கு வெகு சமீபத்தில் கூடு இருப்பதுபோல் தோன்றியது. ஆகவே, அதை நெருங்கி வந்தால் அந்த இடத்துக்கு அருகில் மேலே சற்று முன்னுக்கு வந்திருக்கும் கல் பாறையில் இருந்துகொண்டு அந்தப் பறவைகளைக் கவனிக்க எப்படி மறைவு கட்டுவது என்பதைப் பற்றியெல்லாம் திட்டம் போடத் தொடங்கிவிட்டோம். பழைய ரேஞ்சர் ஒருவர் போய்ப் பழக்கப்பட்டிருந்த கொடி வழி ஒன்று அருகில் இருந்த சரிவுப் பக்கமாக (கூடு இருக்கும் இடத்தை அடுத்து உள்ள) அந்தப் பாறைக்குக் கொண்டுவிட்டது. இந்த உயரமான இடத்திலிருந்துதான் நாங்கள் 60 அடி நீளம் உள்ள நூல் ஏணியையும், அதோடு 100 அடி நீளமுள்ள கயிற்றையும் பொருத்தித் தொங்கவிட்டோம். அப்படியும் பைரி கூடு கட்டியிருக்கும் இடத்துக்கு நேரே எட்டும் அளவுக்குக்கூட வரவில்லை. ஆகவே, எங்கள் திட்டம் எல்லாம் அந்தரத்தில் நின்றன.

பைரியைக் காணுவதே அபூர்வமாக இருப்பது ஏன் என்று இதிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம். இந்தப் பறவை மிகமிக உயரத்தில் கூடு கட்ட விரும்புவது; இதற்குத் திருப்தி ஏற்படும் அளவுக்கு உயரமான-பிறர் அணுக முடியாத-மலையுச்சிகள் இராததுதான் காரணம் என்று தோன்றுகிறது. கூட்டில் ஒரே ஒரு குஞ்சுதான் தெரிந்தது. அடிக்கடி கூட்டின் ஓரமாக வந்து இறக்கையை விரித்தபடி ஏரியின் பக்கம் கவனிக்கும். அதைப் பார்க்கும்போது தானும் ஒருநாள் காற்றில் ஜோராகப் பறந்து செல்ல விரும்புவது போலத்தான் தோன்றும்.

பைரி மலைச்சாரலை அடுத்த காட்டுப் பிரதேசத்தில் வாழும் பறவை. பெரிய ஏரி எதிரே உள்ள மலையின் உச்சியில் சற்றுச் சமமான பாறை இருக்கும் இடத்திலோ இரண்டு மலைகளின் நடுவே இருக்கும் அகன்ற இடைவெளியைப் பார்த்தாற்போலவோ கூடுகட்டும். பொதுவாக, இந்தக் கூடு இருக்கும் இடத்தை அணுகுவது அப்படி அதிகச் சிரமம் என்பதற்கில்லை. (ஆணி அடித்துத் தொங்கவிட்டு) பத்திரமாக இறங்குவதற்கு வேண்டிய அளவுக்குக் கயிறு கையில் இருக்க வேண்டும். மலையுச்சியிலிருந்து தொங்கவிட்டால் கயிறு கீழ்மட்டம் வரைக்கும் வரவேண்டும். இல்லாவிட்டால் எங்காவது அந்தரத்தில் திண்டாட வேண்டியிருக்கும். கூடவே, இன்னொரு கயிறும் துணைக்கு இருக்க வேண்டும். அந்தக் கயிற்றின் மறு நுனி

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகா (ஆங்கிலம்: 10-2-'57), கல்கத்தா;

உச்சியில் இருக்கும் கூட்டாளியிடம் இருக்க வேண்டும். அதை அவர், கீழே இறங்குபவருக்குச் சாதகமாகக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கொண்டேயிருக்கவேண்டும். சில சமயம் கூடு கட்டியிருக்கிற இடம் அண்டி நெருங்கக் கூடியதாக இருக்கும்; ஏற வசதியாய் முந்திக்கொண்டு இருக்கும் ஒரு பாறையில் கூடு கட்டி இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் இப்படி இருப்பதில்லை; மேலே கவிந்து வளைந்திருக்கும் ஒரு பாறையின் கீழுள்ள பரப்பில் கூடு இருந்துவிடும்.

இந்தக் கூடுகளில் எட்டி நெருங்கக் கூடியவைகளை ஏற்கனவே பைரி முட்டை, குஞ்சு இவைகளைச் சேகரிக்கும் சில பேர்கள் எடுத்துக் கொண்டு போயிருப்பார்கள். இதுதான் சங்கடம். ஒவ்வொரு வருஷமும் இப்படி நடக்கிறது. அமெரிக்காக் கண்டத்திலேயே பைரியைப் பறவை வேட்டையாடப் பழக்கும் திறமை உள்ளவர்கள் பத்துப் பன்னிரண்டு பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். ஆனால் அது ஒரு புதுமை என்பதற்காகவே ஆயிரக்கணக்கான பேருக்குப் பைரியை வைத்திருக்க வேண்டுமென்று ஓர் ஆசை. என்னதான் துன்புறுத்தினாலும் சரி, விரட்டியடித்தாலும் சரி, பைரிக்குப் பழைய இடம் என்றால் பற்று அதிகம். பழைய கூட்டிலிருந்து அடிக்கடி இப்படிக் குஞ்சுகள் களவு போனாலும், பெரிய பைரிகளைச் சுட்டாலும் அந்தக் கூட்டையேதான் அவை மறுபடியும் பயன்படுத்தும். குஞ்சுகளை யாராவது எடுக்கும்போது அந்தக் கொள்ளையைத் தடுக்கக் கூவிக் கத்திக்கொண்டே பைரிகள் வட்டம் இடும்; அப்போது அவைகளை எளிதில் சுட்டுவிடலாம். இருந்தாலும் இப்போதெல்லாம் முன்னைப்போல் பைரிகளை அப்படி அடித்துக் கொல்வதில்லை. கொஞ்சங் கொஞ்சமாக அவைகளின் மேல் இருந்த வெறுப்பு நீங்கி வருகிறது.

ஐரோப்பாவில் 100 ஆண்டுகளுக்கும், அதற்கும் மேலேயுங்கூடப் பைரிகள் ஒரே கூட்டைப் பயன்படுத்திக்கொண்டு வந்திருப்பதாகப் பல விவரங்களிலிருந்து தெரிகிறது. குஞ்சுகளை யாராவது எடுத்துக்கொண்டு போய்விட்டாலுங்கூட இவை கூட்டைக் காப்பதும், இரை கொண்டு வந்து அங்கே வைப்பதும் வழக்கம். பைரி இனத்தைச் சேர்ந்த பறவைகள் மட்டுந்தான் இப்படிச் செய்கின்றன. குஞ்சுகளுக்குக் கூரான நுனி இறக்கை முளைத்த பிறகு இப்படி அவைகளைக் கவனிக்கவோ அவைகளுக்கு இரை கொண்டு வந்து வாயில் கொடுக்கவோ தேவையில்லை; குஞ்சுகளே இரை தேடக் கிளம்பிவிடும். ஆனாலும், பெரிய பைரிகள் மட்டும் அந்தப் பக்கம் வரும்போதெல்லாம் குஞ்சுகள் இருந்த இடத்தில் இரையைப்

போட்டுவிட்டுப் போகும். சில சமயம் இந்தமாதிரி பழைய கூடுகள் இருக்கும் இடத்தில் வந்து கவனித்தால் அதற்குள் அழுகின மாமிசத் துண்டுகள் கிடப்பதைக் காணலாம். அப்புறமும் பெரிய பைரிகள் அவைகளைக் கொண்டு வந்து இப்படிக் குவித்துக்கொண்டேதான் இருக்கும்.

நினைத்தாலேகூட அஞ்சி நடுங்கக் கூடிய அவ்வளவு செங்குத்தான இடத்தைத் தேடிக் கூடு கட்டும். அந்தமாதிரி மலையுச்சியில் ஏறுவதென்றால், கயிற்றை (இறுகக் கட்டி அதை) நம்பித்தான் இறங்க வேண்டியிருக்கும். கீழே குத்திட்டு நிற்கும் பாறைகளை எட்டும் அளவுக்குக் கயிறு இராது; ஆகவே, அடியில் அதல பாதாளந்தான் தெரியும்!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் (ஒண்டேரியோ மாகாணத்தில்) பாரி சவுண்டு பிரதேசத்தில் ஓர் ஏரியருகில் இருக்கும் மலையுச்சியில், பைரிகள் இப்படிக் கூடு கட்டியிருந்தன. அது ஒன்றுதான் கூடிய வரையில் கூடுகட்ட வசதியாக இருந்தது; அதை விட்டால் வேறு இடமே இல்லை. நடுவில் பல ஆண்டுகள் அவைகளைக் காணவேயில்லை. ஆனால், சென்ற ஆண்டு அவை திரும்பி வந்துவிட்டன. போன ஏப்ரல் மாதம், ஏரியில் பனிக்கட்டி உருகி விலகுவதற்கு முன் அவை மறுபடியும் மலையுச்சியில் வட்டமிடுவதும், அங்கிருந்து கீழே பாய்வதுமாக இருந்தன.

பைரி பறக்கும்போது பார்க்க வேண்டும்! வட்டமிட்டு உயரப் போய் ஆகாயத்தில் ஒரு சிறு புள்ளி போல் தெரியும்; திடீரென்று அங்கிருந்து அது கீழே பாயும்போது அப்படியே நாம் திகைத்து மூச்சைப் பிடித்துக்கொண்டு கவனிப்போம். வரவர அந்தச் சிறுபுள்ளி பெரும் புள்ளியாகி எரிநட்சத்திரம் கீழே விழுவதுபோல் கடைசியில் இறக்கையை மடித்துக்கொண்டு பைரி வெகு ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் பாய்வது தெரியும்.

அதன் வேகம், அது சட்டென்று எழும்புவது, உடம்பை வளைப்பது, நீரில் பாய்வது, மறுபடியும் ஏரியை நோக்கித் தாவவேண்டி ஆகாயத்திலே குப்பென்று கிளம்புவது - இப்படி அதன் பலவிதமான உணர்ச்சிகளையும் அப்போது பார்க்கலாம். ஏரியில் தாவும்போது அன்று பைரிகள் ஒன்றின்மேல் ஒன்று பாய்வதும், சேர்ந்து கிளம்புவதும், வட்டமிடுவதும், போட்டியில் உற்சாகம் மூண்டவைபோல் மறுபடியும் நீரில் ஒரே சமயத்தில் பாய்வதுமாக இருந்தன. ஆனால் ஒரு மாசங் கழித்துப் பார்த்தால் அக்கம் பக்கத்தில் ஒரு பைரியைக்கூடக் காணவில்லை. ஒருவேளை காட்டுப் பக்கம் மனிதர் தொந்தரவு இல்லாமல் தம் இஷ்டம்போல் திரியக் கூடிய இடம் - ஏதாவது ஏரியருகில் இருக்கும் மலையுச்சி - கிட்டியிருக்கும். மனிதனைத் தவிர வேறு பகை அவைகளுக்கு இருப்பதற்கில்லை. அவைகளின் துணிச்சலும், அவை பறக்கும் வேகமும் வேறு எந்தப் பறவைக்கும் இல்லை.

அப்படி இருக்கப் பைரிகளைக் காண்பதே அபூர்வமா யிருப்பது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது. பருந்து இனப் பறவைகளுக்குள் பைரிகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். ஐக்கிய அமெரிக்காவில் பல மாகாணங்களில் பைரிகளைப் பாதுகாக்கச் சட்டமே போட்டிருக்கிறார்கள். ஆனால் ஒண்டேரியோவில் இந்த மாதிரி ஒரு சட்டமும் இல்லை. முன்னெல்லாம் இப்படி இல்லை. அரசர்கள் பைரிகளை வைத்துக்கொண்டு பிற பறவைகளை வேட்டையாடி வருவார்கள். அப்போது பைரியை யாராவது கொன்றால், உடனே அவர்களுக்குக் கொலைத் தண்டனை தான் கிடைக்கும்.

பைரியின் இறக்கை நீண்டு கூர்மையாக இருக்கும். பறக்கும் போது புறாவைப்போல் தோன்றும். தலை ஆப்பு வடிவமாக இருக்கும். கறுப்புக் கண் கொடுமை தோன்றப் பளபளக்கும்; துணிச்சல், வானத்தில் யதேச்சையாகத் திரியும் இயல்பு, எதையும் எதிர்த்துச் செல்லும் தன்மை இவைகளை அந்தப் பார்வையிலிருந்து கண்டறியலாம். பைரிகள் கூடுகட்டி வாழும் இடத்தை அணுகுவதென்றால் சா

தியமில்லை. ஆனாலும் அவைகள் எப்படி வாழ்கின்றன என்று கவனித்து அறிந்துகொள்ள முடியும். பைரி மற்றப் பறவைகளை அடித்து இரையாக உண்ணுகிறது. ஆனாலும் பைரிகளின் தொகை மிகவும் குறைவாக இருப்பதால் மொத்தத்தில் பறவைகளுக்கு அவற்றால் ஆபத்து அதிகம் இல்லை. பைரி இரை தேடிப் பாயும்போது ஒன்று, இரையாகக் கூடிய பறவை தப்பிவிடும்; இல்லாவிட்டால், பைரி ஒரே தாக்கில் அந்தப் பறவையைக் கொன்று தீர்த்துவிடும்.

இப்படிப் பைரி இரையை நோக்கிப் பாயும் காட்சியைப் பார்க்க வேண்டும்; அது மிகவும் பரபரப்பூட்டும். மேலே வானத்தின் உச்சியிலிருந்து பைரி இரையைக் கூர்ந்து கவனிக்கும். விர் என்று வாணம்போல் வேகமாகப் பல விதம் பாய்ந்துவந்து இரையைப் பலமாகத் தாக்கும். ஆனாலும் சில சமயம், இரையாகக் கூடிய பறவை பதிலுக்குத் தாக்கியோ, இப்படியும் அப்படியும் ஆட்டங்காட்டியோ, இல்லாவிட்டால் சட்டென்று விலகிக்கொண்டோ ஓடிவிடலாம். அப்போது பைரி மறுபடியும் வானத்தில் கிளம்பி, மீண்டும் எதைத் தாக்கலாம் என்று காத்திருக்கும்.

பைரி இப்படித்தான் பொதுவாக வேட்டையாடுவது வழக்கம். ஆனால் சில சமயம் அது இரையைத் துரத்திக்கொண்டும் போவதுண்டு. அப்போதுதான் அதன் பெருமை தெரியும். மறைந்திருந்து அது தாக்காது. இரையாகக்கூடிய பறவை தப்பித்துக்கொள்ளப் பைரி அவகாசம் கொடுக்கும். சில சமயம் கைக்கு எட்டியும் இரை தப்பிச் செல்லும்படி விட்டுவிடும். பைரிக்கு இது ஒரு பொழுதுபோக்கும் தமாஷும் மாதிரிதான். அக்கம் பக்கத்தில் வாழும் பறவைகள் எப்போதும் உஷாராக இருக்கும்படி செய்கிறது பைரி என்றே சொல்ல வேண்டும்.

பொதுவாக உலகத்தில் அநேகம் இடத்தில் பைரியைப்பற்றி மக்கள் கேள்விப்பட்டிருந்தாலும் அது காணுவதற்கே அபூர்வமான பறவைதான். அது துள்ளி எழும்பி வட்டமிட்டு இரை தேடிப் பாய்ந்து வாழும் ஏரிப் பகுதி விரைவில் பிரசித்தி பெற்றுவிடும். பறவை ஆராய்ச்சியாளர் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் இருந்தாலுங்கூட அங்கே வந்து அது பறக்கும் விநோதத்தைப் பார்க்க விரும்புவார்கள். பைரி இப்போது அருகிக்கொண்டே வருவது கீழ்க்கண்ட விவரத்திலிருந்து தெரியும்: பென்ஸில்வேனியாவில் உள்ள ஹாக் (பைரி) மலைப் பிரதேசத்தில் சென்ற ஆண்டு கவனித்ததில் பைரி இனத்தைச் சேர்ந்த பறவைகளில் 17,000-க்கு மேற்பட்டவை எங்கோ போய்விட்டன.

அமெரிக்காவில் வாழும் இந்தப் பைரி இனத்தில் ஒரு வகையைப் பற்றித் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. முதல் அமெரிக்கப் பறவை ஆராய்ச்சி நிபுணரான அலெக்சாண்டர் வில்சன் என்பவர் அது ஒரே இடத்தில் வாழும் பறவை என்றுதான் நம்பியிருந்தார்; பைரி உலகம் முழுவதும் சுற்றும் பறவை என்பது அவருக்குத் தெரியாது போயிற்று. நீர்க்கோழியைப் பைரி மேலேயிருந்து பறந்து வந்து தாக்குவதைப் பார்த்துவிட்டு டக் - ஹாக் (வாத்துப் பருந்து) என்று பெயரிட்டிருந்தார். அது ஆர்க்டிக் பிரதேசத்தின் உள் பகுதியில்கூடக் கூடு கட்டி வாழும், மழைக் காலத்தில் தெற்குப் பிரதேசம் நோக்கிப் போகும் என்றெல்லாம் அவருக்குத் தெரியாது.

150 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பைரியைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. 1864-இல்தான் முதல் முதலாக இவைகளின் முட்டைகளைச் சேகரிக்கத் தொடங்கினார்கள். அப்போதெல்லாம் இப்படி ஏதாவது அபூர்வமான பறவை இனத்தின் கூட்டைக் கண்டால் பலர் அதிலுள்ள முட்டைகளை எடுத்துச் சென்றுவிடுவது வழக்கம். முட்டை நிலையிலிருந்து குஞ்சாகிப் பறவையாகிக் கையில் அதை வைத்துக்கொண்டு நேரில் கவனித்துச் சந்தேகம் தெளிந்தாலொழிய அந்

தக் காலத்தில் யாரும், 'இது இன்ன பறவைதான்' என்று ஏற்றுக்கொள்வதில்லை. முன்னே இப்படிப் பறவை ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களெல்லாரும் முட்டைகளையும் சேகரித்து வந்தார்கள். அப்போது சக்தி வாய்ந்த பூதக் கண்ணுடி கொண்ட தூரதரிசினிகள் இல்லை. சும்மா நின்றுகொண்டே பறவைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் கூடவே ஒரு துப்பாக்கியையும் எடுத்துச் செல்வார்கள்; அப்படியே சில முட்டைகளையும் பறவைகளையும் மாதிரிக்கு எடுத்து வருவார்கள்.

எங்காவது செங்குத்தான மலையுச்சி தட்டுப்பட்டால் என் தூரதரிசினி மூலம் பைரி தென்படுகிறதா என்று உற்றுப் பார்ப்பேன். இந்தப் பக்கத்தில் ஒரு மலையுச்சியில், போன கோடையின்போது பைரிகள் இருந்ததாகச் சொன்னுர்கள். புழுதி நிறைந்த பாட்டை ஒன்று ஏரிக்கு எதிர்ப்புறமாக அந்த உச்சியை நோக்கிப் போயிற்று. அந்த வழியே போகும்போது பைரிகள் இருக்கக்கூடும் என்று தோன்றிய இடம் எல்லாம் தூரதரிசினி மூலம் கவனித்துக் கொண்டே வந்தேன். அப்போது அங்கே ஒரு வீடு இருப்பது தெரிந்தது. அதன் தோட்டப்பக்கம் ஓர் ஆள் வேலை செய்துகொண்டிருந்தான். ''இங்கே பைரி இருக்கிறதா?'' என்று அவனைக் கேட்டேன்.

சற்று நேரம் குழி தோண்டியபடி இருந்த பிறகு அவன், ''அதோ அங்கேதான் இருந்தன. ஆனல் நான் அவைகளைத் தீர்த்துவிட்டேன். அவை மிகவும் பொல்லாதவை, தெரியுமா?'' என்றுன்.

''அப்படி என்ன பொல்லாத்தனம்?'' என்று கேட்டேன்.

''இதிலிருந்து உங்களுக்குப் பைரிகளைப்பற்றி அதிகமாகத் தெரியாது என்று புரிகிறது. இல்லாவிட்டால் இப்படியெல்லாம் ஏன் கேட்கப் போகிறீர்கள்?'' என்றுன் அவன்.

அப்புறம் ஒரு சமயம் இந்தப் பிரதேசத்திலேயே வளர்ந்து வாழ்ந்துவரும் ஒருவரைப் பார்க்க நேர்ந்தது. ஏரி ஒன்றின் கரையில் இரண்டு மைல் பரப்புக்கு வயிரம் ஏறிய மரத்தோட்டம் உண்டு அவருக்கு. அங்கே தற்செயலாகப் போனபோது பைரிகளைப்பற்றி விசாரிக்கலாம் என்று தோன்றிற்று. தோட்டத்துச் சொந்தக்காரரை அங்கே கண்டேன். உள்ளூர்க்காரராயிற்றே என்று அவரோடு பேச்சுக் கொடுத்தேன். கடைசியில் பைரிகளைப் பற்றிப் பேச்சு வந்தது. ஏற்கனவே இரண்டு பைரிகளை இந்தப் பக்கம் சுட்டிருப்பதைப்பற்றியும் சொன்னேன். அப்போது அவர், ''அதோ அந்த மலையுச்சியில் அவைகளின் குஞ்சுகள் செத்து அந்த எலும்புக்கூடு இன்னும் அப்படியே இருக்கிறது'' என்றூர்.

நேரந் தெரியாத தொழிலாளி

''என்றைக்குப் பார்த்தாலும் இப்படி நேரங் கழித்தே வருகிறுயே. இது ஏன்?'' என்று ஒரு தொழிலாளியை முதலாளி கோபித்துக்கொண்டார்.

''என்ன செய்வேன், முதலாளி. இங்கே ஆபீஸில் கடிகாரத்தைப் பார்க்கவே கூடாதென்று என்னைத் தடுத்துவிட்டீர்கள். அதிலிருந்து வீட்டிலும் கடிகாரம் பார்க்கும் பழக்கம் எனக்கு அடியோடு போய்விட்டது'' என்று அவன் சமாதானம் சொன்னுன்.

—'ராம் புல்லர்'

சிவபெருமானுக்கு உவப்பான வில்வம், மனிதனுக்கு அரு மருந்தாகவும் பயன்படுகிறது.

வில்வமும் வில்லியும்

பிலோ இருதயநாத்



வில்லியர்களைப் பார்க்கச் சமீபத்தில் சென்றேன். ஒரு வில்லியின் வீட்டை அடைந்தேன். வெளியிலிருந்த ஒரு வில்லி மங்கையை, ''என்ன அம்மா! ஆண்கள் யாரும் இல்லையா?'' என்றேன்.

''அவர் (தன் கணவர்) வெளியே வர அரை மணி ஆகும். வில்வப் பழத்திலிருந்து ஒரு முக்கியமான கஷாயம் இறக்கிக்கொண்டிருக்கிறார். அதைப் பாதியிலே விட்டு வரக்கூடாதுங்கோ. இப்படி உட்காருங்கோ'' என்று ஒரு மணையை எடுத்துப் போட்டாள்.

போன காரியம் முடிந்து திரும்பினேன். என்றாலும், வில்வப் பழத்தின் சிந்தனை அகலவில்லை.

அன்றுமுதல் வில்வத்தையும் அதன் ஔஷத குணங்களையும் பற்றிக் கற்றவர், கல்லாதவரிடமெல்லாம் கேட்டும் சில புத்தகங்களை ஆராய்ந்தும் பல விவரங்களைச் சேகரித்தேன்.

இந்தியாவில் சைவர்கள் பக்தி சிரத்தையுடன் வில்வத்தைப் போற்றி வருகிறார்கள். வில்வ இலைகள் சிவ அர்ச்சனைக்கு ஏற்றவை.

சரக் கொன்றை மரத்திலும், வில்வத்திலும் சிவன் இருக்கிறார் என்னும் வட மொழிச் சுலோகம் ஒன்றே இதன் பெருமைக்கு அத்தாட்சி. வில்வ இலையை மூன்றாகச் சேர்த்துப் பறித்து லிங்க அர்ச்சனை செய்த பிறகே உணவு உட்கொள்வார்கள் சிலர். இப்படி, மூன்று இலைகளைப் பறித்து அர்ச்சனை செய்வதற்கு ஒரு கதையும் உண்டு.

ஒரு வேடன் காட்டில் வேட்டை ஆடிக்கொண்டிருந்தானாம். திடீரென்று ஒரு புதரிலிருந்து புலி ஒன்று அவனைத் துரத்த, புலிக்கு அஞ்சிய வேடன், பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டான். மரத்தில் மனிதனைக் கண்ட புலி, அன்றிரவு அந்த மரத்தடியிலேயே படுத்துக்கொண்டதாம். தான் ஏறிய மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்ததை வேடன் கண்டான். மனத்திலே தியானம் செய்து, அன்றிரவு மரத்தின்மீது தூங்காமலிருந்து, ஒவ்வோர் இலையாகப் பறித்துச் சிவலிங்கத்துக்கு அர்ச்சனை செய்தானாம். தூங்கிக் கீழே புலியின்மேல் விழாமல் வேடன் இதனால் தப்பினானாம். விடிந்ததும் புலி தன் குகைக்கு ஓடிவிட்டதாம்.

துர்க்கா தேவி முதல்முதல் வில்வ மரத்தில்தான் கண் விழித்தாள். லட்சுமிக்குப் பிரியமானது வில்வ மரந்தான். இன்று சிதம்பரத்திலே தேவாலயத்தில் இருக்கும் சிதம்பரநாதர், வில்வ மாலை ஒன்று அணிந்திருப்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

இந்த மரம் வெகு மங்களகரமானதென்று கருதுகிறார்கள். வில்வ மரம் மிளகாயைப்போல் மேல் நாட்டிலிருந்து வந்து இந்தியாவில் பரவியதல்ல; தொன்று

காப்பிரைட்: அமுதசுரபி (தமிழ்), சென்னை.

தொட்டு இந்தியாவிலேயே பயிரானது.

இந்த மரத்துக்கு 'வில்வம்' என்ற பெயர் எல்லாப் பாஷைகளிலும் பொதுவாக வழங்கி வருகிறது. 'பீல்' (Bael) என்ற ஆங்கிலப் பெயர்கூட 'வில்வம்' என்னும் மொழியின் திரிபுதான். விஞ்ஞானிகள் இதை, 'டோனியோ பெங்கலென்ஸிஸ்' (Donnia bengalensis) என்று வழங்குகிறார்கள்.

பதினாறுவது நூற்றுண்டில் எழுதிய ஒரு நூலில், இதை 'மார்மிலோஸ் டி பெங்குவாலா' (Marmilos de Benguala) என்று குறித்திருக்கிறது. இது சீத பேதிக்கு மிகவும் சிறந்த ஔஷதம்.

'இந்திய வாகட நூல்' என்னும் வைத்திய நூல், இதைப் பேதி, சீத பேதி, ரத்த பேதி எல்லாவற்றுக்கும் தகுந்த ஔஷதம் என்று சொல்கிறது. பிற குடல் கோளாறுகளிலும் உபயோகிக்கத் தகுந்த சரக்கு இது. வில்வத்தில் அநேக வகைகளும் உண்டு. அவற்றில் காட்டு இனத்தைச் சேர்ந்ததும், தோட்டக் கால்களில் வைத்துப் பயிராக்கும் இனத்தைச் சேர்ந்ததும் முக்கியமானவை.

காட்டு வில்வத்தின் பழம் சிறியதாகவும் உருண்டை வடிவமானதாகவும் கடினமாகவும் மிகத் துவர்ப்பாகவும் அதிகமான விதைகள் அடங்கியதாகவும் இருக்கும்.

தோட்ட வில்வ இனத்தின் கனியோ பெரிதாகவும் சிறிது நீண்ட வடிவமாகவும் பெரும்பாலும் மிருதுவான மேல் புறணியுள்ளதாகவும் அதிக வாசனையும் சுவையுமுள்ள உட்சதையுடன் கூடியதாகவும் இருக்கும். இந்தக் கனியில் விதைகளும் வெகு சொற்பமே.

வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் பயிராகும் காட்டு இனத்தைச் சேர்ந்த வில்வப் பழங்களுக்கு ஒரு விசேஷ குணம் உண்டு. அந்தக் கனிகள் மிகவும் மயக்கம் தரக்கூடிய குணமுடையவை. இந்தக் குணம் மற்ற இனங்களுக்குக் கிடையாது.

வில்வ மரம் சாதாரணமாய் விதைகளிலிருந்தே முளைத்துப் பயிராவது வழக்கம்; ஆனால் விதை இல்லாமலே ஒரு மரத்தின் வேரிலிருந்து கிளையுண்டாகி, அது மற்றொரு மரமாக வளரக்கூடும் என்பதை அறிந்து, பர்மாவில் இந்த முறையைக் கொண்டே இந்த மரத்தைப் பயிராக்குவதுண்டு.

விதையையோ வேரையோ நட்டுப் பயிராக்க ஆரம்பித்தது முதல், ஐந்திலிருந்து எட்டு ஆண்டுகளுக்குள் வில்வ மரம் கனி தரத் தொடங்கும். அப்பால் இருபத்தைந்து முதல் முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அது பூர்ணமாய் வளர்ந்து பெரிய மரமாகும்.

வில்வ மரம் பத்து அல்லது பதினொரு மாதங்களுக்கு ஒரு முறை காய்த்துப் பழுப்பது வழக்கம். பெரும்பாலும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் கனி தரும் என்று சொல்லலாம். சில சமயம் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி இந்த மாதங்களிலும் பழுக்கும்; ஆனால் இந்தக் காலம் அவ்வளவாய் இயற்கையானது அல்ல.

வில்வப் பழத்தின் ஔஷத குணங்களை, வைத்தியர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நன்றாகக் கனிந்த பழத்தை ஏழை மக்கள் - முக்கியமாய் மலைப் பிரதேசங்களில் வசிக்கும் வேடர்கள் - தங்கள் உணவாக உபயோகிப்பது உண்டு. நகர மக்களில் சிலரும், இந்தப் பழத்தைச் சட்னி அல்லது பச்சடியில் கலந்து உபயோகிக்கிறார்கள்.

நன்றாகக் கனிந்த பழம் நறுமணமுள்ளது; குளிர்ச்சியைத் தந்து மலச்சிக்கலைப் போக்கும் குணம் உடையது. போதுமான அளவு கனிந்த பழத்தைக் கொண்டு தயாரித்த ஷர்பத்தை, மலச்சிக்கல் தீர்க்கும் ஔஷதமாக ஐரோப்பியர் உபயோகிக்கிறார்கள்.

வில்வ வேரின் பட்டை, பித்த விகாரங்களிலும் தலை சுற்றல் முதலியவற்றுக்கும் இருதயத்தைப் பற்றிய சில வியாதிகளுக்கும் ஔஷதமாக உபயோகப்படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்கள் வழங்கி வரும் பத்து மூலிகைகள் அடங்கிய 'தசமூலம்' என்கிற வகுப்பில் வில்வமே பிரதானம்.

இலைகளை இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றைத் தேனோடு

கலந்து, காய்ச்சலுக்கும் மலச் சிக்கலைத் தீர்ப்பதற்கும் ஔஷதமாக உபயோகிக்கலாம்.

இந்த ரசத்தோடு சிறிதளவு மிளகுப் பொடியையும் சேர்த்துச் சுவாசகாச ரோகத்துக்குக் கொடுக்க, நோயாளியின் தொந்தரவு மிகவும் குறையும். சரீரத்துக்குள் தாதுக்கள் கோளாறு அடைந்து சம்பவிக்கும் சில வீக்கங்களுக்கு இந்தச் சாற்றை உட்கொண்டு வந்தால் குணம் உண்டாகும்.

வில்வத்தின் காம்பிலிருந்து ஒரு வகையான சிவந்த பிசின் சிறிதளவு உண்டாவது உண்டு. பழத்தின் நுண்ணறைகளிலிருந்தும் வித்தின் சுற்றுப் புறங்களிலிருந்தும் பிசின் போன்ற ஒரு வித வஸ்து கசிந்து வரும். இதை வட இந்தியாவில் சுண்ணச் சாந்துக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். இந்தப் பசை காட்டு வில்வப் பழங்களிலிருந்தே விசேஷமாய்க் கிடைக்கும்.

தென்னிந்தியாவில் கிராமாந்தரங்களிலுள்ள சில சந்நியாசிகளும் மலைவாசிகளும் வனவாசிகளும், இந்தப் பிசினையாவது பழத்தின் சதையையாவது தண்ணீரில் கரைத்தும் கொதிக்க வைத்தும் தலையில் தேய்த்துக்கொள்வதுண்டு.

வில்வப் பழத்தைச் சற்றுக் காய் வெட்டாக எடுத்து நன்றாகக் காய வைத்து, நன்றாகப் பொடி செய்து, அளவாகச் சிகைக்காயுடன் சேர்த்து அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால், கண்ணுக்கும் தேகத்துக்கும் குளிர்ச்சி உண்டாகும். ரெயில்வேயில் 'ட்ராலி' இழுத்துச் செல்லும் கூலிகளும் அதிக நேரம் வெயிலில் வேலை செய்யும் வேறு பலரும், வில்வ இலைகளைப் பறித்துத் தங்கள் தலைப்பாகைக் குள்ளோ அல்லது குல்லாய்க் குள்ளோ வைத்துக்கொள்வார்களாம். இன்னும் சில ஒட்டர் வேலை செய்யும்போதும், அவர்களின் தலைப்பாகைக்குள் இதைக் கண்டு விசாரித்தேன். ''இது கண்ணுக்கு நல்லது; கண் எரிச்சலைப் போக்கும்' என்று அவர்கள் கூறினார்கள்.

வில்வ இலைகளுக்கு நம் தேகத்தின் வெப்ப நிலையைத் தாங்கக் கூடிய சக்தி இருப்பதைப் பலர் கண்டிருக்கிறார்கள். எண்ணெய், சிகைக்காய் முதலியவற்றைத் தேய்த்துக்கொள்வதற்குப் பதிலாக வில்வக் கல்கத்தைத் தேய்த்துக் குளித்தால், அழுக்குகள் போகும்; தலைப் பேன்கள் நன்றாக ஒழிந்து மயிர்களுக்கு ஒரு வித அழகும் கண்களுக்குக் குளிர்ச்சியும் உண்டாகும்.

நன்றாகக் கனிந்த வில்வப் பழம் சீதவீர்யத்துக்குச் சிறந்ததென்றும், காய் வெட்டாய் இருப்பது உஷ்ண வீர்யத்தை உடையதென்றும் கூறுகிறார்கள். வில்வத்தின் உள் சதையை வேக வைத்து எடுத்து அதை 'ஷர்பத்' செய்து அருந்தினால், மூல வியாதிக்கு நல்ல மருந்தாகும். 'மஞ்சள் காமாலை' என்ற வியாதிக்கு வில்வாதி லேகியம் குணத்தைக் கொடுக்கும்; மற்ற எல்லாப் பித்த வியாதிகளையும் போக்கும். வயிற்றில் காற்றுச் சேர்ந்து கஷ்டப்படுகிறவர்கள், சாப்பிட்டபின் வில்வ லேகியத்தைச் சாப்பிடுவது நல்லது.

வில்வத்தின் மேல் ஓடு உஷ்ண அஜீர்ண பேதிக்கு நல்ல மருந்து. வயிறு முதல் ஆசன வழி வரையில் உண்டாகும் எல்லாவிதக் கோளாறுகளையும் இது பொதுவாகக் குணப்படுத்தும். எல்லாவித மேக நீர்களுக்கும் ரத்த சுத்திக்கும் வில்வம் நல்ல ஔஷதம்.

உலர்ந்து போன பழங்களைக் குடைந்து மேலே அழகாகப் பதப்படுத்திக் குடுக்கைகளாகச் செய்வது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்தக் குடுக்கைகள் மருந்து சூர்ணம், விபூதி முதலியவை வைக்க உதவும். காட்டில் வாழும் மக்கள் இதில் கஞ்சா, மூக்குத்தூள், துப்பாக்கி மருந்து, சில விஷக்கடி மருந்துகள், அம்பு விஷம் போன்ற பல பொருள் இவற்றை அடைத்து வைத்துக்கொள்ளுகிறார்கள். சிறிய ஜாதியைச் சேர்ந்த பழங்களே இதற்கு மிகுதியாக உபயோகப்படும்.

இந்தப் பழத்தில் சேர்ந்துள்ள பதார்த்தங்களின் இயல்புதான் என்ன என்று விசாரித்து அறிந்து கொண்டேன்.

பழத்தின் உள் சதையில் ஒரு விதமான பாகுப் படையும், தசை வளர்ச்சிக்கு உதவும் 'பெக்டின்' என்னும் சத்தும், சர்க்கரை டானின் (tannin) என்னும் ஒருவகை அமிலமும், வாசனையுள்ள ஒருவிதத் தைலமும், ஒரு விதமான கசப்பு ருசியைத் தரும் சத்தும், சாம்பலும் சேர்ந்திருக்கின்றன. இதன் இலைகளைச் செக்கிலிட்டு ஒரு வித எண்ணெய் இறக்கலாம். வில்வ இலையின் தைலம் ஒருவிதப் பசு மஞ்சள் நிறமுடையது; நறுமணம் உள்ளது; சுவையில் கசப்பு. இதிலிருந்து இறக்கும் தைலம் வாத சம்பந்தமான வியாதிகளுக்கும், இதன் புஷ்பம் அமிதமான சீதபேதி, வாந்தி இவற்றுக்கும் உபயோகிக்கக்கூடிய ஔஷதச் சரக்குகள்.

ஓயாத வாந்தியாக இருந்தால், அதற்கு வேரைக் கஷாயம் செய்து சாப்பிடலாம்.

வாயு, பித்தம், கபம் மூன்று தோஷங்களையும் கண்டிக்க, வில்வ வேர் மிகவும் சிறந்தது. வில்வ இலைகொண்டு தயார் செய்த தைலம் காது நோய்களுக்கும், செவிட்டுக்கும், கரப்பான், சொறி, சிரங்கு முதலியவற்றுக்கும் நன்மை அளிக்கக்கூடியது.

வில்வக்காயைத் தீயில் இட்டால் சிறிது நேரத்துக்கெல்லாம் 'பட்' என்று வெடிக்கும். பிறகு எடுத்து மேலுள்ள சாம்பலையும் ஓட்டையும் நீக்கி, உள் சதையின் பாகத்தை மட்டும் சர்க்கரையோடு கலந்து உட்கொண்டு வந்தால், மிகவும் கடுமையான சீதபேதி குணமாகு மென்று 'பாவப்ரகாசம்' என்ற நூல் கூறுகிறது.

பாதி கனிந்த வில்வப் பழத்தை ஓட்டுடன் துண்டு துண்டாக உடைத்துச் சூரிய வெப்பத்திலே உலர்த்தி விடுங்கள். பிறகு அவற்றை இடித்து வெகு துல்லியமான துணியால் சலித்து வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சூர்ணத்தைத் தண்ணீரில் 1/8 சூர்ணம் சேர்த்துக் காய்ச்சினல் ஒரு விதக் கூழ் போலப் பக்குவமாகும். அதைப் பேதி, சீதபேதி முதலிய குடலைப் பற்றிய கோளாறுகளின் போது உட்கொள்வதால், நற்குணம் உண்டாகும்.

மலைவாசிகளான வில்லிகளும், ஆயுர்வேத டாக்டர் எம். வி. சுப்பிரமணியம் அவர்களும், யூனனி வைத்தியர் டாக்டர் எச். எம். இஸ்மாயில் அவர்களும் கூறிய விவரங்களே இங்கே நான் எழுதியிருப்பவை.

பெண்ணுக்கு மரியாதை

கையில் நிறைய மூட்டை முடிச்சுக்களுடன் பஸ்ஸிலே ஒரு பெண்மணி ஏறினள். எவனுவது மரியாதையாக எழுந்திருந்தால்தானே; இல்லை. அத்தனை ஆண்களும் இருந்த இடத்தில் அசையாது உட்கார்ந்திருந்தார்கள்.

ஸீட் ஒன்றில் அமர்ந்திருந்த ஒரு வாலிபனுக்கு இதைப் பார்த்து மிகவும் வருத்தமாய்ப் போயிற்று. அவன் மெல்ல அவளுடைய அங்கியின் நுனியைப் பிடித்து அவளிடம் கிசுகிசுத்த குரலில் சொன்னன்: ''இதோ பார், அம்மா. பஜார் தெரு வரும்போது தயாராக இரு. அங்கேதான் நான் இறங்கப் போகிறேன்.''

—'தி டெய்லி டெலிகிராஃப்', லண்டன்.

சாணக்கியன் தந்திரம்

கொடுமுடி ராஜகோபாலன்

ராஜதந்திரத்தில் உலகப் பிரத்தி பெற்றது கௌடில்ய ரின் அர்த்த சாஸ்திரம். சாணக்கியனின் மறு பெயரே கௌடில்யர் என்பது. அந்த அர்த்த சாஸ்திரத்தை மிகவும் அழகாகத் தமிழில் எழுதியிருக்கிருர் கொடு முடி ராஜகோபாலன். அவர் நீண்ட காலத் தேச பக் தர். சத்தியாக்கிரகப் போரில் கலந்து சிறை சென்ற தியாகி. அவரையும் அரிய ஆராய்ச்சி நூல்களை வெளி யிடுவதில் பேரார்வம் கொண்டவரான ஸ்டார் பிரசு ராலய நிர்வாகியான ஸ்ரீ கண. முத்தையாவையும் அந்த நூலுக்காகப் பாராட்டவேண்டும். அதிலிருந்து எடுத்த இந்தப் பகுதியை, இன்று 'நடுநிலைமை' பேசும் நம் ராஜதந்திரிகளெல்லாம் படிப்பது அவசியம்.

தேசங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் கொள்கை களையும்பற்றிக் கௌடில்யர் சொல்வது இது:

''அரசியல் விழிப்புள்ள ஒரு சமுதாயத்தின் வாழ்வு, சாகரம் போன்றது. அந்த வாழ்வில் நிரந்தரமான பரபரப்பும் பதற்ற நிலையுமே இருக்கின்றன. உயிருள்ள ஒவ்வோர் அங்கத்தையும் போல அதுவும் இயங்குகிறது. அதன் செயல்களும் தழுவல்களும் அதன் எல்லையில் இயங்கும் சக்திகளால் உருவாகின்றன. அதன் எல்லா உள்தேவைகளும் புறச் சூழ்நிலையால்தான் ஏற்படுகின்றன. சண்டையோ சமாதானமோ எதுவும் அதன் உள்நாட்டு நிலைமையால் மட்டுமோ கொள்கையால் மட்டுமோ நிர்ணயம் ஆவதில்லை. அதன் உள்துடிப்புகள் எல்லாம், வெளித் துடிப்புகளுக்கு உட்பட்டவையே யாகும். அதன் 'வீட்டுக்குரிய' நிலைமைகளை யெல்லாம், வெளித் தொடர்புகளால் ஏற்படும் சிக்கல் நிறைந்த-சதா மாறிக்கொண் டிருக்கும் - நிலைமைகளே நிர்ணயிக்கின்றன. எந்த லட்சியங்கள் மற்ற நாடுகளுடன் போரிட ஒரு நாட்டைத் தூண்டுகின்றனவோ, அதே லட்சியங்களுக்காகவே அந்த நாடு சமாதானத்தையும் நாடவேண்டும். உலக அமைப்பில் ஓர் இடம் பெற விரும்பும் அரசியல் விழிப்புள்ள எந்தச் சமுதாயமும், வெளியுலகத்தில் சண்டை சச்சரவுகளைப் புறக்கணித்துவிட்டுத் தன் உள்நாட்டில் சமாதானமாக வாழ விரும்புவதால் பலன் ஒன்றும் ஏற்படாது. அத்தகைய அமைதி, அடிமை நாடுகள் அநுபவிக்கும் 'அமைதி'யே யாகும். அரசின் எல்லைகள் கேவலம் பூகோள அமைப்பான கோடுகள் மட்டும் அல்ல; பிளக்கவே முடியாத வெறும் மலைகள் மட்டும் அல்ல; அவை, அரசியல் பாஷையில், ஆழ்ந்த ராஜதந்திர எல்லைகளாகும். தன் நாட்டின் நியாய

காப்பிரைட்: சாணக்கியனின் ஆட்சிக் கலை (தமிழ் நூல்). வெளியிட்டவர்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை ரூ. 2-0-0.

மான எல்லைகளைத் தீண்டும் ஒவ்வொரு புறத்தாக்குதலையுங் கண்டு எந்த நாட்டின் ரத்தம் கொதிக்கிறதோ, அந்த நாடே அரசியல் விழிப்புள்ள நாடாகும். இந்த ஞான அடிப்படையில்தான் தேசங்களுக்கு இடையே உள்ள உறவுகளும் கொள்கைகளும் இருக்க வேண்டும். அரசியல் உணர்ச்சியுள்ள சமுதாயம் எப்போதும் சக்தியுடன் இருக்கிறது. அது தன்னைச் சுற்றி இருக்கும் இயற்கையான - பூகோள ரீதியான - எல்லைகளுக்கு அப்பாலும் நீரோட்டம் போலச் சென்று தன் செல்வாக்கை அங்கெல்லாம் திணிக்கவே முயல்கிறது. முள்ளம் பன்றியைப் போல அது திருட்டுத்தனம் உடையது. அதைப் பலத்தினுல் அல்லாமல் அதன் எல்லைக்குள்ளேயே நிறுத்திவைக்க முடியாது. ஒவ்வோர் எல்லைப்புற நாடும் எதிரி நாடாக மாறக்கூடியதே. ஆகவே, நேச உறவுகளாலும் ராஜதந்திர நடவடிக்கைகளாலும் பலமுற்று, வெற்றிகரமாய் முன்னணியில் இருக்கும் நிலைமையே, எதிரி நாட்டின் ஆபத்திலிருந்து ஒரு நாட்டைக் காப்பாற்ற வல்லது. எந்த அண்டை நாட்டையும் ஒரு போதுமே பகை நாடாகவோ நட்பு நாடாகவோ பாவிக்கக்கூடாது. நீடித்த நட்பு இருந்து வருகிறது என்பதற்காக, ஓர் அண்டை நாட்டை நிரந்தரமான நேச நாடாக மதிக்க வேண்டும் என்பதில்லை. எப்போதும் ஒரு நாட்டின் எல்லைப் புறத்தைக் கவனத்துடனும் பலத்துடனும் பாதுகாக்க வேண்டும். எந்த நாட்டின்மீதும் படையெடுத்து ஜயிக்க வல்ல பலம் பெற்ற பிறகுதான், ஒரு நாடு அண்டை நாட்டின் நட்பைப் பெற முயல வேண்டும். அண்டை நாடுகள் தன்னுடன் நட்பா யிருக்கின்றன என்பதற்காக ஒரு நாடு தன் படைப் பலத்தைக் குறைத்துக் கொள்ள நினைக்கவும் கூடாது. தன் நாட்டுக்கு அபாயம் ஏற்படும் நிலைமையில், அந்த நாடு 'நான்' என்ற உணர்ச்சியுடன் ஆர்த்தெழ வேண்டும். இந்த உணர்ச்சியிலிருந்து கிளம்பி எழும் உத்வேகமே பாதுகாப்புக்கு உத்தரவாதமான பலத்தை அளிக்க வல்லது.

''பலமுள்ளவர்களிடையேதான் நீடித்த நட்புத் தோன்ற முடியும். ஆயுதப்பரிகரணத்தை எந்த நாடும் அவசர புத்தியுடன் ஏற்றுக்கொண்டுவிடக்கூடாது. உலகாயத ஆசைகளும் அபிலாஷைகளும் இருக்கும் வரைக்கும் ஆயுத பலமும் கூடவே இருந்துதான் ஆக வேண்டும். இதனுல் எப்போதுமே யுத்தம் வந்துகொண் டிருக்க வேண்டும் என்பதில்லை யாயினும், எந்த நாடும் யுத்தத்துக்குத் தயாரா யிருப்பதுதான் சிறந்த ராஜதந்திர பலமாகும்.

''வாளை எறிந்துவிட்டு ஏரைக் கையில் பிடித்துக்கொள்வதுதான் நட்பு ஒப்பந்தத்தின் பொருள் என்று கொள்ளவே கூடாது.

''அரசியல் ரீதியில், ஓர் அண்டை நாட்டுக்கு இன்னேர் அண்டை நாடு சக்தியுள்ள நேச நாடுதான் என்றாலும், அப்படியே-உண்மையாகவே-இருக்கவேண்டும் என்பதில்லை. ராஜீய அவசியத்தால் எழும் தேவையை யொட்டி ஏற்படும் பரஸ்பர நட்பு நீடிக்க வேண்டும் என்று நினைப்பதோ வாதிப்பதோ சரியானது அல்ல. எனவே, ஒளியும் நிழலும்போல ஒவ்வொரு நாட்டையும் நேச நாடுகளும் எதிரி நாடுகளும் மோதிர வட்டம் இட்டுக்கொண் டிருக்கின்றன. ராஜதந்திர ரீதியில், எந்த நாட்டைச் சுற்றியும் இந்த மாதிரியான கேந்திர நாடுகள் இருப்பதுதான் அந்த நாட்டுக்குப் பலம் என்பதை உணரவேண்டும். அரசியல் விழிப்புள்ள ஒரு சமுதாயம் வளர்ந்துகொண்டே இருக்கும்; தன்னைச் சுற்றிலும் (ஒரு மின்சார ஆகர்ஷண மண்டலம் போன்ற) நட்பும் எதிர்ப்பும் அடங்கிய-பெரிய - விரிந்துகொண்டே யிருக்கும்-வியூக வலையை விரித்துக் கொண்டே போகிறது.

''எந்த நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் மலிந்திருக்கின்றனவோ, எதன் மக்கள் துன்பத்தால் வேதனைப்படுகிருர்களோ, எதில் அரசியல் அபிப்பிராய பேதங்கள்

மண்டிக் கிடக்கின்றனவோ, எதன் மந்திரிகள் சுயநலம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ, எங்கே லஞ்ச ஊழல்கள் நிறைந்திருக்கின்றனவோ, எதன் ராணுவம் கூலிப் பட்டாளமாக இருக்கிறதோ, எதன் நிதி நிலைமை அபாயமாக இருக்கிறதோ அந்த நாட்டை எந்தக் காரணத்துக்காகவும் நேச நாடாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அந்த நாட்டையும் எதிரி நாடுகளின் ஜாபிதாவில்தான் சேர்க்கவேண்டும். ஏனென்றால், அந்த நாடு தன்னுடைய உள்நாட்டுப் பலவீனத்தாலும் வெளிநாட்டு எதிரிகளாலும் அடிமைத்தனத்தையே கூவி அழைத்துக்கொண்டிருக்கிறது.

"போர்க் காலத்தில் நடுநிலைமை நாடாக இருக்க நினைப்பதானால் அதில் தவறில்லை. ஆயினும், பயந்து கிடப்பதை 'நடு நிலைமை' என்று சொல்ல முடியாது. நடு நிலைமை என்பது கோழை நாட்டின் ஆயுதம் அல்ல! ஒரு நாட்டையோ பல நாடுகளைக் கொண்ட ஒரு கூட்டணியையோ எதிர்த்து முறியடிக்க வல்ல பலம் பெற்றுள்ள நாடுதான் நடுநிலைமை நாடாக இருக்கமுடியும். தன் மன உறுதி, வீரியம், திறமை இவற்றில் திடமான நம்பிக்கையுடனும், போதிய படைப் பலத்துடனும் இருக்கும் நடுநிலைமைக் கொள்கையே பாராட்டத் தக்கது." (நடு நிலைமை நாட்டை 'உதாசீன ராஜ்யம்' என்று கௌடில்யர் குறிப்பிடுகிறார்.)

இடை நாட்டின் (மத்யம ராஜ்ய) நிலைமைகளைப்பற்றியும் அவர் தெளிவாக ஆராய்கிறார். அவர் கூறுவது:

"தன் நாடு தாக்குதலுக்கு ஆளாகும்போது, முதலில் அந்த நாடு தனக்கும் தன் எதிரி நாட்டுக்கும் இடையேயுள்ள நாட்டை ஜயித்துக் கைப்பற்றிவிட வேண்டும். நேச, எதிரி நாடுகளை ராஜதந்திர ரீதியில் சமத்துவமாகப் பாவிப்பது போல இடைநாட்டைப் பாவிக்கக் கூடாது. இடை நாட்டின் அந்நிய உறவுகளை, அதைச் சார்ந்துள்ள பலமுள்ள பெரிய நாடே தன் ராஜீயத் தேவைகளுக்கும் கொள்கைகளுக்கும் இணங்க நிச்சயிக்க வேண்டும். வெளி உறவுகளை வைத்துக்கொள்ளும் பூர்ண ஆதிபத்திய அதிகாரமும் சுதந்தரமும் அதற்கு இருக்க அநுமதிக்கக் கூடாது. அதன் உள்நாட்டு விஷயங்களில் அது பூர்ண சுதந்தரத்துடன் இருக்க அநுமதிக்கலாம். ஆயினும், இடை நாட்டின் எல்லைகளுடைய பத்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஏராளமான செலவும் அதைச் சார்ந்துள்ள பலமான நாட்டின் தலைமீதுதான் விழுகின்றன."

தேசங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் கொள்கைகளையும் கௌடில்யர் ஆறு விதங்களாகப் பிரிக்கிறார். இந்த ஆறு விதங்களிலும் தீவிரமாகக் கவனம் செலுத்தி நடந்துகொள்ளாத எந்தத் தேசமும், தன் சொந்தத் துருப்புகளையே நம்பித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பது அவருடைய அபிப்பிராயம். அவர் கூறுகிற ஆறு கொள்கைகளின் விவரம்:

ஸந்தி: பிற நாடுகளுடன் ஒரு நாடு பலவித ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். ஒரு நாட்டின்மீது மற்றொரு நாடு படையெடுக்கக் கூடும் என்ற நிலைமை தோன்றும்போது, படையெடுப்பு அபாயத்துக்கு உள்ளாகி யிருக்கும் நாடு சில அல்லது பல பிற நாடுகளுடன் பரஸ்பர அனுக்கிரமிப்பு ஒப்பந்தம், பரஸ்பர உதவி ஒப்பந்தம் போன்ற உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளப் பின்வாங்கக் கூடாது. ஆயினும், இந்த ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள விரும்பும் ஒரு நாடு, சர்வதேசக் கூட்டு வலிமையை அவ்வளவு சுலபமாகச் சிருஷ்டித்து விட முடியாது என்பதையும், தன் தேசிய வலிமையினால் கூட்டு வலிமையின் மூலம் உடனடியாகப் போருக்கு ஆர்த்தெழ முடியாது என்பதையும் மறந்துவிடக் கூடாது. பலமுள்ள ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராகப் பல நாடுகளின் ஐக்கிய முன்னணி என்பது நன்றாக ஆலோசித்துத் தீர்மானிக்க வேண்டிய

விஷயம் என்பதையும், அதற்குத் தூரதிருஷ்டியுள்ள ராஜதந்திர ஞானம் அவசியம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்த ராஜ தந்திர வழியே ஸந்தி ஆகும்.

விக்ரஹ: ஒரு நாட்டின் எதிரி நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள உறவுகளையும் உடன்படிக்கைகளையும் அழித்துவிட எத்தனிப்பதே இது. தேசங்களுக்கிடையே ஏற்படுகிற கூட்டுறவு நடவடிக்கைகளைக் கவனித்து அவற்றின்மீது தன் கட்டுப்பாட்டை நிலைநாட்டத் தவறும் எந்த நாடும் சீர்குலைந்து விடும்; முடிவில் அதைப் பிற நாடுகள் ஜயித்து விடும்.

ஆஸன: தேசங்களிடையே ஏற்படும் கூட்டணிகளையும் விரோதங்களையும் போட்டிகளையும், இவற்றால் எழும் பதற்ற நிலைமையையும் கண்டு கலவரப்படாமல், தன் ஆற்றலுடன், படைப்பலத்துடன், நிறைந்த தன்னம்பிக்கையுடன், எந்தக் கூட்டுப் பலத்தையும் எதிர்த்து முறியடிக்கும் சக்தியுடன் இருக்கும் நாடுதான் நடுநிலைமை நாடு. சில சமயம் சிறிய நாட்டுக் குங்கூடத் தேசங்களிடையே மூண்டுவிடும் சண்டை - சச்சரவுகளிலிருந்து ஒதுங்கி நிற்பதுதான் சரியான வழியாக இருக்கிறது. எனவே, ஆஸன (ஒதுங்கி நிற்பது) என்ற வழியைப் பின்பற்றும் கலைத் திறனை ஒவ்வொரு நாடும் பெற்றிருக்க வேண்டும்.

யான: பல காரணங்களினால் ஒரு நாடு பலவீனம் அடையலாம். உஷாராய் இருக்கும் ஒரு நாடு, பலவீனமான தன் அண்டை நாட்டின் நிலைமைகளைப்பற்றி அலட்சியமாய் இருக்க முடியாது. எனவே, உஷார் நாடு, தாமதமில்லாமல் பலவீனமான தன் அண்டை நாட்டின்மீது ஆதிக்கங் கொண்டுவிட வேண்டும்; தன் படைப் பலம், பணம் போன்ற சகல சாதனங்களைக் கொண்டும் அந்த நாட்டில் தென்படும் எல்லா விவகாரப் போக்குகளையும் சிக்கல்களையும் சக்திகளையும் அழிக்கக் கூடிய கலைத்திறனுள்ள வழிக்கே 'யான' என்று பெயர்.

ஸமாச்ரய: தன்னுடன் சேரும் எல்லா நாடுகளையும் இணைத்துக் கூட்டுப் பாதுகாப்பு முறையை உருவாக்கும் வழிக்கே - ராஜதந்திரத் திறமைக்கே - 'ஸமாச்ரய' என்று பெயர். இந்தக் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டின் தலைமைப் பொறுப்பும் கொள்கை நிர்ணயமும் மேலதிகாரமும் மிகவும் சக்தி வாய்ந்த வல்லரசுகளிடமே இருக்க வேண்டும். இவற்றை வெறும் தார்மிக உணர்ச்சிபூர்வமான கடமைகள் என்றுமட்டும் எண்ணிவிடக் கூடாது. பல நாடுகளின் பல்வேறு போக்குகளையும், ராஜீய அவசியம் ஒன்றுக்காகப் பொருத்துவதில் அதிகச் சிரமம் இருக்கிறது. என்றாலும், சம பலமுள்ள வல்லரசுகளால்தான் இந்த விதமான கஷ்டத்தையும் சமாளிக்க முடியும். எந்த ராஜீய சமூகப் பொருளாதாரச் சமுதாய அமைப்புக்கும் பலமே முக்கிய அடிப்படையாக இருக்க வேண்டும். இந்தப் பலம் இல்லாது மனிதன் தன் தார்மிக-உலகாயதக் கடமைகளைச் செய்யவும், நான்கு புருஷார்த்தங்களையும் அடையவும் முடியாது.

துவைதீபாவம்: ஒழுங்கற்ற நாடுகளுடன் எந்தவிதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் ஒழுங்குள்ள நாடுகள் அதைப் பிரித்து வைப்பதும், அதே சமயம் தம்முடன் ஒத்துழைக்கும் பிற நாடுகளுடன் சேர்ந்துகொண்டு வலிமையுடன் பிரிந்து நிற்பதுமே 'துவைதீபாவம்': துவாரகையில் வாழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் இந்த வழியில் மிகவும் தேர்ந்திருந்தார்.

தான் ஜயிக்கும் ஒரு ராஜ்யத்தில், அரசன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கௌடில்யர் கூறுகிறார்:

"தான் ஜயிக்கும் ராஜ்யத்தில், ஜயித்த அரசன், தன் அதிகாரத்தை நிலைநாட்டவேண்டும். பிறகு, அந்த ராஜ்ய மக்களைக் கவர்ச்சி செய்வதற்குத் தயையுள்ள நியாயமான பல நடவடிக்கைகளை அவன் எடுத்துக் கொள்ள வேண்டும். அவன் எவருடைய நிலத்தையும் அக்கிரமமாகப் பறிக்கக்கூடாது; பொருள்களைக்

கொள்ளை அடிக்கக் கூடாது; தோற்றுப்போன அரசனின் குழந்தைகளுக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது; தோற்றுப் போன அரசனுடைய ராணியின் கற்பைக் கெடுக்கக் கூடாது. தோற்றுப் போன அரசனின் மகனையே தனக்கு உட்பட்ட சிற்றரசனுகப் பதவியில் அமர்த்த வேண்டும்.''

வெற்றி பெறும் அரசன், தோற்றுப்போன நாட்டில் அல்லது நாடுகளில் பொருள்களைக் கொள்ளை அடிப்பதையும் பெண்களின் கற்பைக் கெடுப்பதையும் கௌடில்யர் எந்த நிலையிலும் ஆதரிக்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்!

''தான் ஜயித்த ராஜ்யத்தில் அரசன், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும். அந்த ராஜ்ய மக்களுக்கு, அறத் துறைகளிலும் பிற உலகாயதத் துறைகளிலும் தம் கடமைகளைச் செய்து கொண்டு முன்னேறுவதற்கும், இன்பமாய் வாழ்வதற்கும் எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும்; அவன் நியாயமான காரியங்களையே செய்யவேண்டும்; அந்த ராஜ்யத்தின் நடையுடை பாவனைகளையும் பின்பற்ற வேண்டும்; அந்த நாட்டு மொழி பேசவேண்டும். அந்த ராஜ்ய மக்களின் தேசீய மத விழாக்களையும், விரதங்களையும் தானும் செய்து வர வேண்டும். தன் சொந்த நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு அவை மாறுபட்டவை என்ற எண்ணமோ, உணர்ச்சியோ சிறிதும் இல்லாமல் அரசனே அந்த ராஜ்யத்துத் தேசீய மதத் திருவிழாக்களை முன்னிருந்து நடத்தி வைக்கவேண்டும்; வரி வஜா, விவசாய அபிவிருத்தி போன்ற காரியங்களை அவன் உடனடியாக அந்த ராஜ்யத்தில் மேற்கொள்ளவேண்டும்.''

தான் ஜயிக்கும் ராஜ்யம் அல்லது ராஜ்யங்களில் அரசன் மிருகத்தனமான வெற்றிப் போதையில் ஆணவ ஆதிக்கம் செய்வதைக் கௌடில்யர் ஒரு போதும் ஆதரிக்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஒழுங்கான, நியாயமான வழிகளில் 'சக்கரவர்த்தி' தன் சாம்ராஜ்ய நாடுகளில் நடந்துகொள்ள வேண்டுமென்றே அவர் விரும்புகிருர்.

சொல் செட்டு

ஒரு ஸர்ஜன் இரண்டே வார்த்தைக்குமேல் பேச மாட்டார். அவருக்கு இணையான ஒரு பெண் ஒரு சமயம் வந்து சேர்ந்தாள். கை பெரிதாய் வீங்கியிருந்தது. கட்டுப் போட்டிருந்தாள். சம்பாஷணை தொடங்கியது.

''தீக்காயம்?''

''அடிக்காயம்.''

''பற்று.''

பெண் போய்விட்டு மறுநாள் வந்து சேர்ந்தாள்.

''குணம்?''

''மோசம்.''

''இன்னும் பற்று.''

மீண்டும் போய் இரண்டு நாள் கழித்துப் பெண் வந்து சேர்ந்தாள்.

''குணம்?''

''ஆம், பணம்?''

''ஒன்றும் இல்லை; மிகப் புத்திசாலியான பெண்.''

—'எடின்பரோ கெஜட்'

நவக் கிரகங்களையும் பல கோயில்களில் காணலாம்; ஆனால், திருநள்ளாற்றிலே -

சனிக்குத் தனிக் கோயில்

என். ராமகிருஷ்ணா



சனீசுவரனின் அபூர்வ வாகனம் - காக்கைதான்!



தூரத்திலிருந்து கோயில் தோன்றும் நேர்த்தியான காட்சி

பல வேறு தெய்வங்களுக்கும் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருக்க, சனி பகவானுக்கு மட்டும் தனியே ஒரு கோயிலைக் காண்பது அபூர்வம். நவக்கிரக தேவதைகள் எல்லாருக்குள்ளும் அவரைப் போல் குரூரமானவர் வேறு யாருமே இல்லை.

நவக்கிரகங்களைப் பொதுவாகக் கோயில்களில் ஒரு தனி இடத்தில் மொத்தமாகப் பிரதிஷ்டை செய்திருப்பார்கள். ஒவ்வொன்றும் ஒரு மூலையைப் பார்த்துக் கொண்டிருக்கும். யாராவது இந்தக் கிரகங்களில் ஏதாவது ஒன்றுக்கு அர்ச்சனை செய்வதாயிருந்தால் அங்கேயே உடனே செய்யலாம். வெகு தொலைவிலுள்ள சில ஊர்களில் இரண்டொரு கிரகங்களுக்குத் தனியே கோயில்கள் இருக்கின்றன. ஆனால் சனிக்குத் தனியே இப்படி ஒரு கோயில் இருப்பதுதான் விசேஷம். இவைகளில் காரைக்காலுக்கு அருகில் திருநள்ளாற்றிலுள்ள கோயில் (முன்னே பிரெஞ்சு ஆட்சியில் இருந்தது இந்த இடம்; இப்போது இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டது) மிகப் பெரியது.

பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்தபோது பாஸ்போர்ட் (அநுமதிச் சீட்டு) நிபந்தனைகளின் நிர்ப்பந்தம் காரணமாக இந்த ஸ்தலத்துக்குப் போய் வருவதே சிரமம். ஆனால் இப்போது அப்படி இல்லை; உற்சவ காலத்தில் ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் வருகிறார்கள். அதிலும் சனிப் பெயர்ச்சியின் போது (ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்குச் சனி மாறும் சமயம்) மக்கள் பின்னும் ஏராளமாக வருவது வழக்கம்.

புராணத்தில் வரும் நள - தமயந்தி கதை எல்லா இந்துக்களுக்கும் தெரிந்தது தானே? தமயந்தி தன் சுயம்வரத்தின் போது தேவதைகளை மதியாமல் நளனையே தேர்ந்தெடுத்து மணக்கவில்லையா? அதனால் தேவதைகளுக்கு அவள் மேல் கோபம்.

காப்பிரைட்: மெட்ராஸ் மெயில் (ஆங்கிலம்: 3-2-'57), சென்னை.

மேல்: கோயிலின் முன் வாசல் கோபுரம்.

நடு: கோயிலுக்குப் பக்கத்திலே எண்ணெய் விற்பவனிடம் எண்ணெய் வாங்கி, அதிலே ஒரு வெள்ளிக்காசு போட்டுப் புரோகிதருக்குத் தானம் கொடுப்பார்கள்.

கீழ்: மேலே காண்பது கோயில் விமானம். கீழே உள்ள மண்டபத்துக்கு முன்னே முளைத்திருக்கும் தர்ப்பையில் ஜனங்கள் முடிச்சுப் போட்டுச் செல்வார்கள்.







அவர்கள் இதற்குப் பழி வாங்கத் தீர்மானித்தார்கள். சனியை ஏவி நளனுக்குப் பெருந் துன்பம் விளைத்தார்கள். கடைசியில் திருநள்ளாற்றுக்கு நளன் வந்து அங்கிருந்த குளத்தில் குளித்தான். அப்போது சனி பீடை நீங்கியது. இந்தக் குளத்துக்கு ‘நள தீர்த்தம்’ என்று இப்போது பெயர் வழங்குகிறது. சனீசுவரன் இந்த இடத்தில் கோயில் கொள்ள இணங்கி, ‘இனி நளன் பெயரை யார் சொன்னாலும் அவர்களைப் பீடிப்பதில்லை’ என்று வாக்களித்தாராம்.

இதைக் கொண்டாடவே பத்தாயிரக் கணக்கில் அந்த நாளில் மக்கள் கூடி ‘நள தீர்த்த’த்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறார்கள். பிறகு கோயிலுக்குப் போய்ச் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து, அவருடைய சந்நிதியில் நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றி வைப்பார்கள்.

கிரகங்களுக்குள் சனி என்றால் எல்லாரும் அஞ்சுவார்கள். தங்களுக்குச் சனி தசையிலும் சனி புக்தியின் போதும் சனிப் பிரீதி செய்து வழிபடுவது வழக்கம்.

மாயவரம் - பேரளம் - காரைக்கால் ரெயில் மார்க்கத்தில் (ஸதர்ன் ரெயில்வே) இருக்கும் ஸ்டேஷன் திருநள்ளாறு. ரெயில் மார்க்கமாகவோ,

காரிலோ மாயூரம், பேரளம், காரைக் கால் இந்த இடங்களில் எங்கிருந்து வேண்டுமானுலும் திருநள்ளாற் றுக்கு எளிதில் போய்ச் சேரலாம். திருநள்ளாற்றுப் பெருமானுக்குத் தர்ப்பாரண்யேசுவரர் (தர்ப்பைப் புல் ஈசர்) என்று பெயர். இந்தக் கோயிலில்தான் சனி பகவானுக்கு என்று தனிச் சந்நிதி ஒன்று இருக் கிறது. மூலஸ்தானத்தில் தினந் தோறும் அபிஷேகம், ஆராதனை எல்லாம் நடக்கும். அதுவும் சனிப் பெயர்ச்சியின்போது அசாத்தியக் கும்பல் நெரிபடும். நள மகாராஜன் வழிபட்டு, அவனுக்குச் சனி பீடை நீங்கியதால், இதற்கு நளேசுவரம் என்றும் பெயர்.

உற்சவ காலத்தில் தரிசனம் செய்ய வருபவர்கள், குளத்தில் குளித்துவிட்டு வரும்போது சின்னச் சின்னக் கிண்ணங்களில் வெள்ளிக் காசு போட்டுப் புரோகிதர்களுக் குக் கொடுப்பார்கள்.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந் தது இந்தக் கோயில். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் காரைக்கால் பிரமுகர்கள் சிலர் கொண்ட கமிட்டியாரும் இதை நிர்வகித்து வருகிருர்கள். சனி பகவானுக்கு வாகனம் காக்கை - மற்ற எந்தத் தெய்வமும் ஏற்காத, அவருக்கே அலாதியான வாகனந் தான்! உற்சவ காலத்தில் சனி பகவானுடைய விக்கிரகத்தை வெள்ளிக் காக்கை வாகனத்தில் வைத்து அலங்காரம் செய்து பவனி வருவார்கள். சனிப் பெயர்ச்சி நாட்களைத் தவிர, ஒவ்வொரு சனிக்கிழமையும் சனி பகவானுக்கு விசேஷ பூஜை நடைபெறும். அப்போதும் ஏராளமான பேர் தரிசனம் செய்ய வருவார்கள்.

'நள தீர்த்த'த்தின் கரையில் நளனுக்கென்றே தனிக் கோயில் ஒன்று இருக்கிறது. அதற்கருகில் சிறு கிணறு ஒன்று உண்டு. அதில் கங்கை நீர் இருப்பதாகச் சொல் கிருர்கள். சனி பீடை நீங்கியதும், பகவான் நளனுக்கு அருள் புரியக் கங்கை நீர் கொண்டு வந்ததாக ஐதிகம்.

'ஸப்த விடங்க க்ஷேத்திரங்களுக் குள் திருநள்ளாறும் ஒன்று. இங்கே மாணிக்கக் கல்லில் செய்த ஓர் அழ கிய லிங்கம் இருக்கிறது. சைவ சமய குரவர்களான திருஞான சம் பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் ஆகியோர் திரு நள்ளாற்று எம்பிரானையும் நளனை யும் பற்றித் துதித்துப் பதிகம் பாடி யிருக்கிருர்கள்.

ஓவிய ரகசியம்

பள்ளிக்கூடச் சிறுவன் ஒருவன் அற்புதமாய் வர்ணந் தீட்டிக் குதிரை உருவச் சித்திரங்களை வரைந் திருந்தான். இவ்வளவு அருமையாய் அவன் சித்திரம் வரைவதன் ரகசியம் என்ன என்று யாரோ கேட்டார் கள். ''இதோ இங்கே'' என்று தன் டிராயிங் காகி தத்தைச் சுட்டிக் காட்டிய சிறுவன், ''குதிரையைக் காண்கிறேன். அப்படியே அதன்மேல் வர்ணத்தைத் தீட்டிவிடுகிறேன்'' என்றுன்.

—'ஹார்ப்பர்ஸ்'

ஞானம்

உண்மையும் கனவும் சேர்ந்தது லட்சியம்.

உண்மையும் நகைச்சுவையும் சேர்ந்தது வைதிகம்.

உண்மையும் கனவும் நகைச்சுவையும் சேர்ந்தது ஞானம்.

—லின் யூ டங்

ருஷியக் கதை:

ராஜாளி

மாக்ஸிம் கார்க்கி

இவர் ஸோவியத் ருஷியாவின் மிகச் சிறந்த ஆசிரியர். உலகப் புகழ் பெற்றவர். ஸோவியத் தலைவர்களின் பெருமதிப்பைப் பெற்றவர். புரட்சிக் கருத்துக்களை இலக்கிய நயம் செறிய எழுதிய நிபுணர்.

"இன்று நீங்களெல்லாம் பார்க்கும் இந்தப் பாழடைந்த கட்டிடந்தான், ஒரு காலத்தில் புகழ் பெற்ற அல் அஸ்ராப் என்ற கான் ஒருவனுடைய அரண்மனையாக விளங்கிற்று'' என்று ஆரம்பித்தான் டார்ட்டார் தேசத்து அந்தக் குருட்டுப் பக்கிரி. பெரிய ஆல மரம் ஒன்றில் சாய்ந்தபடி அவன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் கதையைக் கேட்டபடி அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டு பலர் உட்கார்ந்திருந்தார்கள். அங்கும் இங்கும் இடிந்து கிடந்த ஒவ்வொரு கல்லிலும் ஒவ்வொருவன் ஏறி உட்கார்ந்திருந்தான். சற்றுப் பெரிய கல்லில் தனியாக இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். துணிக் குல்லாயும் பாதம் வரையில் தொங்கிய ஆடையும் அவர்கள் அணிந்திருந்தார்கள். அப்போது சாயங்கால வேளை. சூரியன் கடலுக்குள் சென்று மறைந்துகொண்டிருந்தான். அடிவானம் முழுவதும் தங்கமயமாய் ஜொலித்துக்கொண்டிருந்தது. காற்று 'உஸ்' என்ற சப்தத்துடன் பலமாக வீசிக்கொண்டிருந்தது.

''அல் அஸ்ராபுக்கு அந்தப்புரத்தில் ஏராளமான மனைவிகள் இருந்தார்கள். கான் சற்று வயசானவன்தான். இருந்தாலும் அந்த ஸ்திரீகள் எல்லாரும் அவனிடம் அன்பு காட்டியே வந்தார்கள். கானின் பலம் பிரசித்தமானது. அவனுடைய கண்ணில் தோன்றி வந்த பிரகாசம் சிறிதும் குன்றவில்லை. பலசாலிகளுக்கு மயிர் நரைத்து விட்டாலும், ஸ்திரீகள் அவர்களிடம் ஆசை வைப்பது சகஜம்'' எனக் கூறிவிட்டுச் சற்று நிறுத்தினான் பக்கிரி.

எந்தக் கதையை எப்படிச் சொன்னால், முழுக் கவனத்துடன் ஜனங்கள் கேட்பார்கள் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். தன் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும், மெதுவாகச் சொல்லவேண்டிய இடத்தில் மெதுவாகவும், உரக்கச் சொல்லவேண்டிய இடத்தில் உரக்கவும் சொல்லி வந்தான்.

''அல் அஸ்ராப் அந்தப்புர ஸ்திரீகளில் பலரிடம் அன்பு வைத்தாலும், முக்கியமாகக் காஸாக் பெண்மணி ஒருத்தியிடம் மிகவும் ஆசைகொண்டிருந்தான். அவள் பேரில், கான் தன் உயிரையே வைத்திருந்தான். அவளுக்காக அரண்மனைக்கு அருகில் ஒரு தனிக் கட்டிடமே அமைத்திருந்தான். அவளுடனேயே தன் முழு நேரத்தையும் செலவிடுவது அவன் வழக்கம். சங்கீதம், நாட்டியம் இவற்றில் அவளுக்குப் பற்றுதல் அதிகம். அதற்கென்றே சங்கீதக் கச்சேரியும் நாட்டியக் கச்சேரியும் அடிக்கடி ஏற்பாடு செய்வான் அல் அஸ்ராப்.

''மரீனா-அதுதான் அவள் பெயர்; அவளுக்காகத் தன்னால் என்னவெல்லாம் முடியும் என்பதைக் காட்டுவதற்காக, அவளுடைய வீட்டை ரமணீயமாக ஜோடித்திருந்தான். பார்த்தவர் தேவலோகமோ என்று பிரமிக்கும்படி அதை அலங்கரித்திருந்தான். வீட்டுக்குத் தொலை தூரத்தில் தென்

பட்ட நீலக்கடல், அவள் மனத்துக்குள் எல்லையில்லா ஆனந்தத்தை எழுப்பிக்கொண்டிருந்தது. விதம் விதமான பட்சிகள், பல விதப் பூஞ்செடிகள், தங்கத்திலே நவரத்தினங்களையும் வைத்து இழைத்த ஆபரணங்கள் - இந்த எல்லாம் மரீனாவின் உள்ளத்தைக் குளிரச் செய்தன. குளிர்ந்த இந்த உள்ளத்துடன் உறவாடுவதிலேயே தன் நேரம் முழுவதையும் செலவிட்டு வந்தான் அல் அஸ்ராப். ராஜ்ய விவகாரங்கள் அனைத்தையும் பார்த்துக்கொள்ளத் தன் ஒரே பிள்ளையான அல்கல்லா இருக்கும்போது, அவனுக்கு என்ன குறை?

''அல்கல்லா மகா தைரியசாலி. சண்டையில் பெருந் திறமை வாய்ந்தவன். எதிரிகளைச் சிதற அடிப்பதில் நிபுணன். கொலை, கொள்ளை முதலியவை யெல்லாமே அல்கல்லாவுக்குத் தண்ணீர் பட்ட பாடு என்றால், அப்புறம் பார்த்துக்கொள்ளுங்களேன். சண்டைக்குச் சென்று திரும்பும்போதெல்லாம், பெண்ணும் பொன்னும் இல்லாமல், அவன் வீடு திரும்பவே மாட்டான். அவன் செல்லும் இடங்களிலெல்லாம் ரத்தவெள்ளம் ஓடும். வீடுகளும் கட்டிடங்களும் தரை மட்டமாகும். பீதியும் பயங்கரமும் மக்கள் மனத்தில் தாண்டவமாடும். 'நம் கதி என்ன ஆகும்? நம் கதி என்ன ஆகும்?' என்று ஒவ்வொரு மனிதரும் திகிலடைந்து நிற்பது வழக்கம். இப்படிப்பட்ட அல்கல்லாவிடம் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்த அல் அஸ்ராபுக்குக் கவலை ஏது?

''ஒரு சமயம் இப்படி வெற்றி முரசு கொட்டிக்கொண்டு அல்கல்லா ஊர் திரும்பியிருந்தான். ஊர் முழுவதும் விருந்தும் கொண்டாட்டமுமாக இருந்து வந்தது. அல் அஸ்ராபின் அந்தப்புரத்திலும் இந்தக் கொண்டாட்டத்தின் எதிரொலி அதிரத் தவறவில்லை. அங்கேயும் பாட்டும் எக்காளமும் நிறைந்தன. அல் அஸ்ராப் எல்லை இல்லா ஆனந்தம் கொண்டான். தன் சிறு வயசில் தானும் இந்த விதமே அடைந்த வெற்றிகளின் வைபவங்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. இந்த மாதிரி வெற்றி வீரனான அல்கல்லாவிடம் ராஜ்யத்தை ஒப்புவித்ததில் அவனுக்குப் பரம திருப்தி தான் ஏற்பட்டது.

''திராட்சை மது நிரம்பிய தங்கக் கிண்ணத்தை வாயண்டையில் கொண்டு சென்று, 'எல்லாரும் அல்லாவைத் துதியுங்கள்; அவருடைய திருத்தூதர் முகம்மதுவின் பெயரை வாயாரப் புகழுங்கள்' என்று அல் அஸ்ராப் போட்ட கட்டளையைப் பின்பற்றி எல்லாரும் உரக்க முகம்மது நபியின் பெயரை உச்சரித்தார்கள். பிறகு கான், 'அல்லாவே பெரியவர். நான் எவ்வளவோ புயலுக்கு மத்தியில் தடுமாறி வெற்றி கண்டேன். என்னுடைய இன்றைய புகழுக்கு ஆதியில் நான் பட்ட கஷ்டங்களே காரணமாகும். ஆனால் இன்று என் திருக்குமாரன் பழைய என் புகழை நிலைநாட்டி வருவதில் எனக்குப் பூர்ண திருப்தியே. அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை. முகம்மதுவே அல்லாவின் தூதர்' என்று கூறி முடித்தார். பிறகு அல்கல்லாவின் பக்கம் திரும்பி, 'உன் வெற்றியும் புகழும் எனக்கு எல்லையில்லா ஆனந்தத்தைக் கொடுக்கின்றன. உனக்கு என்ன வேண்டுமோ, கேள். அல்லாவின் மேல் ஆணையாக நீ எதைக் கேட்டாலும் அதைக் கொடுக்க நான் தயார்' என்றான் முதிய கான்.

''அல்கல்லாவின் முகம் ஒரு கணம் பளபள என்று பிரகாசித்தது. அவனுடைய கண்கள், இரவிலே இருண்ட கடல் ஒளி செய்வதுபோல ஜொலித்தன. பல நாளாக அவனுடைய உள்ளத்தில் புதைந்து கிடந்தும் பூர்த்தியாகாத ஓர் ஆசை திடீரென்று அவனைச் சற்றும் அசைக்க முடியாமல் பற்றிக்கொண்டது. சிறிதும் தாமதியாமல், 'அப்பா, எனக்கு அந்தக் காஸக் பெண்மணி மரீனா தான் வேண்டும்; வேறொன்றும் வேண்டாம்' என்றான்.

''அங்கே கூடியிருந்த எல்லாரும் அப்படியே வெலவெலத்து விட்டார்கள். மகன் இப்படிக் கேட்

பான் என்று சற்றும் எதிர்பாராத அல் அஸ்ராப் அப்படியே பிரமித்துப் போனுன். பிறகு ஒரு வித மாய்ச் சமாளித்துக்கொண்டு, 'சரி, நீ அவளை அடையலாம்; இப்போது முதலில் விருந்து முடியட்டும்' என்ருன்.

''அல்கல்லாவின் முகம் மலர்ந்தது; கண்களில் ஒரு திருப்தி தென்பட்டது. அவன் குனிந்து மெதுவான குரலில், 'அப்பா, நீங்கள் என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அல்கல்லா உங்கள் அடிமை. என் உயிரையே வேண்டுமானுலும் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். உங்கள் கையால் சாவது எனக்குச் சந்தோஷமே' என்ருன். 'எனக்கு ஒன்றும் வேண்டாம்' என்று தழுதழுத்த குரலில் முணுமுணுத்தான் அல் அஸ்ராப். தான் இத்தனை வருஷங்களாக அடைந்த வெற்றிகள், தன் துணிகரச் செயல்கள் எல்லாவற்றையும் அவன் நினைத்துப் பார்த்தபோது, உள்ளம் குளிர்ந்தது; உடல் பூரித்தது.

''கடைசியாக, விருந்து முடிந்தது. விருந்தாளிகள் எல்லாரும் கலைந்து சென்றுவிட்டார்கள். அல் அஸ்ராபும் அல்கல்லாவும் அந்தப்புரம் நோக்கிச் சென்ருர்கள். அப்போது இருவருக்கும் இடையிலே மௌனம் நிலவியது.

''எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சந்திரனே, நட்சத்திரங்களோ ஆகாயத்தில் தென்படவில்லை. கருமேகங்கள் வானைக் கவிந்துகொண்டிருந்தன. தகப்பனும் மகனும் இருட்டில் சென்றுகொண்டிருந்தார்கள். முடிவில் மௌனம் கலைந்தது. கான் பேசினுன்; 'எனக்கு வயசாகிக்கொண்டு வருகிறது. இன்னும் சில நாளேதான் இந்த உலகில் நான் ஜீவிப்பேன். அதுவரையில் என் உடலுக்கு உயிர் அளிப்பதும் ஜீவனுக்கு இதம் அளிப்பதும், மரீனுவின் பேச்சு வார்த்தைகளும் அவளுடைய கதகதப்பான அணைப்புந்தான். உண்மையாகச் சொல், அல்கல்லா. உனக்கு மரீனுதான் வேண்டுமா? வேறு ஏதாவது கேளேன்! என்னுடைய பிற அந்தப்புரப் பெண்களில் யாரை வேண்டுமானுலும், கேள்; தருகிறேன். ஏன், அவர்கள் எல்லாரையும் நீ கேட்டாலும் கொடுக்கத் தயார். ஆனுல் மரீனுவை மட்டும் என்னிடம் விட்டுவிடு; அவளைக் கேட்காதே' என்ருன்.

''அல்கல்லா ஒரு பெருமூச்சு விட்டான். மறுபடியும் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டான். 'நான் இன்னும் எத்தனை நாள் ஆயுசோடு வாழப்போகிறேன்? சில நாள் தான். மரீனுவே எனக்கு இந்த உலகில் சகலமும். என்னை அவள் பூர்ணமாகக் காதலிக்கிருள். அவளை விட்டுவிட்டால், இந்தக் கிழவனைக் காதலிக்க வேறு யார் இருக்கிருர்கள்? எவரும் இல்லை' என்ருன் கான்.

''அல்கல்லா மௌனத்தில் ஆழ்ந்தான். கான் மட்டும், 'மரீனுவை நீ கட்டி அணைத்துக்கொள்கிருய், அவள் உன்னை முத்தமிடுகிருள் என்று தெரிந்தும் நான் எப்படி உயிருடன் இருக்க முடியும்?..என் கடைசி நாளெல்லாம் துக்கம் நிறைந்ததாக அல்லவா போய் விடும்? அல்கல்லா, அந்த நாளை நான் நினைக்கவும் பயமாயிருக்கிறதே! எத்தனையோ யுத்தங்களில் நான் அடைந்த காயங்கள் அத்தனையும் மறுபடியும் பிய்த்துக்கொண்டு உடலில் உள்ள ரத்தம் அவ்வளவும் ஆருக ஓடினுல்கூடத் தேவலை என்றே தோன்றுகிறது. ஆனுல், எனக்கு இதைச் சகித்துக்கொண்டு உயிருடன் இருக்கவே முடியாது' என்று கூறி முடித்தான்.

''அல்கல்லா வாய் திறக்கவே இல்லை. அந்தப்புர வாயிலில் வெகு நேரம் வரையில் இருவரும் வாய் திறக்காமல் மௌனமாக நின்ருர்கள். ஆகாயத்தில் மேகங்கள் விரைந்து சென்றுகொண்டிருந்தன. காற்று வீசிய வேகத்தில் அருகிலுள்ள மரங்களின் இலைகள் சலசல என்று சப்தம் எழுப்பிக்கொண்டிருந்தன. 'வெகு நாளாக மரீனுவிடம் தீராத ஆசை வைத்து வருகிறேன். அவளுக்கு என்னைத் தவிர வேறு யாரிடமும் ஆசை இல்லை. உன்னிடம் அவளுக்கு எப்படிப் பற்றுதல் விழும்?' என்ருன் கான், மெதுவாக.

''அல்கல்லா, 'மரீனுவை நினைக்க, நினைக்க, என் இருதயம் நெகிழ்கிறது; அதைக் காந்தம்போல் இழுக்கிறது அவளுடைய உருவம்' என்றான்.

''கானே இதைக் கேட்டு, 'என் இருதயம் எதை நினைத்துச் சதா வாடுகிறது என்று நினைக்கிறாய்?' என்றான்.

''அல்கல்லா தொடர்ந்து, 'அந்த வயசான முல்லா சொன்னது சரிதான். பெண்கள் எப்போதுமே ஆண்களுக்குக் கெடுதல் செய்பவர்கள்தான். ஒரு பெண் அழகாக இருந்தால், பலர் அவளை விரும்புகிறார்கள். அவளுடைய புருஷன் திண்டாடுகிறான். மனைவி சற்று வெகுளியாக இருந்தாலோ, ஒரு புருஷன் பிற புருஷர்களின் பாக்கியத்தை எண்ணி வருந்துகிறான். பெண்களால் சதா ஆண்களுக்குக் கஷ்டந்தான் மிச்சம்' என்று கூறினான்.

''கான், 'புத்திசாலித்தனம் மனவேதனைக்கு மருந்தாகாது' என்று அதற்குச் சமாதானம் கூற ஆரம்பித்தான்.

''அல்கல்லா, 'இந்த நிலையில் நாம் ஒருவரை ஒருவர் பார்த்துப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு என்ன செய்யலாம், சொல்லுங்களேன்' என்றான்.

''கான் தன் தலையைத் தூக்கி நிமிர்ந்து, மகனை வருத்தம் தோய்ந்த முகத்துடன் பார்த்தான், ஒன்றும் தோன்றாமல்.

''அல்கல்லா திடீரென்று, 'நாம் அவளைக் கொன்று விட்டால் என்ன?' என்று கேட்டான்.

''கான், 'உனக்கு உன் ஆசையே பெரிது. மற்றவர்களைப்பற்றி உனக்கென்ன வந்தது?' என்றான்.

''மகனும் அதையே திருப்பி, 'உங்களுக்கும் அப்படித்தான்' என்றான்.

''கான் வருத்தத்துடன், 'எனக்கும் அப்படித்தான்' என்று ஒப்புக்கொண்டான்.

''அல்கல்லா மீண்டும், 'சரி; அவளைக் கொன்றுவிடுவதுதான் உத்தமம்! அப்படியே செய்துவிடுவோமா?' என்றான்.

''மறுபடியும் இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தார்கள்.

''கான் சொன்னான்: 'அவளை உனக்குக் கொடுத்துவிட்டு, என்னால் எப்படியும் சும்மா இருக்க முடியாது.'

''மகன், 'என் நிலையும் அப்படித்தான். அவளை நீங்களே பெற்றிருப்பதை இனி என்னால் பொறுக்க முடியாது. என் மார்பைக் கிழித்து என் இருதயத்தைக் கீண்டு வெளியே எடுத்து விடுங்கள், வேண்டுமானால். மரீனு எனக்குத்தான் வேண்டும்'' என்றான்.

''கான் சற்று நேரம் மௌனம் சாதித்தான். பிறகு, 'அப்படியானால் அவளைக் கடலில் தூக்கி எறிந்துவிடுவோமே' என்றான். 'சரி, அப்படியே செய்வோம்' என்றான் மகன்.

''இருவரும் மெதுவாக அந்தப்புரத்துக்குள் சென்றார்கள். எல்லாரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள். தங்கத் தகடடித்து அலங்கரித்த பெரிய கட்டிலில் மரீனு உறங்கிக்கொண் டிருந்தாள். நித்திரையில் என்ன கனவோ! உதட்டின் கோணத்தில் ஒரு சிறு புன்னகை மலர்ந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவளையே உற்று நோக்கிக்கொண்டு இருவரும் நின்றார்கள், நேரம் சென்றதுகூடத் தெரியாமல். கண்களில் ஊற்றெடுத்த கண்ணீர், கன்னத்தில் வழிந்தோடியது அல் அஸ்ராபுக்கு. ஜொலிக்கும் கண்களுடன் அவளைப் பார்த்துக்கொண்டு அல்கல்லா நின்றான். தாபத் தீ அவன் உள்ளத்தைக் கிழித்துக்கொண் டிருந்தது.

''இருவரும் அவள் அருகில் சென்று மெல்ல, 'மரீனு...' என்று கூப்பிட்டார்கள்.

''மரீனு விழித்துக்கொள்ளவில்லை. நித்திரையிலேயே ஆழ்ந்திருந்தாள். மறுபடியும் இருவரும், 'மரீனு, எழுந்திரு!' என்று மெதுவாகக் கூப்பிட்டார்கள்.

''இந்தத் தடவை மரீனு விழித்துக் கொண்டாள். அவளுடைய இரு பெரிய விழிகளும் திறந்து கொண்டன. தன் மாயக் கண்களை ஒரு தடவை அவள் சுழல

விட்டாள். இந்த உலகமே ஒரு தடவை சுழன்று நின்றது போலத் தோன்றியது தகப்பனுக்கும் மகனுக்கும். அல்கல்லா நிற்பதை அவள் கவனிக்கவில்லை. கானைக் கண்டதும் ஒரு புன்னகை பூத்தாள். கானிடம் முத்தம் பெறத் தயாராக அவளுடைய அதரங்கள் ஒன்று சேர்ந்தன. 'எனக்கு முத்தம் தாருங்கள், ராஜாளியே' என்றாள் மரீனா.

''கானோ அதைக் கேளாதவன் போல, 'எழுந்து வா, வெளியே எங்களுடன்' என்று அழுத்தமான குரலில் சொன்னான். எழுந்த அவள் அல்கல்லாவைப் பார்த்துவிட்டாள். அவள் முகத்தில் ஈயாடவில்லை. கானின் முகமும் சோபையற்று விளங்கியது. ஒரு விநாடியில் விஷயம் முற்றும் புரிந்துவிட்டது அவளுக்கு.

''அவள், 'நான் வருகிறேன்; வந்து கொண்டேதான் இருக்கிறேன்' என்று கூறியபடி நடந்து வந்தாள்; யார் பக்கமும் செல்லவில்லை. இருவருக்கும் மத்தியிலே நடந்து வந்துகொண்டிருந்தாள். முடிவு செய்ய வேண்டியவர்கள் தகப்பனும் மகனும். அவளுக்கென்ன! மூன்று பேரும் கடலை நோக்கி ஒரு புதிய வழியிலே சென்றார்கள். காற்று ஒரு முனகல் சப்தத்துடன் வீசியது. மரீனாவுக்குக் களைப்பு வந்துவிட்டது. ஆனால் அதை, அவள் வெளிக் காட்டவில்லை. 'ஏன் பின் தங்கி வருகிறாய்? வேண்டுமானால் நான் தூக்கிக்கொண்டு வருகிறேன்' என்றான் அல்கல்லா. தன் காலிலிருந்து வெளிவரும் ரத்தத்தை மரீனா மௌனமாகச் சுட்டிக் காட்டினாள். ஆயினும் அல்கல்லா தூக்கிச் செல்லுவதாகச் சொல்லி நீட்டிய கைகளை அவள் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. வயசான அந்த ராஜாளியின் தோள்களிலேயே தன் கையைப் போட்டாள். உடனே அல் அஸ்ராப் அவளைக் குழந்தையைத் தூக்குவது போல் தூக்கிச் சென்றான். அடர்ந்த மரங்களின் கிளைகளைத் தன் கைகளால் அவள் விலக்கிக் கொண்டே போனாள். கடல் அலைகளின் சப்தம் தூரத்தில் கேட்டது.

''பின்னால் வந்துகொண்டிருந்த அல்கல்லா; தகப்பனிடம் சொன்னான்: 'அப்பா, நான் முன்னால் செல்லுகிறேன்; விட்டுவிடுங்கள். எனக்குத் திடுமென உங்கள் கழுத்தில் கத்தியால் குத்திவிட வேண்டும் போல் விசித்திர ஆசை ஒன்று எழுகிறது' என்றான். இதைக் கேட்ட கான், 'பாதகமில்லை. உன்னைத் தண்டிப்பதோ, விட்டுவிடுவதோ அல்லாவின் கையில் இருக்கிறது. அவருடைய இஷ்டப்படிதான் எல்லாம் நடக்கும். நான் உன்னை ஒன்றும் செய்யப்போவதில்லை. எனக்குத் தெரியும் கரை காணாத ஆசை என்றால், எப்படி இருக்குமென்று' என்றான்.

''மலை உச்சியில் மூவரும் நின்றுகொண்டார்கள். கீழே பாதாளத்தில் கடல். அதன் அலைகள் மலையடிவாரத்தில் மோதி நிமிஷத்துக்கு ஒரு தரம் பலவீனமான ஒரு சப்தத்தை எழுப்பிக் கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் ஒரே இருட்டு; ஒரே குளிர். 'விடைகொடு' என்று கூறிய கான், மரீனாவை ஒரு தடவை ஆசையுடன் முத்தமிட்டான். 'போய் வா' என்று அல்கல்லா விடையளித்தான் மரீனாவுக்கு.

''மலையின் ஓரத்துக்கு அவள் சென்றாள். அடுத்த கணம் இரண்டடி பின் வைத்து, தன் இரு கைகளையும் தன் மார்புடன் அழுத்திப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டாள். அவர்களைப் பார்த்து, 'என்னைத் தள்ளிவிடுங்கள் கீழே' என்றாள்.

''மரீனாவை நோக்கி அல்கல்லா இரண்டடி முன் வைத்தான். ஆனால் மறு விநாடி அப்படியே நின்றுவிட்டான். கான் மட்டும் முன்னால் சென்று அவளைத் தூக்கித் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு ஒரு நிமிஷம் நின்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவளைத் தலைக்குமேல் தூக்கி அப்படியே கடலில் விட்டெறிந்தான். அலை மோதும் சப்தத்துக்கு நடுவே தண்ணீரில் அவள் விழுந்த

சப்தம் இருவருக்கும் கேட்க வில்லை.

''கான் பைத்தியம் பிடித்தவன் போல் அப்படியே நின்றுவிட்டான். 'வாருங்கள், போகலாம்' என்ருன் அல்கல்லா.

''கான், 'சற்று நில்' என்ருன்.

''அல்கல்லா, 'எவ்வளவு நேரம் இப்படியே நிற்பது? போகலாம், வாருங்கள்' என்ருன்.

''கான், 'கொஞ்சம் பொறு' என்ருன்.

''சற்று நேரம் யோசித்துவிட்டுக் கான் கிளம்பினுன். இருவரும் பத்தடி சென்றிருப்பார்கள். கான் மறுபடியும் அப்படியே நின்று விட்டான். 'நான் எங்கே செல்லுவது? எதற்கு?' என்று கேட்டான். மகனைப் பார்த்து, 'என் மரீனுவின் உயிர் போனவுடனேயே என் உயிரும் போய்விட்டது; இனி என்னிடம் ஆசை வைக்க யார் இருக்கிருர்கள்? எனக்கு வயசாகி விட்டது. அன்பும், பிரேமையும் அற்ற வாழ்வு சாரமற்றது' என்று முடிவாகச் சொன்னுன்.

''அல்கல்லா மௌனமானுன்.

''கான், 'அன்பும் பிரேமையும் தனவானுக்கு அவசியம். அவை இல்லாவிட்டால் அவன் ஒரு பிச்சைக்காரனே' என்ருன். மேலும் தொடர்ந்து, 'நான் விடை பெற்றுக்கொள்கிறேன், அல்கல்லா; அல்லா உன்னைக் காப்பார்' என்று கூறிவிட்டு, விடுவிடு என்று மலையோரத்துக்குச் சென்ருன். ஒரு பேச்சு இல்லை; ஒரு வார்த்தை இல்லை. துளிச் சப்தம் கிடையாது. கான் அஸ்ராபும் திடீரென்று பாய்ந்து கடலில் குதித்து, மரீனு சென்ற இடத்துக்குக் கூடவே சென்றுவிட்டான்.

''சிறிது நேரம் இதை எல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற அல்கல்லா, அரண்மனை நோக்கித் திரும்பி நடந்தான். எங்குமே இருட்டுத்தான் சூழ்ந்துகொண்டிருந்தது. திரும்பி நடந்துகொண்டிருந்த அல்கல்லா, மீண்டும் ஒரே பிரார்த்தனைதான் செய்துகொண்டு சென்ருன். 'ஓ, அல்லா! எனக்குக் கடின சித்தம் கொடு; ஒரு ராஜாளியைப் போன்ற பலமும் இருதயமும் கொடு' என்பதே அந்தப் பிரார்த்தனை.

''இந்த விதமாகக் கான் அல் அஸ்ராப் இறந்தான். அவனுடைய மகன் தொலேயிக் அல்கல்லா கிரிமியாவுக்கு அரசனுனன்'' என்று கூறிக் கதையை முடித்தான் டார்ட்டார் நாட்டுக் குருட்டுப் பக்கிரி.

[மொழிபெயர்த்தவர்: கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி]

என்ன கிடைக்கும்?

நீண்ட தலைமயிரோடு உயரமான ஒரு வாலிபன், சங்கீதப் பிரசுர ஆபீஸ் ஒன்றுக்குள் நுழைந்தான்.

''வாருங்கள். என்ன விஷயம்?'' என்று கேட்டார் பிரசுரகர்த்தர்.

வாலிபன் மிகுந்த கூச்சத்துடன், ''நான் ஒரு பாட்டுக் கட்டியிருக்கிறேன். பிரசுரிப்பீர்களோ, என்னவோ. பாடிக் காட்டட்டுமா?'' என்று கேட்டான்.

''பாடுங்கள். பார்க்கலாம்'' என்ருர் பிரசுர கர்த்தர்.

வாலிபன் பெருங் குரல் பாய்ச்சிப் பாடினுன். வாய் பேசாமல் திகைத்து உட்கார்ந்திருந்தார் முதலாளி.

பாடி முடிந்தது.

''இதற்கு எனக்கு என்ன கிடைக்கும்?'' என்ருன் வாலிபன்.

அவர் மிகத் துயரத்தோடு, ''நான் ஒரு பிரசுர கர்த்தன்தானே; மாஜிஸ்டிரேட் இல்லையே'' என்ருர்.

—'ஹியூமர்', ஆஸ்ட்ரேலியா.

ஹிந்திக் கதை:

பெரியவரின் உண்ணுவிரதம்

ப்ரேம் சந்த்

மேன்மை தங்கிய கனம் வைசிராய் அவர்கள் காசிமா நகருக்கு வரப்போகிறுர் என்ற செய்தி பரவியது. கீழ்ச்சிப்பந்திகள் முதல் பெரிய மேல் அதிகாரிகள் வரை எல்லாரும் வரவேற்பு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வெகு மும்முரமாக ஈடுபட் டிருந்தார்கள். இது இப்படி இருக்க, காங்கிரஸ்காரர்கள் நகர் முழுவதிலும் கடையடைப்பும் ஹர்த்தாலும் நடக்க வேண்டுமென்று பறையறைவித்து விட்டார்கள்! சர்க்கார் அதிகாரிகள் கதிகலங்கிப் போனுர்கள். தெருவெல்லாம் செப்பனிட்டுக் கொடிகளும் தோரணங்களும் கட்டி அலங்காரம் நடந்துகொண்டிருக்கிறது; பெரிய அலங்காரப் பந்தலுக்கு ஏற்பாடாகிவிட்டது; போலீசாரும் மிலிட்டரி சோல்ஜர்களும் அணிவகுத்து ரோந்து சுற்றிக்கொண் டிருந்தார்கள். சர்க்கார் அதிகாரிகள் எப்படியாவது ஹர்த்தாலைத் தகர்த்துவிட வேண்டுமென்று துடித்தார்கள். காங்கிரஸ்காரர்களின் பிரசார வேகம் ஹர்த்தாலுக்கு அதிக ஆதரவு கொடுத்துக்கொண் டிருந்தது. சர்க்காரிடம் ஆயுத பலம்; தொண்டர்களிடம் ஆத்மபலம் - எது ஜயிக்குமோ, பார்த்துவிடலாம்!

நகர மாஜிஸ்டிரேட் கடை கடையாக அலைந்து, வியாபாரிகளை மிரட்டிக்கொண் டிருந்தார்: ''மரியாதையாய்க் கடையைத் திறக்காவிட்டால், ஒவ்வொருத்தரையும் ஜெயிலிலே தள்ளி அடைப்பேன். கடைத் தெருவையே சுட்டுப் பொசுக்கிவிடுவேன்; ஜாக்கிரதை! தொலைத்துவிடுவேன், தொலைத்து!....''

ஒரு வியாபாரிக்காவது இந்தப் பயமுறுத்தல் காதில் ஏறவில்லை. எல்லாரும் ஒரே குரலாக, ''ஆளப் பிறந்தவர்கள் நீங்கள்; எது வேணுமானுலும் செய்யலாம்; செய்தும் காட்டுவீர்கள். ஆனல், நாங்களோ ஏழைகள்; என்ன செய்ய முடியும்? நாளைக்கு இந்தக் காங்கிரஸ்காரர்கள் எங்கள் கடைக்கெதிரே மறியல், சத்தியாக்கிரகம், உண்ணுவிரதம், உயிர்த் தியாகம் என்று ஏதாவது கேடு செய்யத் தொடங்கிவிடுவார்கள். ஒன்ரு, இரண்டோ இங்கே சாவு விழுந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்; நாங்கள் போகிற கதி? ஊரிலே தலை காட்ட முடியாதே! இழிவு கிடக்கட்டும், அந்தப் பாவத்தை எங்கே போய்த் தொலைப்போம்?'' என்று பதில் அளித்துவிட்டார்கள்.

எவ்வளவோ நயமாகவும், பயமாகவும் சொல்லிப் பார்த்தும், ஹர்த்தால் தீர்மானத்தைத் தவிர்க்க முடியவில்லை. காய்கறி விற்கும் கிழவி கூட, ''என்னைக் கொன்று போட்டாலும் சரி, கடையைத் திறக்க முடியாது. நாலு பேர் காறி உமிழ்வாங்க; மானக் கேடு. ஊரோடே ஒத்துப் போறதுதான் எதுக்கும் நல்லது'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்.

அதிகாரிகளின் கவலையெல்லாம், 'பந்தல்காரர்கள் வேலை செய்ய வராவிட்டால் என்ன செய்வது?'' என்பதுதான். திகிலும் குழப்பமும் அவர்களை வாட்டிக்கொண்டிருந்தன. கனம் வைசிராய் வர இன்னும் மூன்று நாள்தான் பாக்கி.

கடைசியாக ராஜா லால் சந்துக்கு ஒரு யுக்தி தோன்றியது. சர்க்காரின் அரவணைப்பிலுள்ள பிரபல நகரப் பிரமுகர் அவர்.

''இந்தக் காங்கிரஸ்காரங்க செய்கிற அழிச்சாட்டியத்தையே நாமும் செய்தால்?''

காப்பிரைட்: மான்ஸரோவர் (மூன்ரும் பாகம்); வெளியிட்டவர்: ஹிந்துஸ்தானி பப்ளிஷிங் ஹவுஸ், அலாகாபாத். விலை ரூபாய் 3.

கூடியிருந்த பிரமுகர்களுக்குச் சற்று நம்பிக்கை ஒளி தென்பட்டது. ''என்ன வழி அது?''- பல குரல்கள் கேட்டன.

''ஊரிலே பிரபலமாக இருக்கிற ஒரு பெரியவரை விட்டு, 'கடைகளைத் திறந்து வைக்காவிட்டால், உண்ணுவிரதம் இருப்பேன்' என்று சத்தியாக்கிரகம் செய்யச் சொன்னுல் என்ன?''

ராஜா லால்சந்தின் இந்த யோசனையைக் கேட்டதும், மற்றவர்கள் வெற்றிக் கொண்டாட்டமே நடத்தி விடுவார்கள்போல் இருந்தது. ராஜாவின் கூரிய மூளையைக் கொண்டாடாதவர் இல்லை. யாரை அழைப்பது என்ற பேச்சு வந்தது. பலர் பல பெரியவர்களைச் சிபாரிசு செய்தார்கள். அவ்வளவு திருப்திகரமாக இல்லை. கடைசியில் ராவ் சாகேப், ''பண்டித் மோட்டே ராம் சாஸ்திரியை அழைத்தால் என்ன?'' என்ருர்.

எல்லாரும் ஏகமனதாக இந்த அரிய யோசனையை ஏற்ருர்கள்.

''சாஸ்திரி பெரிய வித்துவான்; நியம நிஷ்டையோடு இருப்பவர்; நல்ல மதிப்புள்ளவர்; கெட்டிக்காரர். சம்மதித்து விட்டாராளுல் நம் அதிருஷ்டந்தான்'' என்று ராஜா நம்பிக்கையும் சந்தேகமுமாய்ச் சொன்னுர். ராவ் சாகேப் உடனே சாஸ்திரியைக் கையோடு அழைத்துவர ஆள் அனுப்பினுர்.

பெரிய இடத்திலிருந்து அழைப்பு வந்திருப்பதைக் கேட்டதும், பண்டித் மோட்டே ராம் சாஸ்திரி அவசர அவசரமாகத் தம்மை அலங்கரித்துக்கொண்டு கிளம்பினுர்.

நல்ல பருமனுன சரீரம்: வைதிகக் கோலம்; கம்பீரமான தோற்றம்; முகத்தில் பிரம்ம தேஜஸ்! தூரத்தில் பார்க்கும்போதே, யாரோ மகான் எழுந்தருளுகிருர் என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். தெருவில் தென்படும் யாரும் தலைவணங்கி அவருக்கு மரியாதை செலுத்தாமல் போவதில்லை. கடைக்காரர்கள் எழுந்து நின்று வணங்கினுர்கள். காசிமா நகருக்கே கௌரவம் அளிக்கும் பெரியவர். சுபாவமும் பண்புக்கு ஏற்ருற் போல் எவ்வளவு சரளம்! குழந்தையிடங்கூடச் சிரிப்பும் சிநேகமுமாகத்தான் பேசுவார். நிறை குடம்.

பெரியவர் இந்த வைபவத்துடனேயே பிரபலஸ்தர்களின் முன்னிலையில் வந்து சேர்ந்தார். மரியாதை, வரவேற்பு, உபசாரம் எல்லாம் முடிந்ததும், ராஜா லால்சந்த் விஷயத்தைத் தெரிவித்தார்.

மோட்டே ராம் தம் பிரதாபங்களை விவரித்துவிட்டு, எதையும் சாதிக்கத் தயார் என்று அபயம் அளித்தார். அவர் சொன்னது எல்லாருக்கும் திருப்தியாக இருந்தது.

''உலகத்திலே குணத்துக்கா குறைவு? குணத்தை அறிந்து கொள்பவர்கள்தான் மிகக் குறைவாக இருக்கிருர்கள். ஏதோ உங்கள் மாதிரி அரிதாக ஒரு சிலர் இராமலில்லை.''

''இந்தச் சுப காரியத்துக்கு என்ன செலவாகும், சொல்லுங்கள்?'' என்று ராஜா கேட்டார்.

''உங்கள் சிநேகம், சிரத்தை இவற்றைப் பொறுத்திருக்கிறது. நான்தான் சொல்லணுமா?''

''சரி, என்ன அநுஷ்டிக்கப் போகிறதாக உத்தேசம்?

''உண்ணு விரதத்தோடு, விடாமல் மந்திர ஜபமும் உக்கிரமாக நடத்தப்போகிறேன். ஊர் பூராவையுமே கதிகலங்க அடிக்காவிட்டால், என் பேர் மோட்டே ராம் சாஸ்திரி இல்லை!...... நீங்களே பாருங்களேன்.''

''சரி, என்றைக்கு ஆரம்பம்?''

''இன்றைக்கே ஆரம்பித்து விடலாம். கொஞ்சம் பணம் வேணும். பூஜை, ஆவாஹனம், முன்னேற்பாடு எல்லாம் கொஞ்சம் செய்துகொள்ள வேணும், பாருங்கள்!''

பணத்துக்கா பஞ்சம்? பச்சை நோட்டுகள் சாஸ்திரி கைக்கு வந்து சேர்ந்தன. வீட்டுக்கு வந்து, மனைவியிடம் தகவலைத் தெரிவித்தார். அந்த அம்மாள் பயப்பட்டாள்

"வீண் வம்பிலே மாட்டிக் கொள்ள வேண்டாம். உங்களுக்கும் உண்ணு விரதத்துக்கும் ரொம்ப தூரம். பசி தாங்காது; பின்னாலே, அவமானப்படணும்; ஊர் சிரிக்கும். உடனே போய்ப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு மறு காரியம் பாருங்கள்" என்றாள்.

மோட்டே ராமுக்குச் சிரிப்பு வந்தது. "நான் என்ன முட்டாளா, இப்படியே போய் உட்கார்ந்துகொள்ள? மூணு நாளைக்குப் பசி எடுக்காதபடி, மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டுவிட்டுத்தான் உண்ணு விரதத்துக்கு உட்காரப் போகிறேன். சீக்கிரம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்! ஹர்த்தால் நின்றதோ, நான் குபேரன்தான்; இல்லை, நம் கை முதல் ஒண்ணும் பறி போய்விடவில்லை. முந்நூறு ரூபாய் கைக்கு வந்தாகிவிட்டது. பயப்படாதே, போ!" என்று மனைவிக்கு ஆறுதல் சொல்லி விட்டு, மோட்டே ராம் சாப்பிட உட்கார்ந்தார்.

இங்கே நிதானமாகச் சாப்பாடு நடந்து கொண்டிருக்கும் இதே சமயத்தில், சாயந்தரம் டவுன் ஹால் மைதானத்தில் தாம் ஓர் அரசியல் பிரசங்கம் செய்யப் போவதாக ஊர் பூராவும் பறை யறைவிக்க ஏற்பாடு செய்திருந்தார் மோட்டே ராம்.

மைதானத்தில் ஜனக்கூட்டம் நெரிந்தது. உபந்நியாசம், காலட்சேபம், உபதேசம் என்று தர்ம விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தவர், இன்று எதிர்பாராமல் அரசியல் பிரசங்கம் செய்கிறார் என்று அறிந்ததும், திரள் திரளாக மக்கள் வந்து கூடிவிட்டார்கள். இதில் ஏதோ பெரிய மகத்துவம் இருக்கிறது என்ற நம்பிக்கை எல்லாருக்கும்.

குறித்த சமயத்தில் பண்டித் மோட்டே ராம் சாஸ்திரி மேடைக்கு வந்து சேர்ந்தார். ஜனங்கள் தரையில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள். போலீசார் நல்ல பந்தோபஸ்து செய்திருந்தார்கள்.

மோட்டே ராம் தம் பிரசங்கத்தைத் தொடங்கினார்: "நகரவாசிகளே! வியாபாரிகளே! பிரபுக்களே!.." என்று எல்லா ரகத்தாரையும் அவர் அழைத்து, "காங்கிரஸ்காரர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு யாரும் கடையடைப்பு, ஹர்த்தால் எதுவும் செய்யக்கூடாது" என்று உருக்கமாக வேண்டிக்கொண்டார். மேன்மை மிக்க ஆங்கிலேய அரசாங்கத்தின் அபரிமிதமான சக்தியை விவரித்துப் பயமுறுத்தினார். "துடைப்பத்தைக் கொண்டு, சூறாவளியைத் தடுக்க முற்படுகிற மாதிரி, இதென்ன கேலிக்கூத்து!" என்று இடித்துக் காட்டினார். கடைசியாக, "நீங்கள் யாராவது கடையைக் கிடையை அடைத்தால், நான் இங்கேயே அன்ன ஆகாரம் இல்லாமல் சத்தியாக்கிரகம் செய்தே உயிரை விட்டு விடுவேன்!" என்று சூளுரைத்தார்.

"சுவாமி, உங்கள் உயிர் பிரிய ஒரு மாசமாவது ஆகுமே. மூன்று நாள் எந்த மூலைக்கு?" - கூட்டத்தில் ஒரு விஷமி இப்படிக் கேட்டு வைத்தான்.

மோட்டே ராம் ஆக்கிரோஷத்துடன் சொன்னார்: "அறிவிலியே, பிராணன் இந்த ஓட்டை உடம்புக்கு அடங்கினதில்லை. நான் நினைத்தால், யோக பலத்தாலே இப்போதே பிராணனை விட்டுவிட முடியும். உங்கள் நன்மைக்குத்தான் சொல்லுகிறேன். வீணுக்குச் சீரழிந்து போய்விடாதீர்கள். சரி, நான் இங்கேயே உட்கார்ந்து உண்ணுவிரதம் செய்யப் போகிறேன். ஒன்று, நீங்கள் வழிக்கு வரவேண்டும்; இல்லை, என் பிராணன் பிரிய வேண்டும். அவ்வளவுதான்!"

தீ விபத்து மாதிரி செய்தி நகர் முழுவதும் பரவியது. ஜனங்கள் நடுங்கிவிட்டார்கள்: 'ஒரு பெரியவர் இப்படிச் சத்தியாக்கிரகம் செய்தால், நாட்டுக்கும் நமக்கும் பெரிய அவகேடல்லவா விளையும்!' என்று எண்ணினார்கள். காங்கிரஸ்காரர்கள் ஓடி ஓடிப் பிரசாரம் செய்தார்கள்: "இது வெறும் சூழ்ச்சி, ஏமாற்று வேலை, கயவாளித்தனம்; யாரும் நம்பி

மோசம் போக வேண்டாம்.'' இதெல்லாம் யார் காதிலும் ஏற வில்லை. பெரியவரின் பெரும் புகழும், தர்ம நெறியுந்தான் எதிரே நின்றன. வியாபாரிகள் பெரிய ஆஸ்திகர்கள்; தர்மம், தெய்வம், சாஸ்திரம் என்பதற் கெல்லாம் பயந்து பணிந்து போகிற வர்கள். அவர்களுக்கு இது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. எல் லாரையும்விட அதிகக் கவலை காங் கிரஸ்காரர்களுக்கு. அரசாங்கத் தார் இப்படி ஒரு குயுக்தி செய் வார்கள் என்று எவரும் எதிர் பார்க்கவில்லை.

''நீங்கள் என்ன வேண்டுமானு லும் சொல்லுங்கள்: ஒரு பண்டி தர் - தர்மம் தெரிந்த பெரியவர்- தர்மத்தின் பேரில் சத்தியாக்கிரகம் செய்கிறபோது, நாங்கள் அலட் சியம் செய்ய முடியாது. தப்பித் தவறி ஏதாவது விபரீதம் நடந்து விட்டால், எங்கள் வம்சமே நசித்து விடுமே! தெய்வத்துக்காவது பயப் படத்தானே வேணும்?''

''இத்தனை நாளாக நீங்கள் சொல்கிறபடியெல்லாம் ஆடினேம்; சர்க்காரின் விரோதத்தையும் சம் பாதித்துக் கொண்டோம். ஏதோ தேசம், சேவை என்று சகித்துக் கொள்ளுகிறோம். தார்மிக விஷயங் களிலும் நீங்கள் வந்து தலையிடு வது நல்லதில்லை. நீங்கள் உங்கள் எல்லையோடு நிற்கிறதுதான் சரி.''

வியாபாரிப் பிரமுகர்கள் இப் படியே பேசி, காங்கிரஸ்காரர்களை உதறி விட்டுக்கொண் டிருந்தார் கள்.

இரவு ஒன்பது மணி. மண்ட பத்தில் மோட்டே ராம் உட்கார்ந்த படி உண்ணுவிரத சத்தியாக்கிரகத் தில் ஈடுபட் டிருந்தார். நடுப்பகலுக் குப் பிறகு வயிறுமுட்ட, நல்ல வச மான சாப்பாடு சாப்பிட்டிருந் தாலும், சாப்பாட்டு வேளை வந்த தும் அவர் மனசு சபலம் கொள்ளத் தொடங்கியது. இந்த மாதிரி சாப்பாடெல்லாம் அவருக்குச் சர்வ சகஜம். மாதத்தில் இருபது நாள் விருந்து, திதி, பூஜை, ஆராதனை என்று விசேஷ போஜனம் இருந்து கொண்டே இருக்கும். இதை யெல்லாம் அல்ப ஆகாரமாக்கிக் கொண்டு வளர்ந்திருந்தது அவ ருடைய ஜீர்ணசக்தி. இப்போதும், பசி, தவிப்பு என்பதென்னவோ இல்லைதான். இருந்தால், வேளை வந்ததும் ஓர் ஆசை ஏற்படுவது சகஜந்தானே? பட்சண வண்டிக் காரன் எவனுவது போனுல், காதும் காதும் வைத்தாற்போல் கொஞ்சம் வாங்கி வாயிலே போட்டுக் கொள்ளலாம். ஆனுல், இந்தப் பாவிப் பயல்கள் காவல் வேறு நிற்கிறுர்களே!

சர்க்கார் அதிகாரிகள் பெரிய வருக்குக் காவலாகப் போலீஸ் காரர்களை நிறுத்தி வைத்திருந்தார் கள். பெரியவர் பேரில் நாயை எவனுவது ஏவிவிடுவான்; இல்லா விட்டால், மறைவிலிருந்து கல்லை விட்டெறிவான். காங்கிரஸ்காரர் கள்தான் எதற்கும் துணிந்த கட்டைக ளாயிற்றே!

இந்தப் 'போலீஸ் தடியன்'களை இங்கிருந்து எப்படி விரட்டலா மென்று, மோட்டே ராம் யோசித் துக்கொண் டிருக்கும்போதுதான், வியாபாரிகளின் தூதுக் கோஷ்டி ஒன்று வந்து சேர்ந்தது. பெரியவர் ஒருக்களித்து, கைமுட்டைத் தரை யில் ஊன்றிக்கொண்டு அரைப் படுக்கையாக இருந்தார். தூதுக் கோஷ்டித் தலைவரும், அவருடைய நண்பர்களும் பெரியவரின் பாதங் களைத் தொட்டு வணங்கினுர்கள். தயை செய்து உண்ணுவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கெஞ்சி னுர்கள்.

காங்கிரஸ்காரர்களைத் திட்டி, அவர்கள் சொல்படி ஆடும் கடைக் காரர்களையும் ஏசிவிட்டு, ''எல் லாம் உங்கள் நன்மைக்காகத்தான் நான் இப்படி உண்ணுவிரதம் இருக் கிறேன்'' என்று அறிவித்தார் மோட்டே ராம்.

''நாங்கள் பஞ்சாயத்துக் கூடி நிச்சயம் செய்ய வேண்டிய விஷயம் இது. நீங்கள் உண்ணு விரதத்தை முதலிலே நிறுத்தி விடுங்கள். நாங்கள் சீக்கிரமே கூடிச் சாதகமான முடிவுக்கு வந்து விடுகிறோம்'' என்று தூதுக் கோஷ் டித் தலைவர் சொன்னுர்.

''முடிவு செய்தபிறகு வருவது

தானே? இப்போது என்ன அவசரம்?'' என்று பிடி கொடுக்காமல் பெரியவர் சொன்னதும், தூதுக் கோஷ்டியார் ஏமாற்றத்துடன் திரும்பினுர்கள்.

''யார்கிட்டேயாவது பொடி மட்டை இருந்தால், கொடுத்து விட்டுப் போங்களேன்.'' பெரியவர் இப்படிக் கேட்டதும், ஓர் அநுதாபி தன் பொடி டப்பாவைக் கொடுத்துவிட்டுச் சென்ருன்.

பெரியவருக்கு இந்த யமகிங்கரர்களை (போலீஸ்காரர்களை) எப்படி விரட்டுவது என்பது பெருங் கவலை ஆகிவிட்டது.

''ஏனப்பா, இங்கேயே பழியாய் நின்றுகொண் டிருக்கிறீர்கள்?''

''மாஜிஸ்டிரேட் ஐயா உத்தரவு இப்படி.''

''சரி, நான் சொல்லுகிறேன்; நீங்கள் போய்ச் சேரலாம்.''

''ஓகோ! நீங்கள் சொல்லி விட்டால் போதுமா? எங்கள் வேலை போய்விட்டால், நீங்கள் சோறு போடுவீர்களா?'' என்ருன் ஒரு ஜவான்.

''அதிகம் பேசாதே! நான் சொல்லுகிறேன்: நீங்கள் போய் விடுங்கள்! இல்லை, இதோ நானே எழுந்து போய்விடுவேன்.''

''அடேயப்பா! எழுந்து போயிடுவீங்களா! ரொம்பத் துணிச்சல் தான்!''

''நான் என்ன குற்றவாளியா, இப்படிப் பாராக் காவல் போட? துணிச்சல் இல்லாமல் என்ன?''

''எங்கே, போங்களேன் பார்க்கலாம்?''

அவ்வளவுதான்; பெரியவருக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்துவிட்டது. பயமுறுத்தின போலீஸ்காரனைக் கழுத்தைப் பிடித்து வேகமாகத் தள்ளினுர். பந்துமாதிரி அவன் எகிறிப் போய்ச் சுருண்டு விழுந்தான். மற்றவனுக்கு நடுக்கம்; தனக்கும் இந்தக் கதி வந்துவிட்டால்? வெறும் ஊளைச் சதை என்று நினைத்தவர்கள், பெரியவரின் அமிதமான பராக்கிரமத்தைக் கண்டதும், வெலவெலத்துப் போனுர்கள். பிறகு அங்கே நிற்க, எவனுக்கும் தைரியம் வரவில்லை.

தடை நீங்கியதும், மோட்டேராம் ஆவலோடு சுற்றும் முற்றும் பார்த்தார். நல்ல வேளையாக, ஒரு



பட்சண வண்டிக்காரன் வந்து கொண் டிருந்தான். இரவு பதி னொரு மணி ஆகிவிட்டது. நட மாட்டம் ஓய்ந்து, அமைதி நிலவி யது. பெரியவர் மெல்ல அவன் அருகில் சென்றார்.

''என்ன வேணும், சாமி? பசி எடுக்கிறதா? உண்ணுவிரதமெல் லாம் சாது ரிஷிங்களுக்கு ஏத்தது. நீங்களும் நானும் இதுக்கெல்லாம் லாயக்கில்லே.'' வாடிக்கைக்காரன் அவன். உரிமையோடு கிண்டல் செய்தான் மோட்டே ராமை.

பெரியவருக்கு மதிப்பை விட்டுக் கொடுக்க விருப்பம் இல்லை. அலட் சியக் குரலில், ''எலே! இங்கே இவ ரும் எந்த ரிஷிக்கும் சாதுவுக்கும் குறைந்தவர் இல்லை. உன்னைக் கூப் பிட்டது, பட்சணம் தின்கிறதுக்கா? கொஞ்சம் வண்டி விளக்கைக் கொடு. கீழே என்னமோ ஊர்ந்து போகிறமாதிரி இருக்கிறது. ஒரு வேளை பாம்பாக இருந்து வைத் தால்?'' என்றார்.

வண்டிக்காரன் சிம்மிணி விளக்கை எடுத்துப் பெரியவரிடம் கொடுத்தான். கீழே இங்குமங்கும் பார்க்கும்போதே, விளக்குக் கை தவறிக் கீழே விழுந்துவிட்டது; சட் டென்று எடுக்கிற பாவனையில், விளக்கில் மீதி இருந்த எண்ணெ யையும் பெரியவர் கவிழ்த்துக் கொட்டிவிட்டார். பிறகு, அநு தாபத்தோடு, வண்டிக்காரன் கை யில் காசைக் கொடுத்து, பக்கத்துக் கடையில் எண்ணெய் போட்டுக் கொண்டு வரச் சொன்னார்.

''எண்ணெயைப் போட்டுக் கொண்டு அப்படியே வீட்டுக்குப் போய்விடுகிறேனே'' என்று கெஞ்சினன் வண்டிக்காரன்.

''நான் இன்னும் ஒழுங்காய்ப் பார்க்கவில்லை. பாம்போ, பூச் சியோ; பார்த்துவிடுகிறது நல்ல தில்லையா? ஓடிப் போய் வந்துவிடு. என்பேரிலே சந்தேகமாயிருந்தால், காசுப் பெட்டியைக் கையோடு கொண்டு போ!''

வண்டிக்காரனுக்குத் தர்ம சங்கடம் ஆகிவிட்டது. தெய்வத் தின்பேரில் பாரத்தைப் போட்டு விட்டுக் கடைக்கு ஓடினன். இதற் குள் பெரியவர் பட்சணத் தட்டுக் களைத் துழாவினர். பெரிய ஏமாற்ற மாக இருந்தது. விற்றது போகக் கொஞ்சந்தான் மிச்சம். எடுத்தால் நன்ருகத் தெரிந்துவிடும்; என்ன செய்வது?....

இப்படிக் குழம்பிக்கொண் டிருக் கும்போதே, வண்டிக்காரன் விளக் கும் கையுமாகத் திரும்புவது தெரிந்தது. பெரியவருக்குக் கிலி: கைக்கெட்டியது வாய்க்கு எட்டா மல் போய்விட்டால்-? அவசரம் அவசரமாகத் தட்டுக்கு ஒன் றிரண்டு பட்சணம் வீதம் எடுத்து வாயில் திணித்துக்கொண்டார். நாலு வாய்க்குள் இருந்தன; ஆறு கையில் மீதி. இதற்குள் அருகில் அந்த ராட்சசன் வந்துவிட்டான். முன்னே போட்டதே முழுவதும் விழுங்கியாகவில்லை; வேறு வழி இல்லாமல் மீதி ஆறையும் சட் டென்று வாய்க்குள் திணித்துக் கொண்டுவிட்டார்! விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தவித்தார். கண்களில் நீர் முட்ட, புரையேற வேறு தொடங்கி விட்டது. ஒரு வழியாக, விழுங்கி விட்டு, இருமிக்கொண்டு நிற்பதற் கும், வண்டிக்காரன் விளக்கைக் கொடுப்பதற்கும் சரியாக இருந் தது.

தரையில் குனிந்து தேடுவது போல் பாசாங்கு செய்துவிட்டு, விளக்கைத் திருப்பிக் கொடுத்தார். வண்டிக்காரன் போகிறபோக்கில், ''சாமி, உண்ணுவிரதம் இருக்கிற வங்களுக்கு இப்படி உசிரிலே ஆசை இருக்கிற வழக்கமில்லை. நீங்க செத்துவிட்டால்தான் என்ன மோசம்? சர்க்கார் இருக்கு, உங்க குடும்பத்தைக் காப்பாத்த! ஏன் இந்த வீண் பயம்? உங்களுக்கு ஏன் சாமி, இந்த வம்பெல்லாம்? பஞ்சாயத்து நாளைக்குப் பூராவும் நடந்து, உங்ககிட்டே வருவதுக் குள்ளே, உங்க வாயும் வயிறும் பொறுக்குமா?'' என்று தாக்கி விட்டுச் சென்றான்.

மோட்டே ராம் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, மண்டபத்துக் குத் திரும்பி வந்தார். கொஞ்ச நேரம் வரை இருமிவிட்டுத் தூங் கத் தொடங்கினர்.

மறு நாள் உச்சி வேளை வரையிலும் யாரும் பெரியவரை வந்து பார்க்கவில்லை. வியாபாரிகள் பஞ்சாயத்துக் கூடி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். முடிவு காண இயலவில்லை. காங்கிரஸ்காரர்கள் வேறு, சர்க்காரின் சூழ்ச்சியையும் பெரியவரின் போலி வேஷத்தையும் துரோக சிந்தையையும்பற்றிப் பறை சாற்றிக் கொண்டிருந்தார்கள். அதிகாரிகள் கவலையற்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மோட்டே ராமுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. எல்லாரையும் சபித்துவிட்டுத் தம் தர்மபத்தினியையும் சபிக்கத் தொடங்கினுர்.

'ராத்திரி வயிறு புடைக்கத் தின்றுவிட்டுத் தூங்கியிருப்பாள்! இப்போதும் பலகாரம் ஆகி, சாப்பாட்டுக்கும் உட்கார்ந்திருப்பாள். என்ன அக்கிரமம்! இங்கே பிராம்மணன் உயிரைக் கொடுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிருனே என்று ஏதாவது கவலை இருக்காதோ? அவளுக்கென்ன? கொண்டு வந்தால்; உரிமை பேசி, வாங்கிப் பூட்டி வைத்துக்கொள்ளுவாள். ஏன்? என்னைப் பார்க்க வருகிற வியாஜத்தில், ஏதாவது புஷ்டியான ஆகாரம் - மோகன் போக் மாதிரி - செய்துகொண்டு வந்து, கண் மறைவாய்க் கொடுத்து விட்டுப் போகக்கூடாதா? நாம் கொண்டுவந்து கொடுத்தால் பெண்டாட்டி; வேறென்ன? என் தலையைத் தடவ வந்து சேர்ந்தாளே!....' என்றெல்லாம் எண்ணினுர்.

இரவு ஒன்பது மணி. வியாபாரிகள் சங்கத் தலைவர் நீண்ட வாத விவாதத்துக்குப் பிறகு, தம் முடிவைத் தெரிவித்தார்: ''பெரியவர் எதிர்க் கட்சியிடம் பணம் வாங்கிக்கொண்டு, இந்தப் போலி வேஷம் போடுகிறது வாஸ்தவம். இருந்தாலும், வயசானவர்; பெரியவர்; மதிப்பும் தியாக புத்தியுமாக இருந்தவர். இப்போது இவர் அங்கே உண்ணுவிரதம் கிடக்கும்போது, நாம் இங்கே வேளை தப்பாமல் சாப்பிட்டுக் கொண்டிருப்பது தர்மம் இல்லை. பெரியவர் அதர்மம் செய்கிருர் என்பதற்காக, நாமும் திருப்பிச் செய்வது நியாயம் இல்லை. ஏதாவது பரிகாரம் செய்து, அவருடைய உண்ணுவிரதத்தை நிறுத்தத்தான் வணும்.''

காங்கிரஸ் கட்சிச் செயலாளர் அந்தப் பொறுப்பைத் தாம் ஏற்பதாக உறுதி கொடுத்தார். அவர் பல வருஷங்கள் போலீஸ் இலாகாவில் இருந்தவர். மனித சுபாவமும் மனத் தத்துவமும் அவருக்கு அத்துபடி. நேரே பட்சணக் கடைக்குப் போய், உயர்ந்த ரகமாக ஐந்து ரூபாய்க்கு இனிப்புப் பட்சணங்கள் வாங்கிக் கொண்டார். வாசனைப் பன்னீரைச் சற்று அதிகமாகவே கலக்கச் செய்து, தொன்னையில் கவர்ச்சியாக வைத்துக்கொண்டார். வியாபாரிகள் சங்கப் பிரமுகர்களையும் அழைத்துக்கொண்டு, பெரியவரிடம் வந்து சேர்ந்தார். முன் ஏற்பாடாக, மற்றவர்களை வெளியிலேயே நிற்க வைத்துவிட்டுச் செயலாளர் மட்டும் மோட்டே ராம் எதிரே சென்ருர்.

தொன்னைப் பட்சணத்தின் சுகந்தம் கமகமவென்று வீசியது. பசி இல்லாதவர்களுக்கே நப்பாசையைக் கிளறும் வாசனை அது; பசி காதை அடைக்க, கண்கள் செருகிக் கொண்டு கிடக்கும் மோட்டே ராம் போன்றவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டாம்!

''சுவாமி!'' - செயலாளர் இப்படிப் பிரியமாக அழைத்துக் கொண்டே எதிரே தொன்னையையும், தண்ணீர்ப் பாத்திரத்தையும் வைத்தார். சோகம் போட்டுக் கிடந்த பெரியவர், மெல்லக் கண்களைத் திறந்தார். பாவம்! எவ்வளவு வேதனை அந்த வதங்கிய முகத்தில்? சின்னக் குழந்தையின் கையில் இருந்த பட்சணத்தைத் திடீரென்று ஒரு காக்கை தட்டிக் கொண்டு போய்விட்டால், குழந்தை என்ன பாடு படும்? அவ்வளவு வேதனை பெரியவருக்கும் இருந்தது.

''எத்தனை நாளைக்கு இப்படியே இருக்க முடியும், சுவாமி?''- செயலாளர் இப்படிச் சொன்னதும், பெரியவர் கண்களைத் திறந்து, பரக்கப் பரக்க நோக்கினர். ஆகா! என்ன வாசனை! என்ன நிறம்! கண்ணுலேயே பெரியவர் பட்சணத்தைச் சுவைக்கத் தொடங்கினர்.

''இங்கே இப்படியே சாகணுமென்று தலையிலே எழுதியிருந்தால், யார் தடுக்க முடியும்?.. ம்ஹூம்! தொன்னையிலே என்ன என்ன பட்சணங்கள் இருக்கு? குல்கந்துகூட இருக்கும், இல்லையா?''

''ஆமாம்; எல்லாம் இருக்கு. ஸ்பெஷலாகச் சொல்லித் தயார் செய்தது. என்ன செய்வது? விரதம் இல்லாமலிருந்தால், உங்களுக்கும் கொஞ்சம் கொடுப்பேன். சேர் ஐந்து ரூபாய். ரொம்ப உயர்ந்த ரகம்!''

''அப்போ, ரொம்ப ருசியாக இருக்கும்....ம்ஹூம்! குல்கந்து சாப்பிட்டு ரொம்ப நாள் ஆகிவிட்டது.'' பெரியவர் நாக்கில் ஜலம் ஊறிக்கொண்டிருந்தது.

''நீங்கதான் வீணுக்கு இந்த வம்பிலே தலையைக் கொடுத்திருக்கிறீர்களே. உயிரே போகிற போது, பணம் வந்துதானு காப்பாற்றப் போகிறது?''

''என்ன ஐயா, செய்வேன்? மகா சங்கடத்திலே அல்லவா அகப்பட்டுக்கொண்டு தொலைந்திருக்கிறேன்.'' - பெரியவரின் குரல் கம்மியது.

''பயப்படாமல் சாப்பிடுங்கோ! உயிருக்கும் உடம்புக்கும் பிறகுதான் பாக்கியெல்லாம். யாருக்கு நீங்கள் படப்பட வேணும்?''

''ஆமாம். நான் யாருக்குப் பயப்படவேணும்? இங்கே நான் பட்டினி கிடந்து உயிரை விடுகிறேன்; ஒருவனுக்குக்கூட அக்கறை, அநுதாபம் கிடையாது! எனக்கு மட்டும் என்ன வந்தது? கொண்டாருங்கள், ஐயா, அந்தத் தொன்னையை! பெரியவர் உண்ணுவிரதத்தை நிறுத்திவிட்டார் என்று சொல்லிவிடுங்கள்; போங்கள்!'' - பேசி முடிப்பதற்குள்ளேயே, மோட்டே ராம் சாஸ்திரி தாவித் தொன்னையைப் பற்றித் தம் பக்கம் இழுத்துக்கொண்டார். கையும் வாயும் அசைவதுதான் தெரிந்தது; சில நிமிஷங்களுக்குள்ளேயே தொன்னை காலி ஆயிற்று!

செயலாளர் வெளியே நின்றுகொண்டிருந்த வியாபாரிகளை அழைத்தார். ''இனிமேல் உங்களுக்கு ஒரு சிரமமும் இல்லை. நீங்கள் கவலையற்று ஹர்த்தால் நடத்தலாம். எல்லாம் நம் காங்கிரசின் மகத்துவந்தான்; நடக்க முடியாததெல்லாம் நடக்கும்!'' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டார் அவர்.

சேட் போந்துரமல், பெரியவரின் பாதங்களைத் தொட்டு வணங்கி, ''சுவாமி, அவசரப் பட்டுவிட்டீர்களே, நாங்கள் வருவதற்குள்? உங்கள் சத்தியாக்கிரகமும் சுமுகமாய் முடிந்திருக்கும், நாங்களும் காரியத்தை நடத்திக்கொள்ளலாம் என்கிற வகையில் ஏதாவது வழி செய்திருப்போமே'' என்று அங்கலாய்த்தார்.

பண்டித் மோட்டே ராம் காதில் இதெல்லாம் விழவில்லை. நாக்கும் இருதயமும் இனிப்பில் திளைத்துக்கொண்டிருந்தன.

''என் காரியம் நிறைவேறிவிட்டது. இந்த ஆனந்தம் ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் வராது. அப்படி உங்களுக்கு என்பேரில் பக்தி சிரத்தை இருந்தால், இதே மாதிரி பட்சணம், இதே அளவுக்கு இன்னும் ஒரு தொன்னை வரவழையுங்கள்; போதும்!'' என்று, பெரியவர் கடைசிக் கவளமாக ஒரு பிடி பட்சணத்தை வாயில் போட்டுக்கொண்டு சொன்னர்.

[பிற்சேர்க்கை:- செயலாளர் பட்சணத் தொன்னையுடன் பெரியவரிடம் வரும்போது, காவலிருந்த போலீஸ்காரர்களுக்குக் கொஞ்சம் கைக்கூலி கொடுத்துத் தன்னைக் கட்டிக் கொண்டார்; இதை முன்பே சொல்ல மறந்ததற்கு நண்பர்கள் மன்னிக்க வேண்டும்.]

[மொழிபெயர்த்தவர்: சௌரி]

புத்தகப் பகுதி:



உங்கள் உடல்

மாயவரம் எஸ். மகாலிங்கம்

எழுதியவர் திருச்சி ட்யூட்டோரியல் காலேஜில் விஞ்ஞானப் பேராசிரியர். நல்ல பேச்சாளர். இளம் எழுத்தாளர். ஆல் இந்தியா ரேடியோவில் அடிக்கடி பேசியிருக்கிறார். ஏழெட்டு வருஷங்களாகப் பல தமிழ்ப் பத்திரிகைகளில் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதி வருகிறார். 'டைஜெஸ்ட்' செய்த இவருடைய கட்டுரைகள் அப்போதப்போது 'மஞ்சரி'யில் வெளி வந்திருக்கின்றன. தொடர்ச்சியாகப் பல வாரங்கள் 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் இவர் எழுதிவந்த கட்டுரைத் தொகுப்பு ஒன்றின் ஒரு பகுதி இது. உரிமை கட்டுரையாளருடையது.

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்), சென்னை.

உங்கள் உடல்

★

நாம் வாழ்வது விஞ்ஞான காலம்; அணுசகாப்தம். எதை யெதைப்பற்றியோ நாம் தெரிந்துகொள்ளுகிறோம்; தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். ஆனால் நம்மைப்பற்றி, நம் உடலைப்பற்றி, நாம் தெரிந்துகொண்ட விஷயங்கள் மிகவும் குறைவு; தெரிந்து கொள்ள வேண்டியவை பல. உடல் அமைப்பு விசித்திரமானது; அபூர்வமான சிருஷ்டி. அதைப்பற்றி விஞ்ஞானிகள் அறிந்த சில உண்மைகள் இவை:

(1) வயசு வந்த சாதாரண மனிதனின் எடை 154 ராத்தல். அந்த மனித உடல் இந்த அம்சங்களைக் கொண்டு அமைந்திருக்கிறது.

	சதவீகிதம்	ராத்தல்
தசைகளும், தசை நார்களும்	42	64.6
எலும்புக்கூடு	16	24·6
தோல்	7	10·8
கொழுப்பு	19	29·8
மூளை	2	3·1
மேலறை அல்லது மார்பறை	2	3·1
கீழறை அல்லது வயிற்றறை	7	10·8
ரத்தம்	5	7·7
மொத்தம்	100	154.0

அல்லது

உடலில் உள்ள தண்ணீர்	57	88
உடலில் உள்ள திடப்பொருள்கள்	43	66
மொத்தம்	100	154

உடலில் உள்ள திடப்பொருள்களில் பிராணவாயு, ஜலவாயு, கரி, உப்பு வாயு, பாஸ்வரம், கந்தகம், ஸிலிகன், குளோரின், புளோரின், பொட்டாஸியம், ஸோடியம், கால்ஸியம், மக்னஜம், இரும்பு ஆகிய மூலப் பொருள்கள் இருக்கின்றன. தசைகளிலும் ரத்தத்திலும் தண்ணீர் அதிகமாக இருக்கிறது.

உடலில் உள்ள திடப் பொருள்களில் 9000 பென்ஸில்கள் செய்வதற்குப் போதுமான கரியும், 8064 பெட்டி தீக்குச்சிகள் தயாரிக்கத் தேவையான பாஸ்வரமும், 75 மெழுகுவர்த்திகளும் ஒரு சோப்புக் கட்டியும் தயாரிப்பதற்குப் போதிய கொழுப்பும், நான்கு ஆணிகள் செய்வதற்கு வேண்டிய இரும்பும், ஒரு சிறிய அறையின் சுவர்களுக்கு வெள்ளை அடிப்பதற்குப் போதிய கால்ஸியமும், ஒரு வேளை பேதிக்குச் சாப்பிடக்கூடிய உப்புக்குத் தேவையான மக்னஜமும், 20 டேபிள் ஸ்பூன் கந்தகமும், 4 அல்லது 5 பவுண்டு நைட்ரஜனும், மேக மண்டலத்துக்கு மேல் ஒரு மனிதனைத் தூக்கிச் செல்வதற்கு வேண்டிய ஜலவாயுவும், ஆறு டேபிள் ஸ்பூன் சமையல் உப்பும், ஒரு கோப்பை அளவு சர்க்கரையும், 72 காலன் பீப்பாயை நிரப்புவதற்கு வேண்டிய பிராணவாயுவும் அடங்கியிருக்கின்றன. மண்டையிலே நெற்றியைப்போல் இரு மடங்கு கொழுப்பு இருக்கிறது.

எலும்புகளிலும் பற்களிலும் ரத்தத்திலும் கால்ஸியம் இருக்கிறது. நரம்புகளிலும், எலும்புகளிலும் பாஸ்வரம் இருக்கிறது. ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில் இரும்பு இருக்கிறது. சதைகளில் உள்ள ஜீவ சத்தில் கந்தகம் இருக்கிறது. கல்லீரலிலும் பிருக்கங்களிலும் இருதயத்திலும் குறைந்த அளவில் தாமிரம் இருக்கிறது. ரத்தத்திலும் எலும்புகளிலும் பற்களிலும் மக்னஜம் இருக்கிறது. பொட்டாஸியத்துடனும் ஸோடியத்துடனும் கலந்து சேர்க்கைப் பொருளாகச் சதைகளில் உள்ள நீர்களில் குளோ

ரின் தென்படுகிறது. தைராய்டு சுரப்பியில் அயோடின் இருக்கிறது.

உடம்பிலே மின்சார சக்தி இருக்கிறது. இந்த மின்சார சக்தியைக் கொண்டு 25 வாட் மின்சார விளக்கை மூன்று நிமிஷங்களுக்கு மேல் எரியவிட முடியும். உடம்பின் உஷ்ணத்தைக் கொண்டு 20 பேருக்குக் காபி போட முடியும். மனித உடலில் எழும் மின்சார அழுத்தம் ஒரு வோல்ட்டில் நூற்றில் ஒரு பங்குக்கும் குறைவாகவே இருக்கும். மனிதனின் இருதயத்தில் எழும் மின்சார அழுத்தம் ஒன்று அல்லது ஒன்றரை மில்லிவோல்ட் இருக்கும். ஒரு மில்லிவோல்ட் என்பது ஒரு வோல்ட்டில் ஆயிரத்தில் ஒரு பங்காகும். மூளையில் எழும் மின்சாரத்தின் அழுத்தமோ அந்த இருதய மின்சார வோல்ட்டில் இருபதில் ஒரு பாகந்தான் இருக்கும்.

உணவுப் பாதை
(ஜீரண மண்டலம்)



(2) மனிதனின் உயரம் 4 அடி முதல் 7 அடி வரையில் வித்தியாசப்படுகிறது. சாதாரணமாக, பெண் 15 வயசுக்குப் பிறகும், ஆண் 18 வயசுக்குப் பிறகும் உயர்வதில்லை. ஒருவனுடைய புஜ எலும்பின் நீளத்தை 5.06 - ஆல் பெருக்கினுலும், துடை எலும்பின் நீளத்தை 3·66 ஆல் பெருக்கினுலும் அந்த மனிதனின் உயரம் தெரிந்துவிடும். மார்பு, வயிறு இவை இரண்டும் சேர்ந்த உயரம் மொத்த உயரத்தில் மூன்றில் ஒரு பங்காகவும் ஐந்தில் இரண்டு பங்குக்குக் குறைவாகவும் இருக்கிறது. மணிக்கட்டிலிருந்து நடுவிரல் நுனி வரையில் உள்ள நீளமும் மோவாய்க் கட்டையிலிருந்து நெற்றி உச்சி வரையில் உள்ள நீளமும் சமம். இது மொத்த உடலின் உயரத்தில் பத்தில் ஒரு பாகம். சாதாரணமாக ஒவ்வோர் அடிக்கும் மனிதனின் எடை 28 ராத்தல். பெண்களை விட ஆண்கள் 20 பவுண்டு எடையில் அதிகம். ஒவ்வொருவரும் சாதாரணமாக எவ்வளவு எடை இருக்க வேண்டுமென்று தெரிந்துகொள்ள வேண்டுமானுல், அவருடைய உயர அங்குலம் எத்தனையோ அதை, நன்ருக மார்பு விரிவடையும்போது எத்தனை அங்குலம் சுற்றளவோ அதனுல் பெருக்கி, பதினேழால் வகுக்க வேண்டும். கிடைக்கும் விடை என்னவோ அத்தனை பவுண்டுகள்தான் சரியான எடை.

(3) மனிதன் பிறக்கும்போது உடலில் 270 எலும்புகளுடன் பிறக்கிருன். இறக்கும்போதோ 206 எலும்புகளுடன் இறக்கிருன். இந்த 206 எலும்புகளையும், இவற்றின் உருவம், உள்ளமைப்பு இவற்றையும் பொறுத்து நீண்ட எலும்பு, குட்டை எலும்பு, தட்டை எலும்பு, ஒழுங்கற்ற எலும்பு என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம். நீண்ட எலும்புகளின் உள்பாகம் குழல் போலவும், ஒழுங்கற்ற எலும்புகள் கெட்டியாகவும் இருக்கும். புஜ எலும்பு, துடை

எலும்பு, முன்கை எலும்பு, கீழ்க் கால் எலும்பு இவை எல்லாம் நீண்ட எலும்புகள். மணிக்கட்டு எலும்புகளும் கணைக்கால் எலும்புகளும் குட்டை எலும்புகள். கபால எலும்பு, மார்பெலும்பு, தோள் பட்டை எலும்பு, இடுப்பெலும்பு, விலா எலும்பு எல்லாம் தட்டை எலும்புகள். முகத்தில் உள்ள எலும்புகள், முள்ளெலும்புகள், ஹையாட் (Hyoid), குத எலும்பு (Coccyx) இவை எல்லாம் ஒழுங்கற்ற எலும்புகள்.

இந்த 206 எலும்புகளும் கீழ்க் கண்ட இடங்களில் காண்கின்றன:

மண்டை	22
முதுகு	26
ஹையாட் (Hyoid)	1
விலா	24
மார்பு	1
தோள்பட்டை, கை	64
இடுப்பு, கால்	62
நடுக் காது ஒவ்வொன்றுக்கும் மூன்றாக மொத்தம்	6
மொத்தம்	206

உடலிலேயே மிகச் சிறிய மூன்று எலும்புகள் நடுக் காதில் இருக்கின்றன.

உடலிலேயே பெரியதும் நீண்டதுமான எலும்பு துடை எலும்பு (Femur).

ஒரு குழந்தையின் எலும்பை எக்ஸ்-ரே மூலம் பரிசோதித்துப் பார்த்து, அது நன்றாக வளருமா, வளராதா என்று சொல்லிவிடலாம். 22 வயசுக்குப் பின் சாதாரணமாக எலும்புகள் வளர்வதில்லை. வளரும் கருவைத் தாங்குவதற்கும், பிரசவத்தின்போது குழந்தை வெளியே வருவதற்கும் ஏற்றபடி பெண் மக்களுக்கு இடுப்பெலும்புக் கட்டின் மேல்பாகம் அகன்றும், ஆழம் குறைந்தும், கீழ்ப் பாகம் அகன்றும் இருக்கும். ஆண் மக்களுடைய இடுப்பெலும்புக் கட்டின் மேல் பாகம் ஆழ்ந்தும், கீழ்ப் பாகம் குறுகியும் இருக்கும்.

(4) பிறந்ததிலிருந்து இறக்கும் வரையில் தசைகள் ஆச்சரியமான வேலைகளைச் செய்கின்றன. தசைகள் சுருங்கி விரிந்துதான் அன்னையின் கர்ப்பப் பையிலிருந்து நம்மை இந்தப் பூமியில் தள்ளின. உடலுக்குத் தேவையான உஷ்ணத்தைத் தசைகள்தான் கொடுக்கின்றன. அன்னப் பாதையின் வழியாக ஆகாரத்தைத் தள்ளுவதும், காற்றைச் சுவாச கோசங்களுக்கு இழுத்து வெளியேற்றுவதும், கண்ணீரைச் சுரப்பிகளிலிருந்து வெளிவரச் செய்வதும், இருதயத்தைச் சுருங்கி விரியச் செய்வதும் தசைகள்தான். தசைகளின் முக்கியமான குணம் விரிந்து சுருங்குவது தான். தசைகள் சுருங்கும்போது வெப்பம் உண்டாகிறது; உடலின் உஷ்ண நிலையும் அதிகரிக்கிறது. எழுபது வருஷங்களில் ஒரு மனிதனின் இருதயம் 50 கோடித் தடவை துடிக்கிறது. உடலில் 527 தசைகள் இருக்கின்றன. இந்த 527 தசைகளில் 261 தசைகள் ஜோடியாகவும், ஐந்து ஒற்றையாகவும் தென்படுகின்றன. நாம் கோபித்துக் கொள்ளும்போது 50 தசைகளும், சிரிக்கும்போது 13 தசைகளும் வேலை செய்கின்றன. இந்த 527 தசைகளும் உள்ள இடங்கள்:

தலை, முகம்	83
கழுத்து	49
மார்பு	78
வயிறு	33
முதுகு	78
கைகள்	98
கால்கள்	108
மொத்தம்	527

நமது உடல் எடையில் ஐந்தில் இரண்டு பாகம் தசைகளும் தசை நார்களும்.

கீழ்க்காலின் பின்புறத்தில் உள்ள கெண்டைக்கால் தசை அல்லது முழங்கால் தசை (Calf muscle), உடலிலேயே மிகவும் நீண்ட தசை. இந்தத் தசை, காலை மடிப்பதற்கும், நிமிர்ந்து நிற்பதற்கும்,ஓடுவதற்கும் உதவுகிறது. மார்பையும் வயிற்றையும் பிரிக்கும் உதர விதானம் - டயாஃப்ரம் (Diaphragm) - உடலிலேயே மிகவும் அகன்ற தசை. இது சுவாச வேலையில் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது.

தசைகளை இயங்கும் தசைகள் (Involuntary muscles), இயக்கும் தசைகள் (Voluntary muscles), இருதயத் தசைகள் (Cardiac muscles) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். ரத்தக் குழாய்களின் சுவர்களில் உள்ள தசைகள், அன்னப் பாதை, ஜனனேந்திரிய உறுப்புக்கள் இவற்ருேடு சம்பந்தப்பட்ட தசைகள், கிருஷ்ண படலம் (Iris), சிறு குடல் வாய் (Pylorus), காற்றுக் குழலுடன் சம்பந்தப்பட்ட தசைகள், இருதயம் இவை எல்லாம் இயங்கும் தசைகள். முத்தலைத் தசை (Triceps muscle), இரு தலைத் தசை (Biceps muscle), கை, கால், முகம் இவற்றில் உள்ள தசைகள் எல்லாம் இயக்கும் தசைகள். கிருஷ்ணபடலம், சிறு குடல் வாய், சிறுநீர்ப் புற வழி, குதம் ஆகிய இடங்களில் உள்ள தசைகள் (Sphincter Muscles) வட்ட உருவில் சுருங்கி விரியும் தன்மை உடையவை. குழந்தைப் பிராயத்தில் சிறுநீர்ப் புற வழியும், குதமும் தாமே இயங்கும் தசைகளாக இருந்தபோதிலும், நாளாவட்டத்தில் அவற்றை நம் இச்சைக்கு உள்பட்ட இயக்கும் தசைகளாக மாற்றிவிடலாம்.

இயக்கும் தசைகளை நம் இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம். ஒவ்வொரு தசையும் நூறு அல்லது ஆயிரக் கணக்கான தசை நார்களினுல் உருவாகி யிருக்கிறது. ஒவ்வொரு தசை நாரும் $1\frac{1}{2}$ அங்குல நீளமும், 1/500 அங்குல கனமும் (தடிமனும்) இருக்கும். இயக்கும் தசையில் உள்ள தசை நாரில் வரிகள் அல்லது கோடுகள் (Stripes) இருக்கின்றன. சில வரிகள் கறுப்பாயும், சில வரிகள் நிறமற்றும் இருக்கும். கறுப்பு வரிகளும், கறுப்பற்ற வரிகளும் மாறி மாறி இருக்கும். ஒரு கறுப்பு வரியும், ஒரு கறுப்பற்ற வரியும் சேர்ந்தது ஒரு தொகுப்பு. ஓர் அங்குலத் தசை நாரில் கிட்டத்தட்ட 30,000 தொகுப்புக்கள் இருக்கின்றன.

(5) நமது அன்னப் பாதை நீளம் (வாயிலிருந்து ஆசன வாய் வரைக்கும்) சுமார் 30 அடி. ஆகாரக் குழல் (Foodpipe or gullet) 9 அங்குல நீளம் இரைப்பை 10 அங்குல நீளம். சிறு குடல் 21 அங்குல நீளம். $1\frac{3}{4}$ அங்குல விட்டம். பெருங் குடல் 6 அங்குல நீளம்; 2 அல்லது 3 அங்குல விட்டம். நாம் சாப்பிடும் ஆகாரம் வாயில் ஒரு நிமிஷத்துக்குக் குறைவாகவும், இரைப் பையில் மூன்று முதல் நான்கு மணி நேரமும் சிறு குடலில் 10 முதல் 12 மணி நேரமும் தங்குகிறது. நமது பிரயாசை இல்லாமலே தொண்டைக் குழியிலிருந்து ஆகாரம் ஆகாரக் குழல் வழியாக இரைப் பையை அடைகிறது. ஆகையால்தான் தலைகீழாக நின்றுகொண்டுகூட ஆகாரத்தை உண்ணலாம்; தண்ணீரைக் குடிக்கலாம். ஆகாரம் அன்னப் பாதையின் வழியாகச் செல்லும்போது, அதை வெவ்வேறு குணங்களுடைய ஐந்து வித ஜீர்ணநீர்கள் தாக்குகின்றன. அவை முறையே உமிழ் நீர் (Salivary juice), ஜாடராக்கினி நீர் (Gastric juice), பித்த நீர் (Bile juice),



இருதயத்தின் அறைகளும்.
இரத்தம் செல்லும் மார்க்கமும்

கணைய நீர் (Pancreatic juice), சிறு குடல் நீர் (Intestinal juice). வாய், இரைப் பை, சிறு குடல் இந்த மூன்று இடங்களிலும் ஆகாரம் ஜீர்ணம் ஆகிறது. வாயில் உமிழ் நீரும் இரைப் பையில் ஜாடராக்கினி நீரும் சிறு குடலில் பித்த நீர், கணைய நீர், சிறு குடல் நீர் ஆகியவையும் ஆகாரத்தைத் தாக்குகின்றன. ஒரு நாளைக்கு ஒரு லீட்டர், அதாவது சுமார் 1¾ பைண்ட் உமிழ் நீர் சுரக்கிறது. உமிழ் நீரில் 99 சத விகிதமும், பித்தநீரில் 97 சத விகிதமும் தண்ணீர் இருக்கிறது. இரைப் பை சுரக்கும் ஜாடராக்கினி நீரில் எரிச்சல் தருவதும் மிருதுவான திசுக்களை அரித்துத் தின்றுவிடுவதுமான ஹைட்ரோகுளோரிக் அமிலம் இருக்கிறது என்றால், ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால் இது மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. உணவில் உள்ள வியாதிக் கிருமிகளைக் கொல்லுவதற்கு இந்த அமிலம் உதவி செய்கிறது. பெருங் குடலில் லட்சக்கணக்கில் கண்ணுக்குத் தெரியாத பேதகன்கள் (Bacteria) இருக்கின்றன. இவற்றால் கெடுதி இல்லை; நன்மை உண்டு. ஜீர்ணமாகாத ஜீர்ணிக்க முடியாத ஆகாரப் பொருள்கள், பெருங் குடலுக்குள் சேர்கின்றன. இங்கே தண்ணீர் வடிந்து மிகுந்த பொருள்கள் கெட்டிப்பட்டு, மலமாக மாறி மலக்குடலுக்கு வந்து சேர்கின்றன. பித்த நீரில் உள்ள வர்ணப் பொருள்களால் நிறமும், பெருங் குடலில் ஆகாரத்தைப் பேதகங்கள் தாக்கும்போது வெளி வரும் வாயுக்களால் நாற்றமும் மலத்துக்கு ஏற்படுகின்றன.

(6) மனித இருதயம் அவரவருடைய முஷ்டி அளவு இருக்கும். தாமரை மொக்குப் போன்றது. சற்றுத் தட்டையானது. குறுகிய பாகம் இடது பக்கத்தில் மார்பின் வெளிப்புறத்துக்கு வெகு சமீபத்தில் இருப்பதால் இருதயம் இடது பக்கத்தில் இருப்பதாக நாம் நினைக்கிறோம். ஆனால் ஏறக்குறைய மார்பின் மத்தியில்தான் இந்த அவயவம் இருக்கிறது. தாமே இயங்கும் தசைகளால் உருவானது. ஒன்பதிலிருந்து பதினோர் அவுன்ஸ் வரையில் எடையுள்ளது. 5 அங்குல நீளம்; 3½ அங்குல அகலம். இருதயத்தில் நான்கு அறைகள் உண்டு. இது ஒரு ரத்தக் களஞ்சியம். வலது பக்கத்தில் உள்ள அறைகளில் பிராண வாயு குறைந்த அசுத்த ரத்தமும், இடது அறைகளில் பிராண வாயு அதிகமாக உள்ள சுத்த ரத்தமும் இருக்கின்றன. இரண்டு ரத்தங்களும் ஒன்றோடு ஒன்று கலக்காமல் இருப்பதற்காகக் குறுக்குச் சுவர்கள் இருக்கின்றன. இருதயம் என்பது ஒன்றோடு ஒன்று பக்கவாட்டில் இணைந்திருக்கும் இரண்டு தசைப் பம்புகள் என்று கருதலாம். வலது பக்கத்தில் இருக்கும் அசுத்த ரத்தம் சுவாச கோசங்களுக்கும், இடது பக்கத்தில் இருக்கும் சுத்த ரத்தம் உடல் முழுவதற்கும் செல்லுகின்றன. தேகத்தில் உள்ள உறுப்புக்களுக்குப் பிராணவாயுவை ஊட்டச் செய்வதற்காகவே ரத்தத்தை இருதயம் இறைக்கிறது. இரவும் பகலும் இடை விடாது சுருங்கி விரிந்து அது வேலை செய்கிறது என்று நாம் நினைப்பது தவறு. சுருங்கும்போது வேலை செய்கிறது. விரியும்போது அது ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறது. இடை விடாது துடிக்காமல் விட்டு விட்டே துடிக்கிறது.

10 தடவை துடித்தால் 14 தடவை நிற்கிறது. 24 மணி நேரத்தில் 15 மணி நேரம் ஓய்வு; 9 மணி நேரம் வேலை. ஓய்வு நேரத்தில்தான் தன் ஆகாரத்தைப் பருகுகிறது. ஒரு நிமிஷத்துக்கு 72 தடவை வீதம், ஒரு நாளில் 1,03,680 தடவை துடிக்கிறது. குழந்தைகளின் இருதயமாயிருந்தால், ஒரு நிமிஷத்துக்கு 120 தடவை துடிக்கிறது. இருதயத்திலிருந்து உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சுத்த ரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய், கட்டை விரல் பருமன் இருக்கிறது. இதற்கு மகா தமனி (Aorta) என்று பெயர். தன்னிடம் அடங்கிய ரத்தம் சரீரம் எங்கும் பரவுவதற்கு வேண்டிய வேகத்துடன் இருதயம் சுருங்குகிறது. ரத்தம் ஒரு நாளைக்கு 1,680

லட்சம் மைல் பிரயாணம் செய்கிறது. ஒவ்வொரு ரத்தச் சதையிலும் 5 மைல் நீள அளவுக்கு ரத்தக் குழாய்கள் இருக்கின்றன. அதிகமாகப் பருத்துள்ள மனித உடலில் ரத்தக் குழாய்களின் நீளம் இன்னும் அதிகமாக இருக்கும். ஆகையால், அப்படிப் பருத்தவர்களுடைய இருதயமும் அதிக வேலை செய்கிறது. ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் இருதயத் துடிப்பு அதிகம். களைப்பு அடைந்தாலும், ஆகாரம் உட்கொண்டாலும், பீதி அடைந்தாலும், பரபரப்பு அடைந்தாலும், படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாலும், திடீரென்று எழுந்து நின்றாலும், மது, காபி இவை அருந்தினாலும், வியாதியிலிருந்து சொஸ்தம் அடையும்போதும் இருதயத் துடிப்பு அதிகமாக இருக்கும்.

உடலுக்கு அதிகமான அல்லது தீவிரமான வேலை கொடுப்பதனால், இருதயமும் ஓய்வு இல்லாமல் அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் இருதயம் நிரந்தரமாகப் பருத்துவிடும். ஆகாரம் உண்ட பிறகு தேகாப்பியாசம் செய்வதனால், இருதயம் கெட்டுவிடும். ஆகாரம் உட்கொள்ளும்போது ஜீர்ண உறுப்புக்கள் துரிதமாக வேலை செய்ய அதிக ரத்தத்தை அதிகமாகத் துடித்து இருதயம் அனுப்புகிறது. அதே சமயத்தில் தேகாப்பியாசமும் செய்தால், தசைகளுக்கு ரத்தம் அனுப்ப இருதயம் இன்னும் அதிகமாகத் துடித்துச் சோர்வடைந்து பலவீனப்பட்டுவிடும்.

இருதயம் வேகமாகவோ மெதுவாகவோ, அழுத்தமாகவோ பலவீனமாகவோ துடிக்கும். இதிலிருந்து மற்ற அவயவங்கள் நல்ல நிலையில் இருக்கின்றனவா என்று கண்டு பிடித்துவிடலாம். இருதயம் பழுதடைவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு: ஒன்று, அதிக வேலை செய்வது; இரண்டு, ரத்தத்தின் மூலம் வியாதிக் கிருமிகள் இருதயத்தை அடைவது. பல்லிலே சொத்தை ஏற்பட்டால், வியாதிக் கிருமிகள் உடலுக்குள்ளே சுலபமாகப் புகும்.

ஒவ்வொரு நிமிஷமும் 6 அவுன்ஸ் ரத்தத்தை இருதயம் இறைக்கிறது. ஒவ்வொரு நாளும் இருதயம் 3,000 காலன் ரத்தத்தை உடலில் உள்ள பல ஆயிரம் மைல் நீளமுள்ள ரத்தக் குழாய்களின் வழியாக இறைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு நாளில் 12 டன் எடையை நகர்த்துவதற்கு



காற்றுக் குழாயும் சுவாச கோசங்களும்

வேண்டிய சக்தியைப் பெறுகிறது. ரத்த ஓட்டம் இருப்பதனால் இருதயத் துடிப்பு உண்டாவதில்லை. உடலில் ரத்தம் உண்டாவதற்கு முன்பே அது துடிக்கிறது. ரத்த ஓட்டம் நின்ற பிறகும் சிறிது நேரம் துடித்துவிட்டே அடங்குகிறது.

உடலில் எல்லாப் பாகங்களுக்கும் ரத்தம் தேவைப்படுவது போல் இருதயத்துக்கும் ரத்தம் தேவைப்படுகிறது. இருதயத்துக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்

களின் துவாரம் அடைபட்டு விட்டால், இருதயம் வேலை செய்வது நின்று மாரடைப்பு ஏற்பட்டுத் திடீர் மரணம் நேர்கிறது.

இருதயத்திலிருந்து வெளியேறும் ரத்தம் உடல் முழுவதும் சுற்றி, மீண்டும் இருதயத்தை அடைகிறது. இப்படி ஒரு தடவை நடைபெறுவதற்குச் சுமார் அரை நிமிஷமாகும். ரத்த ஓட்டத்தில் தென்படும் எல்லாத் தந்துகிகளையும் (Capillaries) ஒருமிக்கத் திரட்டினால் அந்தத் திரட்டுக்கு இருக்கக் கூடிய சுற்றளவு, மகா தமனியின் சுற்றளவைக் காட்டிலும் 500 மடங்கு முதல் 800 மடங்கு வரைக்கும் அதிகமா யிருக்கும்.

மனிதன் இதுவரைக்கும் தன் அறிவினாலும் ஆராய்ச்சியினாலும் கண்டுபிடித்த பம்புகளை விட ஆச்சரியமாகவும் அதி அற்புதமாகவும் ஒழுங்காகவும் வேலை செய்கிறது, உடலில் உள்ள இருதயம் என்ற பம்பு. இருதயம் நன்றாக வேலை செய்ய அதில் உள்ள கபாடங்கள்தான் (Valves) காரணம். அவற்றுக்குக் கெடுதி நேர்ந்தால், இருதயத்தின் வேலை தடைப்பட்டுவிடும். இருதயத்தில் மூவிதழ்க் கபாடம் (Tricuspid valve), ஈரிதழ்க் கபாடம் (Bicuspid valve), அர்த்த சந்திரக் கபாடங்கள் (Semilunar valves) என்ற மூன்று விதக் கபாடங்கள் இருக்கின்றன. இருதயத்தின் இரண்டு மேலறைகள் சுருங்குவது, அதையடுத்து இரண்டு கீழறைகள் சுருங்குவது, சிறிது இடை நேரத்துக்குப் பிறகு நான்கு அறைகளும் ஒரே சமயத்தில் பழைய நிலையை அடைவது-இந்த நாலு காரியமும் சேர்ந்ததற்குத்தான் இருதயத் துடிப்பு (Heart beat) என்று பெயர். முதலில் கீழ் அறைகள் சுருங்கியவுடன் மூவிதழ்க் கபாடமும் ஈரிதழ்க் கபாடமும் மூடிக்கொள்ளுவதால், 'லப்' (Lub) என்ற அடக்கமான நீண்ட சப்தம் உண்டாகிறது. பிறகு அர்த்த சந்திரக் கபாடங்கள் மூடிக்கொள்ளும்போது 'டப்' என்ற சுருக்கமான உரத்த சப்தம் உண்டாகிறது. இப்படி ஒரு நிமிஷத்துக்குச் சுமார் 72 முறை இரண்டு சப்தங்களும் உண்டாகின்றன.

(7) மகா தமனியில் எப்போதும் ரத்தம் நிரம்பி யிருக்கிறது. இருதயத்தின் இடது கீழ் அறை சுருங்கும்போது அதிகப்படி ரத்தம் மகா தமனிக்குள் செல்லுகிறது. அப்போது மகா தமனியின் சுவர் விரிந்து சுருங்குகிறது. இந்த விரிவு மகா தமனியிலும், மற்றக் கிளைத் தமனிகளிலும் (Arterial branches) அலை அலையாகப் பரவுகிறது. இருதயத் துடிப்பினால் தமனிகள் வழியாக ரத்தம் பாயும்போது, அலை போன்ற இந்த அசைவுகள் ஏற்படுகின்றன. இதைத்தான் நாம் 'நாடித் துடிப்பு' (Pulse) என்று சொல்லுகிறோம். உடலில் எந்த எந்த இடங்களில் தோலுக்கு அருகே தமனி செல்லுகிறதோ, அங்கெல்லாம் நாடித் துடிப்பை உணரலாம். மணிக்கட்டு, தொண்டையின் பக்கவாட்டுகள், கணைக்கால், நெற்றிப் பொட்டுகள் (Temples) ஆகிய இடங்களில் தோலுக்கு அருகே தமனிகள் இருப்பதால், நாடித் துடிப்பை இங்கெல்லாம் எளிதில் உணர முடியும். தமனிகளின் சுவர்கள் மூலம் விநாடிக்கு 30 அடி வீதம் நாடித் துடிப்பு நகர்கிறது. மகா தமனியிலிருந்து மணிக்கட்டுக்கு நாடித் துடிப்பு வர ஒரு விநாடியில் பத்தில் ஒரு பங்குதான் (1/10 விநாடிதான்) ஆகிறது. ஆனால் ரத்தம் வருவதற்கோ 5 விநாடி ஆகிறது. இதிலிருந்து ரத்தத்தைவிட நாடித் துடிப்பு அதி வேகமாக ஓடுகிறது என்று தெரியவரும். இருதயத் துடிப்பு ஏற்பட்ட கொஞ்ச நேரத்துக்குப் பிறகுதான் நாடித் துடிப்பை உணரமுடியும்.

இருதயத் துடிப்பு ஒரு நிமிஷத்துக்கு எத்தனையோ அத்தனையே தான் நாடித் துடிப்பும். வயசுக்கு ஏற்றபடியும் தேகநிலைக்கு ஏற்றபடியும் நாடித் துடிப்பு வித்தியாசப்படும்.

ஒரு நிமிஷத்துக்கு:

கருப்பப் பையில் இருக்கும்போது 150 முதல் 140;

பிறந்த குழந்தைக்கு 140 முதல் 130;

1-ஆம் வருஷம் 130 முதல் 120;

2-ஆம் வருஷம் 120 முதல் 100;

3-ஆம் வருஷம் 100 முதல் 95;
7-இலிருந்து 14-ஆம் வருஷம் வரை 85 முதல் 75;
14-இலிருந்து 21-ஆம் வருஷம் வரை 85 முதல் 75;
21-இலிருந்து 25-ஆம் வருஷம் வரை 72;
25-இலிருந்து 60-ஆம் வருஷம் வரை 75 முதல் 79;
தள்ளாத வயசில் 70 முதல் 60.

உடலின் உஷ்ணம் ஒரு டிகிரி பாரன்ஹீட் உயர்ந்தால், நாடித் துடிப்பும் ஒரு நிமிஷத்துக்கு 10 அதிகரிக்கும்.

நாடித் துடிப்பு	உஷ்ண நிலை டிகிரி
60	98
80	100
90	101
100	102
110	103
120	104
130	105
140	106

(8) திரவ ரூபத்தில் உள்ள பிசுபிசுப்பான சதையே ரத்தம். மொத்த உடல் எடையில் இருபதில் ஒரு பங்கு; ஐந்து சதவிகிதம். உடலில் காணும் ரத்தத்தில் கால் பாகம் கல்லீரலிலும் (Liver), கால் பாகம் தோலிலும் அதனுடன் சம்பந்தப்பட் டிருக்கும் தசையிலும், கால்பாகம் இருதயம், ரத்தக் குழாய்கள், நுரையீரல்கள் இவற்றிலும், மிகுதி எலும்போடு சம்பந்தப்பட் டிருக்கும் தசைகளிலும் தென்படுகின்றன. ஐந்து அல்லது ஆறு லீட்டர் (1 லீட்டர்=1000 கன ஸெண்டி மீட்டர்) ரத்தம் உடலில் இருக்கிறது. அதாவது, சுமார் நாலு அல்லது ஐந்து படி ரத்தம்.

ரத்தத்தில் 79 பங்கு தண்ணீரும், 21 பங்கு திடப் பொருள்களும் இருக்கின்றன. குழந்தைகளை விடப் பெரியவர்களின் ரத்தத்திலும் பெண்களைவிட ஆண்களின் ரத்தத்திலும் திடப் பொருள்களின் சதவிகிதம் சற்று உயர்ந்தே தென்படுகிறது. திடப்பொருளை 21 பங்காக வைத்துக்கொண்டால், 12 பங்கு ரத்த அணுக்களும், 7 பங்கு நைட்ரஜன் சம்பந்தப்பட்ட புரதப் பொருள்களும், 2 பங்கு உப்பு, கொழுப்பு, கரிப்பொருள், யூரியா (மூத்திர உப்பு), கழிவுப் பொருள்கள் இவையும் இருக்கின்றன. ரத்த அணுக்களில் வெள்ளை அணுக்கள், சிவப்பு அணுக்கள் என்ற இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒரு கன அங்குல ரத்தத்தில் ஏழாயிரங் கோடி அணுக்கள் இருக்கின்றன. உலகத்தில் இருக்கும் ஜனத் தொகையைவிட இது 80 மடங்கு அதிகம்.

ஒரு கன மில்லி மீட்டர் ரத்தத்தில் 50,00,000 சிவப்பணுக்கள் இருக்கின்றன. மனித உடலில் உள்ள ரத்தத்தில் சுமார் 35 டிரில்லியன் (Trillion) சிவப்பு அணுக்கள் இருக்கின்றன.

ஒரு கன மில்லி மீட்டர் ரத்தத்தில் 10,000 வெள்ளை அணுக்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு வெள்ளை அணுவுக்கும் 500 சிவப்பணுக்கள் இருக்கின்றன. சிவப்பணு ஒவ்வொன்றும் 1/3200 அங்குலம் குறுக்களவுடையது. வெள்ளை அணு ஒவ்வொன்றும் 1/2500 அங்குலம் குறுக்களவுடையது.

வெள்ளை அணுக்கள் நிறமற்றவை. அடிக்கடி வடிவத்தில் மாறுதல் அடையும். இவை வியாதிக் கிருமிகளுடன் எதிர்த்துப்போராடி, அவற்றைக் கொல்லும். அப்படி எதிர்த்துப் போராடும்போது, சில வெள்ளை அணுக்கள் மடிகின்றன. அவைதான் சீழாகக் காயங்களிலிருந்தும் கொப்புளங்களிலிருந்தும் வெளிவருகின்றன.

சிவப்பு அணு லேசான மஞ்சள் நிறம். அது சிவப்பாக இருப்பதற்குக் காரணம் ஹீமோகுளோபின் என்ற ஒரு வர்ணப் பொருள் அதில் அடங்கியிருப்பது தான். சிவப்பு அணுக்கள் இந்த வர்ணப் பொருளின் உதவியைக் கொண்டு பிராணவாயுவை உடலின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் செல்லுகின்றன. சிவப்பு அணுக்களின் ஆயுள்காலம் 3 அல்லது 4 வாரங்கள்தான். பிறகு அவை சிதைந்துவிடுகின்றன. அவை சிதையச் சிதையப் புதிய சிவப்பணுக்கள் உற்பத்தியாகிக் கொண்டே யிருக்கின்றன.

இருதயம்



கர்ப்பந் தரிக்கும்போதும், விமானங்களில் பறக்கும்போதும், மலைகளின்மீது ஏறும்போதும், மாமிச உணவு சாப்பிட்டாலும், சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. தாவர உணவு சாப்பிட்டாலும், காயம் பட்டு ரத்தம் கொட்டினாலும், சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது.

தமனிகள் (Arteries), சிரைகள் (Veins), தந்துகிகள் (Capillaries) என்ற மூன்று வகை ரத்தக் குழாய்கள் உடலில் இருக்கின்றன. தமனிகளில் பிராணவாயு அதிகம் உள்ள ரத்தமும், சிரைகளில் கரியமில வாயு அதிகம் உள்ள ரத்தமும் தென்படுகின்றன. தமனிகளில் பெரியது மகா தமனி; சிரைகளில் பெரியவை மேல் பெருஞ்சிரை (Superior Vena Cava), கீழ்ப் பெருஞ் சிரை (Inferio Vena Cava) என்ற இரண்டு. வெட்டுப்பட்ட ரத்தக் குழாயிலிருந்து துள்ளித் துள்ளி ரத்தம் வந்தால், அது தமனி. அது சிரையாக இருந்தால், சீராக ரத்தம் வெளிவரும்.

உடலில் உள்ள எல்லாத் தந்துகிகளின் வழியாகவும் ஒரே சமயத்தில் ஒரு விநாடியில் பாயும் குறிப்பிட்ட அளவு ரத்தம், ஒரே விநாடியில் மகா தமனி வழியாகப் பாய்ந்து சென்றுவிடும். கீழ்ப் பெருஞ்சிரையும், மேல் பெருஞ் சிரையும் ஒரு விநாடியில் செய்யும் வேலையை, மகா தமனி தனியாக ஒரு விநாடியில் செய்துவிடும். காரணம், மகா தமனியில் ரத்தம் விநாடிக்கு 15 அங்குலம் வீதமும் கீழ்ப் பெருஞ்சிரையில் விநாடிக்கு 7 அங்குலம் வீதமும் செல்கிறது. சாதாரணமாகத் தமனி (ஆர்ட்டரி)களில் விநாடிக்கு 8 அங்குலம் வீதமும், தந்துகி (காபிலரி)களில் நிமிஷத்துக்கு ஒன்று முதல் 2 அங்குலம் வீதமும் ரத்தம் நகர்கிறது.

நமது உடலில் ரத்தம் ஒரே திசையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படி ஓடினால்தான் திசுக்களுக்குப் (Tissues) போஷாக்குச் சத்தும், பிராண வாயுவும் தவறாமல் கிடைக்கும். மேலும் திசுக்களில் உண்டாகும் கழிவுப் பொருள்களும் அப்போதப்போது அகலும். ரத்த ஓட்டத்தின் திசை அடிக்கடி மாறினால், தேகத்துக்குத் தீங்கு நேரிடும்; திசுக்களுக்கு உணவு கிடைக்காது. கழிவுப்பொருள் அங்கங்கே தங்க நேரிடும்.

ரத்தம் எப்போதும் சூடாகவே இருக்கிறது. அதன் உஷ்ண நிலை 98·4 டிகிரி பாரன்ஹீட் அல்லது 36 டிகிரி ஸென்டிகிரேட்.

காமாலை வியாதியில் தோல் மஞ்சள் நிறமாகத் தோன்றுவதற்குக் காரணம், ரத்தத்தில் பிலிரூபின் என்ற வர்ணப் பொருள் இயற்கைக்கு அதிகமாகத் தென்படுவதுதான்.

இரண்டு இருதயத் துடிப்புகளுக்கு இடையில் உள்ள நேரத்தில் மகா தமனியிலும், அதன் கிளைகளிலும் (அதாவது தமனிகளிலும்) ரத்தம் முழுவதும் வடிவதில்லை. ரத்தம் பிசுபிசுப்பாயிருப்பதாலும் வரவர மிகக் குறுகிய துவாரமுள்ள குழாய்களின் மூலமாகச் செல்வதாலும், அது சிரமம் இல்லாமல் சுலபமாகப் போக முடியாது. ஆகவே, ஒவ்வோர் இருதயத் துடிப்பின்போதும், அதிக அளவு ரத்தம் தமனிகளுக்குள் செல்லுகிறது. அவற்றுக்குள்

முன்பே ரத்தம் நிரம்பியிருக்கிறது. ஆகையால், தமனிகளின் சுவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே விரிவடைகின்றன. தமனிகளின் சுவர்களில் அப்போது ரத்தத் தினல் ஏற்படும் அமுக்கத்துக்கு ரத்த அழுத்தம் (Blood pressure) என்று பெயர். ஒரு குழாயில் உள்ள பாதரசத்தை எவ்வளவு மில்லி மீட்டர்கள் (Milli-metres) உயரம் இந்த ரத்த அழுத்தம் தூக்கி நிறுத்தும் என்று கணக்கிடுகிறார்கள். இருதயம் சுருங்குவதற்கு ஸிஸ்டோல் (Systole) என்று பெயர். விரிவதற்கு டயஸ்டோல் (Diastole) என்று பெயர். ரத்த அழுத்தம் ஸிஸ்டோலுக்கும் டயஸ்டோலுக்கும் வித்தியாசப்படுகிறது. ஸிஸ்டோலின் போது அதிகம்; டயஸ்டோலின் போது குறைவு. சாதாரணமாக, ஸிஸ்டோலின் போது, 110 முதல் 140 மில்லி மீட்டரும் டயஸ்டோலின் போது 70 முதல் 90 மில்லி மீட்டரும் ரத்த அழுத்தம் உயரும். இந்த அழுத்தத்தின் போது உடலில் உள்ள எல்லா அவயவங்களுக்கும் போதுமான ரத்தம் தமனிகளிலிருந்து கிடைக்கிறது. ஒருவரின் வயசு, உடல் நிலை, இருதய நிலைமை, தமனிகளின் நிலைமை இவற்றைப் பொறுத்து இந்த ரத்த அழுத்தம் மாறுகிறது. சாதாரணமாக, வயசு ஆக ஆக, ஸிஸ்டோலிக் அழுத்தமும், டயஸ்டோலிக் அழுத்தமும் அதிகரிக்கின்றன.

(9) உள்ளங் கால், உள்ளங்கை இவற்றில் உள்ள மேல் தோலின் கனம் ஓர் அங்குலத்தில் இருபதில் ஒரு பங்கு. மற்ற இடங்களில் ஓர் அங்குலத்தில் இருநூறில் ஒரு பங்கு கனம். தோல்தான் உடலிலேயே பெரிய உறுப்பு (Organ). தோலில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன: (1) மேல் தோல், (2) உள் தோல். மேல்தோலில் மால்பீஜியன் அடுக்கு இருக்கிறது. இந்த அடுக்கில் வர்ணப் பொருள்கள் (பிக்மெண்ட்ஸ்) இருக்கின்றன. இந்த வர்ணங்களின் நிறம், குணம், அளவு இவற்றைப் பொறுத்தது தோலின் நிறம். வெள்ளைக்காரர்களின் தோலில் குறைவாகவும், நீக்ரோக்களின் தோலில் அதிகமாகவும் இவை தென்படுகின்றன. நோயற்ற தோல் கிட்டத்தட்ட ஊதா நிறமாக இருக்கும். இதற்கு வர்ணப் பொருள்கள் காரணம் அல்ல; உள் தோலில் இருக்கும் ரத்தக்குழாய்களில் உள்ள ரத்தம் மேல்தோலின் வழியாகத் தெரிவதுதான் காரணம். இருதயந்தான் முகத்தின் தோலுக்கு ரத்தத்தை அனுப்புகிறது. ஒருவன் பயந்தவுடன் மூளையிலிருந்து இருதயத்துக்குச் செல்லும் நரம்புகள், ரத்த ஓட்டத்தைப் பாதிக்கின்றன. ஆகையால், முகத்தின் தோலுக்கு அடியில் செல்லும் ரத்தக் குழாய்களில் ரத்தம் செல்லுவது உடனே நின்று விடுகிறது. எனவேதான் பயந்தவுடனே ஆபத்துக் காலங்களிலோ முகம் வெளுத்துவிடுகிறது. சிறிது நேரம் கழித்து ரத்தம் ஓட ஆரம்பித்தவுடன், முகம் பழைய நிறத்துக்கு வந்துவிடுகிறது. உடலில் மச்சங்கள் உண்டாவதற்குக் காரணங்கள் இவை: (1) கருப்பையில் சிசு வளரும்போது, தந்துகிகள் என்ற ரத்தக் குழாய்கள் நன்ருக வளராமல், நொந்துபோவதால், சிவப்பு மச்சங்கள் உண்டாகும்; (2) சில நிற அணுக்கள் ஒரே இடத்தில் அதிகமாகக் கூடுவதால், பச்சை அல்லது வேறு நிற மச்சங்கள் உண்டாகலாம்.

சில குழந்தைகள் நிற அணுக்கள் இல்லாமல் வெள்ளையாகப் பிறக்கும். இது வியாதியல்ல. இவற்றுக்குச் செம்பட்டை மயிர் இருக்கும். வெளிச்சத்தைப் பார்த்தால் இவற்றின் கண் கூசும்.

மயிர், நகம், மேல் தோலில் உண்டாகும் இறந்து போன கண்ணறைகள் (Cells) - இவற்றைத் தோலின் வெளிப்புறவளர்ச்சி என்று கூறலாம். குறிப்பிட்ட காலம் வரைக்குந்தான் மயிருக்கு வளர்ச்சி ஏற்படுகிறது. பிறகு விழுந்துவிடும். அந்த இடத்தில் புதிய மயிர் தோன்றும். நகத்தின் வளர்ச்சிக்கு எல்லையே இல்லை. ஒரு நாளில் நகம் 0.000046 அங்குலம் வளர்கிறது. தலைமயிரோ 24 மணி நேரத்தில் 0.01714 அங்குலம் வளர்கிறது; மனிதனின் தலைமயிர்

ஒரு மாதத்தில் சுமார் அரை அங்குல நீளம் வளர்கிறது. கத்தி படாமலும் தேய்மானம் இல்லாமலும், மயிரை முற்றும் வளர விட்டால், சாதாரணமாக 26 அங்குல நீளம் வரை வளரும். குளிர் காலத்தைக் காட்டிலும் வெயில் காலத்தில் தான் மயிர் அதிகம் வளர்கிறது.

தலையில் இருக்கும் மயிர்களின் எண்ணிக்கை அவரவர்களின் தேக சுபாவம், தோற்றம் இவற்றைப் பொறுத்தது. 30,000 முதல் 1,60,000 மயிர்கள் வரையிலும் இருக்கும். அழகுள்ள ஒரு ஸ்திரீயின் தலையில் 1,40,000 முதல் 1,60,000 மயிர்கள் வரையில் இருக்கும்; இவற்றின் சராசரி நீளம் மூன்றடி இருக்கும். 6 அடி கூடச் சில சமயம் வளர்வதுண்டு. ஆனால் இது துர்லபம். மூன்றடி என்று வைத்துக்கொண்டாலே ஓர் அழகியின் தலைமயிர்களையெல்லாம் ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிக்கு ஒட்டவைத்து அளந்து பார்த்தால், அதுவே சுமார் 70 மைல் நீளம் போகும். ஆகவே, ஒரு ஸ்திரீ 70 மைல் நீளமுள்ள தலைமயிரைச் சுமந்து செல்லுகிறாள். மயிருக்குள்ளே அநேக வாயுக் குமிழிகள் இருப்பதால்தான், அது உஷ்ணத்தைக் கடத்துவதில்லை.

மயிர்களை (1) நேர்மயிர், (2) அலைபோல் வளைந்துள்ள மயிர், (3) சுருட்டை மயிர், (4) கட்டை மயிர் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். மயிர்களின் வகைகளைக் கொண்டே மனித இனத்தையும் பிரித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். வட அமெரிக்க இந்தியர், சீன தேசத்தவர், மஞ்சள் நிறத்தவர் எல்லாரும் நேர்மயிர் உடையவர்கள். இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் வெள்ளையர். நீக்ரோக்களுக்குச் சுருட்டை மயிர். ஆஸ்திரேலியாவில் உள்ள ஆதிவாசிகளுக்குக் கட்டை மயிர்.

சாதாரணமாக, மயிர் கறுப்பு நிறமாக இருக்கும்; மற்ற நிறங்கள் அபூர்வம். அலைபோல் வளைந்துள்ள மயிர் எல்லாம் மஞ்சள் அல்லது பழுப்பு அல்லது சிவப்பு நிறமாக இருக்கும். பாக்கி வகை மயிர்கள் எல்லாம் கறுப்பாகத்தான் இருக்கும்.

தலை மயிர்களின் கண்ணறைகளில் (செல்) வர்ணப் பொருள்கள் இருக்கின்றன. வயசு ஆக ஆகக் கண்ணறைகளுக்கு வர்ணப் பொருள்களை உண்டு பண்ணும் சக்தி போய்விடுகிறது. ஆகையால், மயிர்கள் நிறமற்றோ வெளுத்தோ போய் விடுகின்றன. இதைத்தான் நரை மயிர் என்கிறோம். அநேகமாக வயசு ஆனால்தான் மயிர் வெள்ளையாகிறது. நரம்பு மண்டலமும், மயிரின் நிறம் மாறுவதற்குக் காரணம். மூளைக்கு அதிக வேலை கொடுப்பவர்களுக்கும் சதா யோசனை செய்பவர்களுக்கும் எதற்கும் பயப்படுகிறவர்களுக்கும் சீக்கிரம் மயிர் நரைத்துவிடுகிறது. வம்ச வாகுங்கூட நரைக்கு ஒரு காரணம். உணவுப் பொருள்களில் வைட்டமின் 'பி' இல்லாவிட்டாலும் மயிர்கள் நிறத்தை இழந்து விடுகின்றன. மற்ற இடங்களைக் காட்டிலும் தலையில் உள்ள மயிர்கள்தான் சீக்கிரம் நரைக்கின்றன.

ஒரு மயிரின் சராசரி வயசு இரண்டு முதல் நான்கு ஆண்டுகள். மாதம் ஒன்றுக்கு ஒரு மனிதனின் தலையிலிருந்து சராசரி நூற்றிருபத்தைந்து மயிர்கள் உதிர்கின்றன. தலைமயிரை வாரி விட்டுக்கொள்வதற்காகத் தண்ணீர் தேய்ப்பது மிகவும் கெடுதலான பழக்கம். தலை அகாலத்தில் வழுக்கை விழுவதற்கு அதுவும் ஒரு காரணம் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். அதிக மூளையும் புத்திசாலித்தனமும் உள்ளவர்களுக்கு வழுக்கை சீக்கிரம் விழுந்துவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். வழுக்கை விழுந்தவர்கள் எல்லாருமே புத்திசாலிகள் ஆகிவிடமாட்டார்கள் என்பதையும் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

மயிர் விழுந்து, தலை வழுக்கை ஆவதற்கு முக்கியமான காரணம் வம்ச வாகுதான்; சில சமயம் வியாதிகளும் மயிர்களை உதிர்த்துவிடும். ஆனால், திரும்ப முளைத்துவிடலாம். வம்ச குணமாக இருந்தால் தலை வழுக்கை ஆவதைத் தடுக்க முடியாது. எப்படிப்பட்ட

மருந்தா யிருந்தாலும், மயிர் வளர்ச்சியை உண்டுபண்ண முடியாது. பெண்களைவிட ஆண்களிடந்தான் வழுக்கைத் தலை அதிகமாகத் தென்படுகிறது. தலை மயிர் குறைவாக இருப்பவர்களுக்கு உடலில் அதிக ரோமக் கட்டு இருக்கிறது.

ஒவ்வொரு மயிரிலும் மிக நுட்பமான கண்ணறைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொருவர் மயிரிலும் அலாதி மோஸ்தரில் அமைந்திருக்கின்றன. விரல் ரேகை எப்படி ஆளுக்கு ஆள் மாறுகிறதோ அப்படியே ரோமமும் மாறுபடுகிறதாம். பத்துக் கோடிப் பேரைப் பார்த்தால், அவர்களில் இரண்டே இரண்டு பேருடைய ரோமங்கூட ஒன்றுபோல ஒன்று இருப்பதில்லையாம். இதனால் ரோமத்தைக் கொண்டுகூட நிபுணர்கள் துப்புக் கவனிக்கிறார்கள்.

நல்ல நிலையில் உள்ள உடல் இரண்டரைப் பவுண்டு தண்ணீரையும் ஒன்பது கிராம் கரியமில வாயுவையும் ஒவ்வொரு நாளும் வியர்வைத் துவாரங்களின் வழியாக வெளியேற்றுகிறது. வியர்வை என்பது 99 பங்கு தண்ணீரும் ஒரு பங்கு திடப்பொருள்களும் கொண்டது. அடித்தோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் குழாய் நுனிகளே மேல் தோலில் உள்ள வியர்வைத் துவாரங்களாகத் தென்படுகின்றன. உள்ளங்கையில் ஒவ்வொரு சதுர அங்குலத்துக்கும் 3,000 வியர்வைச் சுரப்பிகள் இருக்கின்றன. கழுத்திலும் முதுகிலும் ஒரு சதுர அங்குலத்துக்கு 400, பாக்கி இடங்களில் ஒரு சதுர அங்குலத்துக்கு 2,000 இப்படி அமைந்திருக்கின்றன. உடல் முழுவதும் 25 லட்சம் வியர்வைச் சுரப்பிகள் இருக்கின்றன. வியர்வைச் சுரப்பிகளின் ஒவ்வொரு குழாயும் கால் அங்குல நீளம். அவற்றில் ஒன்றின் நுனியோடு மற்றொன்றின் நுனியை ஒட்ட வைத்தால் 10 மைல் நீளக் குழாய் கிடைக்கும்.

ஒரு மனிதனின் உடல்மீது முத்து வெள்ளையையோ வார்னிஷையோ பூசி வைத்துவிட்டால், வியர்வைத் துவாரங்கள் எல்லாம் அடைபட்டு ஐந்து மணி நேரத்தில் இறந்து விடுவான்.

அடித்தோலின் மேல்பாகத்தில் ஐந்து லட்சம் உணர்ச்சி மொட்டுக்கள் (ஸென்ஸாரி பட்ஸ்) இருக்கின்றன. இதன் காரணமாகத் தோல் ஓர் உணர்ச்சி உறுப்பாகப் பயன்படுகிறது. விரல்களின் நுனி, நாக்கின் நுனி, முகம் இங்கெல்லாம் சுரணை உணர்ச்சி அதிகம். காரணம் இந்த இடங்களில் உணர்ச்சி மொட்டுக்கள் அதிகம். முதுகுப் பக்கத்தில் குறைவு. தொட்டாலும் தெரியாது. இவற்றைத் தவிர உஷ்ணத்தை அறிந்துகொள்ளும் ஸ்தானங்கள் 30,000, குளிர்ச்சியை உணரும் ஸ்தானங்கள் 2,50,000 இவையும் தோலில் இருக்கின்றன.

நாம் எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது; தோலே இயற்கையில்

தோல்



ஒரு வித எண்ணெய்ப் பசையைச் சுரக்கிறது.

(10) மனித உடலின் உஷ்ண நிலை எப்போதும் 98.4 டிகிரி பாரன்ஹீட். அதாவது, 36 ஸெண்டி கிரேட். எப்படி யிருந்தபோதிலும் மனித உடலின் உஷ்ணநிலையில் மாறுதல் ஏற்படுவதில்லை. குளிர்ந்த ஆர்க்டிக் பிரதேசமானாலும் சரி, வறண்ட அதி உஷ்ணமுள்ள ஸஹாரா பாலைவனமானாலும் சரி, மனிதனின் உடல் உஷ்ணநிலை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இந்த உடல்நிலை ஒரே மாதிரி இருப்பதற்குக் காரணம் நமது உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளும் அவற்றோடு சம்பந்தப்பட்டிருக்கும் ரத்தக் குழாய்களும் நரம்புகளுந்தான். கடின வேலை செய்வது, கோடைக் காலத்தில் வியர்த்துக் கொட்டுவது, குளிர்காலங்களில் நடுக்குவது இந்த நிலைகளில் எல்லாம் தன் உஷ்ணத்தை ஒரே சீராக வைத்திருப்பதற்காக உடல் கையாளும் உபாயங்கள் இவை.

கோடைக் காலத்தில் அதிகமாகப் பனிக்கட்டி சாப்பிட்டால், குளிர்ச்சிக்கு மாறாக அதிக வெப்பந்தான் உடலில் உண்டாகும்.

அக்குளில் தெர்மாமீட்டரை வைத்தால், 98.4 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணநிலை இருப்பது தெரியும். நாக்குக்கு அடியில் வைத்தால் 98.6 டிகிரி பாரன்ஹீட் இருக்கும். 98.4 டிகிரி பாரன்ஹீட்டிலிருந்து 98.6 டிகிரி பாரன்ஹீட் வரையில் இருப்பதுதான் உடல் நல்ல நிலையில் இருப்பதற்கு அறிகுறி. இதில் ஏதாவது மாறுபட்டால் உடம்பில் ஏதோ அசௌகரியம் என்று தெரிந்துகொள்ளலாம்.

98.6 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேலும் 97.3 டிகிரி பாரன் ஹீட்டுக்குக் கீழும் உஷ்ணநிலை போனால், உடம்பில் கோளாறு இருப்பதைக் குறிக்கிறது.

100 டிகிரி முதல் 105 டிகிரி= நல்ல ஜுரம்.

105 டிகிரி முதல் 108 டிகிரி= கவலைக்கிடம்.

108 டிகிரி முதல் 109 டிகிரி= யமன் பாசக்கயிறு வீசிவிட்டான் என்று அர்த்தம்.

உடலின் உஷ்ண நிலையில் ஒவ்வொரு டிகிரியும் ஏற ஏற நாடித் துடிப்பிலும் பத்து அதிகரிக்கும் என்பது முன்பே தெரிந்த விஷயந்தான்.

வாய்ப்பும் வெற்றியும்

காலேஜ் பையன்களுக்குப் பிரசங்கம் செய்ய வந்தார் வெற்றி கண்ட ஒரு வியாபாரி.

''ஒரு வாய்ப்புக் கிடைத்தால் உடனே துள்ளி எழவேண்டும். இதுதான் வெற்றிக்கு வழி'' என்று அவர் சொன்னார்.

''ஆனால், வாய்ப்பு எப்போது கிட்டுகிறது என்பதை நாம் எப்படி அறிவது?'' என்று ஒரு மாணவன் கேட்டான்.

''எந்நேரமும் துள்ளி எழுந்துகொண்டே இரு; அவ்வளவுதான்'' என்றார் வியாபாரி.

—பி. ஜி. செர்ரி

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

தி ஏஷியாடிக் கவர்ன்மெண்ட் செக்யூரிடி பயர் அண்ட் ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு உட்பட்டது)

●

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
"பிருத்வி பில்டிங்ஸ்",
கெம்பகௌட ரோட், பெங்களூர் ஸிடி.

தலைமை ஆபீஸ்:
"நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்",
ஐந்தாவது மாடி, 362, நேதாஜி ரோட், சென்னை - 1.
போன் நம்பர்: 4710

●

செலுத்தப்பட்ட மூலதனம்.....ரூ. 10 லட்சம்
மொத்த ஆஸ்திகள்..........ரூ. 20 லட்சத்துக்கு மேல்

நெருப்பு, கப்பல், மற்றும் வேறு வகை ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்களை நடத்துகிறது.

ஏஷியாடிக் பூரணப் பாதுகாப்பு அளிக்கிறது.

வாழிய செந்தமிழ் வாழ்க நல் தமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு

மலிவு விலையில்

சக்தி புத்தகங்கள்

மகாகவி பாரதியார் காவியங்கள்		ரூ. 1.50
சூரிய நமஸ்காரம்	திருவேதி	1.00
எமர்சன் கட்டுரைகள்		1.00
இந்தியருக்கு	டால்ஸ்டாய்	1.00
செல்வம்	க. சந்தானம்	1.00
ராஜ்யம்	,,	1.00
கூண்டுக்கிளி	ஹ. சட்டோபாத்யாய	1.00
புறநானூறும் தமிழரும்	வையாபுரிப் பிள்ளை	1.00
அமெரிக்கக் கதைகள்	ஸ்டீன்பெக்	1.00
முத்ராராக்ஷஸம்	விசாக தத்தர்	1.50
அபேதவாதம்	ராஜாஜி	1.00
சக்தி பிறக்குது	சுரபி	0.35
கோதாவரி	லக்ஷ்மி	0.35
எருவும் எரு இடுதலும்	சுந்தரம்	1.25
பணம்	எமிலி பேர்ன்ஸ்	1.50

மார்க்சிஸம் என்றால் என்ன?	..	ரூ. 1.0
சிவப்புக் குதிரைக் குட்டி	ஸ்டீன்பெக்	1.0
அணுவை அறிக	நா. கி. நாகராஜன்	1.50
பாரதியார் சரித்திரம்	செல்லம்மா பாரதி	2.0
மகாகவி பாரதியார்	வ. ரா.	2.0
வாசந்தி	கதைத் தொகுப்பு	1.0
தர்ம ரட்சகன்	தொகுப்பு நூல்	1.0
ஜீவப் பிரவாகம்	..	1.0
திரிவேணி	..	1.0
யாத்திரை	..	1.0
கம்பன் என் காதலன்	..	1.0
காவியக் காதல்	..	1.0
இரண்டு பெண்கள்	..	1.0
ரோஜாப் பூ	..	1.0

உயர்ந்த பதிப்புகள்

காய்கறித் தோட்டம்	மு. அருணாசலம்	ரூ. 5.50
குழந்தைமை ரகசியம்	மாண்டிசோரி	5.00
ரகுநாதன் கதைகள்	ரகுநாதன்	3.75
திருமலை முருகன் பள்ளு	மு. அருணாசலம்	2.50
இருளின் வலிமை	டால்ஸ்டாய்	2.00
டால்ஸ்டாய் கதைகள் I	..	2.00
டால்ஸ்டாய் கதைகள் II	..	2.00
டால்ஸ்டாய் கட்டுரைகள்	..	2.00

(தபால் செலவு தனி)

வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	ரூ. 2.0
ஹிந்து பத பாதுஷாஹி	சாவர்க்கர்	3.7
லெனின் பிறந்தார்	ராமனுதன்	3.5
அழகிரிசாமி கதைகள்	அழகிரிசாமி	3.7
மாலைக்கு மாலை	யாழ்ப்பாணன்	2.5
சுந்தரி	வ. ரா.	5.0
வான வில்	ருஷ்ய நாவல்	4.0
ஏசுநாதர் போதனை	குமரப்பா	1.5
ஏரி குளங்களைச் செப்பனிடுவோம்		0.2
மாய விளக்கு	வை கோ.	3.0

(தபால் செலவு தனி)

மலிவுப் பதிப்பு நூல்கள்: 1957-இல் வெளி வருபவை: பாரதியார் கட்டுரைகள்: ரூ. 1.50 பாரதியார் வசனங்கள்: ரூ. 1.50. திருக்குறள் பரிமேலழகர் உரை: ரூ. 1.50. இனி நா... செய்யவேண்டுவது யாது? டால்ஸ்டாய்: ரூ. 1.50., வேதநாயகம் பிள்ளை - பிரதா... முதலியார் சரித்திரம்: 1.50., ராஜம் அய்யர் - கமலாம்பாள் சரித்திரம்: ரூ. 1.50 வ. ரா. - வாழ்க்கைச் சித்திரம்: ரூ. 1.50 இன்னும் பல.

உயர்ந்த பதிப்புகள்: 1957-இல் வெளி வருபவை: போரும் வாழ்வும்: டால்ஸ்டாய் (ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் தமிழாக்கம்) சுமார் 2200 பக்கங்கள் - 3 பாகம் ரூ. 24. ருஷ்ய நாட்டுக் கதைகள் (படங்களுடன்) ரூ. 3., உக்ரேனிய நாட்டுக் கதைகள் ரூ. 4., அமெரிக்க நாட்டுக் கதைகள்: சுமார் விலை ரூ. 2., தமிழ் நாட்டுக் கதைகள் ரூ. 2., இன்னும் பல.

சக்தி காரியாலயம்
1/142, மவுண்டு ரோடு,
ஆயிரம் விளக்கு - சென்னை